
இந்தோனேசியாவில் நில அதிர்வு
பக்கம் 09


தீவிரவாதத்தை ஒழிக்க இந்தியா உறுதி
பக்கம் 10


பாலமுனையில் குடிதண்ணிர்
பக்கம் 15


நரைனின் மிரட்டல் பணியாத பஞ்சாப்
பக்கம் 23

விலை ரூபா 20.00

www.onlineuthayan.com

பக்கங்கள்: 26

# உதயன்

சுடர் 27
கதிர் 143

வள்ளுவர் ஆண்டு 2043 சித்திரை 05 செவ்வாய்க்கிழமை (17/04/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

## முகாம் மக்களைச் சந்திக்க அனுமதியுங்கள்; இலங்கையிடம் இந்தியா அவசர கோரிக்கை



கொழும்பு, ஏப்.17
வன்னியில் இறுதிப் போரின்போது இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள மனிக்பாம் நலன்புரி முகாமுக்கு எம்மை எந்த வித கட்டுப்பாடுகளும் இன்றிச் சென்று பார்வையிட அனுமதிக்குமாறு இலங்கை அரசிடம் கோரியுள்ளதாக இலங்கை வந்துள்ள இந்திய நாடாளுமன்றக் குழுவின் தலைவி சுஷ்மா சுவராஜ் தெரிவித்தார்.

இந்தியாவில் இருந்து இலங்கைக்குப் புறப்படுவதற்கு முன்னர் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழகக் கட்சிகளான அ.தி.மு.க., தி.மு.க. ஆகியவை தமது உறுப்பினர்களை விலக்கிக் கொண்ட நிலையில் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு நேற்றுமாலை கொழும்பை வந்தடைந்தது. இந்தக் குழு 04

## பரிந்துரைகளை செயற்படுத்த புதிய பிரிவு

கொழும்பு, ஏப்.17
கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துவதற்கான ஒழுங்கமைப்புகளை மேற்கொள்வதற்கு அரசு தனியான பிரிவு ஒன்றை அமைக்கவுள்ள 04

# மேற்கு நாடுகளின் தூதுவர்கள் கொழும்பு மீது கடும் அதிருப்தி

### அரசின் தொடர் விமர்சனங்களால் விசனம்

கொழும்பு, ஏப்ரல்.17
மேற்குலகை நாடுகள் தொடர்பாக இலங்கை அரசு அண்மைக்காலமாக வெளியிட்டு வரும் குற்றச்சாட்டுகள், விமர்சனங்களால் கொழும்பில் உள்ள மேற்குலகநாடுகளின்தூதுவர்கள் இலங்கை அரசு மீது கடும் அதிருப்தியில் உள்ளதாக இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அமைச்சர்கள், அரச நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் மேற்குலகு மீது தொடர்ச்சியாகப் பகிரங்கமாகக் குற்றச்சாட்டுகளையும் விமர்சனங்களையும் வெளியிட்டு வருகின்றமையே மேற்குத் தூதுவர்களின் சீற்றத்துக்கும் அதிருப்திக்கும் காரணம் என்று கூறப்படுகின்றது.

அரசின் இந்தச் செயற்பாடுகள்தொடர்பாக மேற்குலகத்தூதுவர்கள் இலங்கை வெளிவிவகாரஅமைச்சுக்கும் சுட்டிக் காட்டியுள்ளதாக ராஜதந்திர வட்டாரங்கள் மேலும் கூறின.

மேற்கு நாடுகளில் உள்ள சில இலங்கைத் தூதரகங்களை மூடவுள்ளதாக அரசு வெளியிட்ட கருத்தே தூதுவர்களைச் சீற்றத்தின் உச்சத்துக்குக் கொண்டு போயுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதுகுறித்து வெளிவிவகார அமைச்சின் உயர் அதிகாரி ஒருவருடன் பேசிய மேற்கு நாடு ஒன்றின் தூதுவர், தூதரகங்களை மூடுவதால் பின்னடைவை எதிர்நோக்கப் போவது நாங்கள் அல்ல, நீங்கள் தான் என்று கொழும்பில் பிரபல ஹோட்டல் ஒன்றில்நடைபெற்ற புத்தாண்டு 04

## நவம்பரில் இலங்கைக்கு மேலும் ஒரு தலையிடி

### மனித உரிமை மீளாய்வு ஜெனிவாவில்

ஜெனிவா, ஏப்.17
ஐ.நா மனித உரிமைகள் சபையில் எதிர்வரும் நவம்பர் மாதம் மீண்டும் இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பில் சர்வதேசத்தின் கவனம் திரும்பும் என்று ஜெனிவா தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐ.நா மனித உரிமைகள் சபையில் எதிர்வரும் ஒக்ரோபர் மற்றும் நவம்பர் மாதங்களில், உலக நாடுகளின் மனிதஉரிமைகள் நிலை பற்றிய மீளாய்வு இடம்பெறவுள்ளது. இந்த மீளாய்வில் இலங்கை தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்படும் என்று தெரியவருகிறது.

இந்நிலையில்,இதற்காக இலங்கை தொடர்பான அறிக்கைகளைச் சமர்ப்பிக்குமாறு ஐ.நாவின் பல்வேறு அமைப்புகள் மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளுக்கு ஏப்ரல் 23ஆம் திகதி வரை கால அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது. இதனை அடுத்து அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகளில் அந்த அமைப்புக்கள் மும்முரமாக ஈடுபட்டுள்ளன.

இந்த அறிக்கைகளுக்குப் பதிலளிப்பதற்கு இலங்கைக்கு எதிர்வரும் ஜூலை 23ஆம் திகதி வரை கால அவகாசம் 04

## மஹிந்தவிடம் கேள்வியெழுப்புக இந்திய எம்.பிக்களிடம் மனோ

### 13 ஆவது திருத்தச் சட்டம், நல்லிணக்க ஆணைக்குழு விடயங்கள் குறித்து



கொழும்பு, ஏப்.17
இந்திய - இலங்கை கூட்டுத் தயாரிப்பான 13 ஆம் திருத்தத்தையும், இலங்கையின் சொந்தத் தயாரிப்பான கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சிபார்சுகளையும் குப்பையில் போட்டது ஏன் என்று இலங்கை ஜனாதிபதியிடம் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு கேள்வி எழுப்ப வேண்டும். சுதர்சன நாச்சியப்பன் இது தொடர்பில் கூடிய அக்கறை காட்டவேண்டும். 04

## கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சராக பொது வேட்பாளர்

### இரு முஸ்லிம் கட்சிகள் அவசர ஆலோசனை

கொழும்பு, ஏப்.17
கிழக்கு மாகாண முதலமைச்சராக கிழக்கைச் சேர்ந்த ஒருவரே நியமிக்கப்படவேண்டுமென மு.காவின் பிரதிச் செயலாளர் நாயகம் சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் பகிரங்கமாகக் கருத்துத் தெரிவித்திருக்கும் நிலையில், இந்த சர்ச்சைக்கு வலு சேர்க்கும் வகையில் பொது வேட்பாளர் ஒருவரைக் களமிறக்க அவசர முஸ்தீபுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முஸ்லிம் கட்சிகள் இரண்டு இது விடயமாகத் தீவிர மந்திராலோசனை நடத்தி கிழக்கைச் சேர்ந்த ஒருவரையே இரு கட்சிகளின 04

## மிதிவெடியில் சிக்கி இரு இளைஞர்கள் படுகாயம்

யாழ்ப்பாணம்,ஏப்.17
மிதிவெடியில் சிக்கி இளைஞர் இருவர் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கிளாலியில் நேற்றுக் காலை இடம்பெற்றது. சம்பவத்தில் கொழும்புத்துறை உதயபுரத்தைச் சேர்ந்த சி. பேனாட் 04

## தமிழரின் நியாயமான கோரிக்கைகள் உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும்

### அதற்கு இந்தியாவின் அழுத்தம் அவசியம் என்கிறது தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்

கொழும்பு, ஏப்.17
தமிழ்மக்களின் நியாயமான கோரிக்கைகளை அரசு உடன் நிறைவேற்றி பிரதேச சபைகளுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் முழுமையான அதிகாரங்களை வழங்க வேண்டும் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் வலியுறுத்தியுள்ளது.

வடக்கு மக்களின் வாழ்க்கையைக் கட்டியெழுப்புவதற்கு இந்தியா உதவவேண்டும். உதவிகளைப் பெற்றுக் கொண்டு மக்களுக்கு அரசு நீதியை வழங்காவிட்டால் இலங்கையை இந்தியா அழுத்தவேண்டும் என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

மாகாண 04

### அமைச்சர் ஹக்கீம் கட்டார் பயணம்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம் ஐந்து நாள் உத்தியோகபூர்வ பயணமொன்றை மேற்கொண்டு ஞாயிற்றுக்கிழமை கட்டாருக்குப் பயணமானார். கட்டார் நீதி அமைச்சர் ஹஸன் பின் அப்துல்லா அல் கனீமின் அழைப்பை ஏற்று பயணம் மேற்கொண்டுள்ள அமைச்சர் ஹக்கீம், நீதித்துறை மற்றும் இரசாயன பகுப்பாய்வு போன்றவை தொடர்பான முக்கிய பேச்சுக்களில் ஈடுபடவுள்ளார். இதன் போது, இரு தரப்பு உறவுகள் குறித்தும் பரஸ்பரம் ஆராய நீதி அமைச்சருடன் உயர்மட்ட தூதுக்குழுவொன்றும் பயணம் மேற்கொண்டுள்ளது.

### இலங்கை – பலஸ்தீனம் இடையே இரு ஒப்பந்தங்கள்

இலங்கைக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையில் இரண்டு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. பலஸ்தீன ஜனாதிபதிக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் நேற்று அலரி மாளிகையில் இடம்பெற்ற சந்திப்பை அடுத்து இந்த ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. பலஸ்தீனம், இலங்கை வெளிவிவகார அமைச்சுடன் அரசியல் ஆலோசனை தொடர்பில் ஒப்பந்தம் ஒன்றை கைச்சாத்திட்டுள்ளது. வரி அறவிடலைத் தவிர்த்தல், வருமானமாகக் கிடைக்க வேண்டிய வரிக்காக செலுத்தப்பட வேண்டிய நிதித் தொகை தொடர்பில் மற்றுமொரு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

### பலஸ்தீனத்தில் தனிநாடு அமைவதற்கு இலங்கை ஆதரவளிக்கும்

பலஸ்தீன தனி நாடு அமைவதற்கு இலங்கை தொடர்ந்து ஆதரவளிக்கும் என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.இலங்கை வந்துள்ள பலஸ்தீன ஜனாதிபதி மற்றும் வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ரெயிட் என்.ஏ. மலிக் உள்ளிட்ட குழுவினருடன் ஜி.எல். பீரிஸ் ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்துப் பேசினார். இதன் பின்னர் ஊடகவியலாளருக்கு கருத்து வெளியிட்ட பீரிஸ் மேற்படி விடயத்தை தெளிவுபடுத்தினார்.

### வாதுவ பொலிஸில் சந்தேக நபர் உயிரிழப்பு

கஞ்சா கடத்திய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு வாதுவ பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் மூன்று பிள்ளைகளின் தந்தையான, வாதுவ தல்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த சந்திரசிறி தசநாயக்க (வயது-42) என்பவராவார். மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வந்த இவர், நேற்றுமுன்தினம் தொழிலுக்குச் செல்ல முற்பட்ட போது பொலிஸார் கைது செய்தனர். அதிகாலை 5 மணியளவில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர், காலை 7 மணிக்கே பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார் எனக் கூறப்படுகிறது. உயிரிழந்த வரின் சடலத்தில் இரத்தக் காயங்கள் காணப்படுவதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தமிழர் மறுவாழ்வுக்கு இந்திய இராஜதந்திரம் அவசியம்

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்

புதுடில்லி,ஏப்.17

இலங்கைத் தமிழ் மக்களின் மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு தொடர்பில் இந்திய அரசு உரிய அரசியல் மற்றும் இராஜதந்திர முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என இந்திய கம்பியூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.

**யுத்தம் முடிவுக்கு வந்து 3 வருடங்களாகி விட்டபோதிலும், மோசமாகப் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாண மக்களின் வாழ்வாதாரத்துக்கான வசதிகள் செய்துகொடுக்கப்படவில்லை.**

கட்சியின் 20ஆவது காங்கிரஸில் இலங்கைத் தமிழ் மக்கள் தொடர்பாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மனித உரிமை மீறல்கள் பற்றிய சுயாதீன விசாரணை, பொறுப்புக் கூறுதல், தமிழர் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு என்பவற்றை இந்திய அரசு உறுதி செய்ய வேண்டும் என இத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

யுத்தம் முடிவுக்கு வந்து 3 வருடங்களாகிவிட்ட போதிலும், மோசமாகப் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாண மக்களை இலங்கை அரசாங்கம் இன்னும் பூரணமாக குடியேற்றவில்லை எனவும் அவர்களின் வாழ்வாதாரத்துக்கான வசதிகள் செய்துகொடுக்கப்படவில்லை எனவும் இந்தத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பெரும்பான்மைச் சிங்கள சமுதாயத்துடன் தமிழ் சிறுபான்மையினர் ஒற்றுமையாக, அமைதியாக வாழக்கூடிய ஒரு ஐக்கிய இலங்கை உருவாக வேண்டும் என கட்சி விரும்புவதாக இத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த)

# வடபகுதி மக்கள் தொடர்பில் இந்தியக்குழு ஆராயக்கூடாது

## எச்சரிக்கிறார் அமைச்சர் சம்பிக்க



கொழும்பு, ஏப்.17

இலங்கை வரும் இந்திய சர்வகட்சிகளின் நாடாளுமன்றத் தூதுக் குழுவினர் வடக்கு மக்களின் விடயங்களையோ நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் தொடர்பாகவோ ஆராயக் கூடாது என்று அமைச்சரும் ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

உள்நாட்டு விவகாரத்தில் இந்தியா தலையிட்டமையாலேயே இலங்கையில் யுத்தம் ஏற்பட்டது. இதனால் வடக்கு மற்றும் கிழக்கு உட்பட அனைத்து தமிழ் மக்களும் பாரியளவிலான அழிவுகளைச் சந்தித்தனர். இவ்வாறானதொரு பேரழிவுகளை மீண்டும் இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு இந்தியா உருவாக்க கூடாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்திய நாடாளுமன்றக் குழுவினரின் வருகையானது எந்த வகையிலும் உள்நாட்டின் தேசிய அரசியலை பாதிப்பதாக அமைந்துவிடக் கூடாது. ஏனெனில் இந்தியாவுக்கு இலங்கை விடயங்களில் தலையிட உரிமையோ அதிகாரமோ கிடையாது. இலங்கை ஒருபோதும் காஷ்மீர் விடயத்திலோ தமிழ் நாட்டு அரசியலிலோ தலையிட்டது இல்லை.

வன்னி மக்களின் விடயங்களை ஆராய்வதாகக் கூறி உள்நாட்டில் தேவையற்ற பிரச்சினைகளை ஏற்படுத்த இலங்கை வரும் நாடாளுமன்றக் குழு முயற்சிக்கக் கூடாது. நாட்டில் பெரும் பின்னடைவுகளை சந்திக்க மூல காரணமாக இருந்த புலிகளுடனான யுத்தம் ஏற்பட இந்தியாவின் தலையீடு முக்கியமானதாக அமைந்திருந்தது. இதனை அனைவரும் அறிவர்.

நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகள் என்பது உள்நாட்டு விவகாரம். இதனை ஆராய வெளிநாடுகள் முயற்சிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. எனவே இலங்கை வரும் இந்தியத் தூதுவர் குழு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் உள்நாட்டு விடயங்களில் தலையிடவோ அரசுக்கு அழுத்தங்களைக் கொடுக்கவோ முயற்சிக்க கூடாது -என்றார்.(த)

# தமிழ் அரசியல் கைதி மீது காலி சிறையில் தாக்குதல்

கொழும்பு, ஏப் 17

தமிழ் அரசியல் கைதியொருவர் மீது காலிச் சிறைச்சாலையில் சிங்களக் கைதிகள் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர் என தெரியவருகின்றது.

விடுதலைப்புலிச் சந்தேகநபர் என்ற போர்வையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மானிப்பாயைச் சேர்ந்த சுந்தரம்பிள்ளை சுபாஸ்கரன் (வயது -30) என்ற தமிழ் அரசியல் கைதியே இவ்வாறு தாக்குதலுக்குள்ளாகியுள்ளார்.

கடந்த சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் ஏனைய சிங்களக் கைதிகளால், குறித்த தமிழ் அரசியல் கைதி தாக்கப்பட்டதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயக மூர்த்தியிடம் முறையிடப்பட்டுள்ளது.

வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போது இராணுவத்திடம் சரணடைந்த இவர் காலி முகத்திடலில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் சூத்திரதாரியெனக் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

காலிச் சிறையில் தடுத்த வைக்கப்பட்டுள்ள ஒரே ஒரு தமிழ் அரசியல் கைதி இவர் எனவும் இவர் மீது, சிங்கள கைதிகள் உணவு கொடுக்காமை, குடிதண்ணீர் கொடுக்காமை போன்ற பல வன்முறைச் சம்பவங்களைத் தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்துள்ளனர். இவை தொடர்பில் சிறைச்சாலைக் காவலளர்களுக்கு இவர் தெரியப்படுத்தியும் அவர்கள் இதனை பொருட்படுத்தவில்லையெனக் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

இவர் தொடர்பான வழக்கு விசாரணைகள் எதிர்வரும் 19 ஆம் திகதி காலி நீதிமன்றில் நடைபெறவுள்ளன. இந்நிலையில் தன்னை வேறு சிறைச்சாலைக்கு மாற்றுமாறு தடுப்புக் காவலில் உள்ள நபர் குறித்த கோரிக்கை விடுத்துள்ளார். (த)



இரண்டுநாள் உத்தியோகபூர்வப் பயணம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ் நேற்றுத் திங்கட்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவை ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்து பேச்சு நடத்தினார். இதன்போது, பலஸ்தீன ஜனாதிபதிக்கு செங் கம்பள வரவேற்பளிக்கப்பட்டது.

# புத்தாண்டு விடுமுறையை நிராகரித்தார் பொன்சேகா

கொழும்பு, ஏப்.17

புத்தாண்டை முன்னிட்டு வழங்கப்பட்ட விடுமுறையை முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா நிராகரித்துள்ளார். புத்தாண்டை குடும்பத்துடன் கொண்டாடுவதற்காக சரத் பொன்சேகாவுக்கு ஒரு நாள் விசேட விடுமுறை வழங்கப்பட்டிருந்தது. எனினும் பொன்சேகா அந்த விடுமுறையை ஏற்றுக் கொள்ளவில்லை.

நன்னடத்தையுடன் செயற்படும் கைதிகளுக்கு ஒரு வார காலம் வரையில் விடுமுறை வழங்கப்படுவது வழமையாகும். எனினும், சரத் பொன்சேகாவுக்கு ஒரு நாள் விடுமுறை வழங்குவதற்குச் சிறைச்சாலை அதிகாரிகள் தீர்மானித்திருந்தனர்.

எனினும் இந்தக் கோரிக்கையை முற்று முழுதாகச் சரத் பொன்சேகா நிராகரித்திருந்தார் என அவரது மனைவி அனோமா பொன்சேகா தெரிவித்துள்ளார்.(த)

# முக்கியத்துவம் இழந்த இந்தியக் குழுவின் பயணம்

கொழும்பு, ஏப்.17

தமிழ்நாட்டின் முக்கியமான அரசியல் கட்சிகளான அ.தி.மு.கவும், தி.மு.கவும் விலகிக் கொண்ட பின்னர், இலங்கைக்கான பயணத்தை மேற்கொள்ளும் இந்திய நாடாளுமன்றக் குழுவின் பயண முக்கியத்துவம் குறைந்து போய் விட்டதாக இந்திய ஊடகங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

இலங்கைக்கு மேற்கொள்ளும் பயணத்தில் இருந்து முதலில் அ.தி.மு.கவும், பின்னர் தி.மு.கவும் விலகியிருந்தன.

இந்தநிலையிலேயே இந்தியக் குழுவின் இந்தப் பயணம் முக்கியத்துவத்தை இழந்து விட்டதாக இந்திய ஊடகங்கள் விமர்சித்துள்ளன.

இந்தநிலையில், இதுபற்றிக் கருத்து வெளியிட்டுள்ள தெற்காசிய விவகாரங்கள் தொடர்பான நிபுணர் வி.சூரியநாராயணன், தமிழ் நாட்டின் கவலைகள் உண்மையானது என்று கூறியுள்ளார்.

ஆனாலும் இதை ஒரு சுற்றுலாப் பயணமாக்க சுஷ்மா சுவராஜ் குழு அனுமதிக்காது என்று அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கிளிநொச்சி, வவுனியாவுக்கும் அவர்கள் சென்று பொதுமக்களுடன் கலந்துரையாட வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார். (த)

# 16 வயது சிறுமியுடன் ஹோட்டலில் தங்கியிருந்த 67 வயது ஆண் கைது

## விளக்கமறியலில் வைக்க உத்தரவு

வவுனியா, ஏப்.17

16 வயதான சிறுமியுடன் ஹோட்டலில் தங்கியிருந்தனர் எனக் குற்றச்சாட்டுக்குள்ளான 67 வயதான ஆணொருவரையும் ஹோட்டலில் தங்குவதற்கு அனுமதியளித்த குற்றச்சாட்டில் கைதான ஹோட்டல் உரிமையாளரையும் எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா நீதிவான் அலெக்ஸ்ராஜா ஞாயிற்றுக்கிழமை உத்தரவிட்டார்.

அத்துடன், குறித்த சிறுமியை வைத்திய பரிசோதனைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்குமாறும் நீதிபதி பணித்தார்.

இலங்கையைச் சேர்ந்த கனடாவை வசிப்பிடமாகக் கொண்ட 67 வயதான ஆணொருவரும் 16 வயதான சிறுமியும் வவுனியாவிலுள்ள ஹோட்டலொன்றில் தங்கியிருந்தபோது வவுனியா பொலிஸாரினால் கடந்த சனிக்கிழமை மாலை கைதுசெய்யப்பட்டனர். வயது வித்தியாசத்தை கவனிக்காது இவர்கள் இருவரையும் ஹோட்டலில் தங்குவதற்கு அனுமதியளித்த குற்றச்சாட்டில் ஹோட்டல் உரிமையாளர் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டார்.

இவர்கள் தந்தை, மகளெனக்கூறி ஹோட்டல் விருந்தினர் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளமை பொலிஸாரினால் கண்டறியப்பட்டதாகவும் இது குறித்துச் சந்தேகமடைந்த பொலிஸார், இவர்களிடம் விசாரணை மேற்கொண்டபோது தந்தை, மகள் உறவில்லையெனத் தெரியவந்ததாகவும் வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆணிடமிருந்து இலத்திரனியல் பாலியல் சாதனங்களும் மருந்துப் பொருள்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து கடந்த சனிக்கிழமை வவுனியா நோக்கி கனேடியப் பிரஜையுடன் குறித்த சிறுமியும் அவரது உறவினரொருவரும் வந்தனர் எனவும் குறித்த உறவினர் இடைவழியில் மீண்டும் யாழ்ப்பாணத்திற்கு திரும்பி விட்டார் எனவும், இந்த நிலையில் இவர்கள் இருவரும் வவுனியாவிலுள்ள ஹோட்டலொன்றில் தங்கியிருந்ததாகவும் வவுனியா பொலிஸார் கூறினர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 16 வயதான குறித்த சிறுமி தனது பெற்றோரை இழந்த நிலையில் குறித்த உறவினருடனையே வசித்து வந்துள்ளதாகவும், இவர்களுக்கான பண உதவியை இக்கனேடியப் பிரஜையே மேற்கொண்டு வந்ததாகவும் விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளதெனப் பொலிஸார் கூறினர்.

(த-400)

# புலிகளின் ஆதரவாளர்கள் நாட்டுக்கு எதிராக பரப்புரையாம்

## ஜனாதிபதி குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப் 17

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் இலங்கைக்கெதிராக பல்வேறு பரப்புரைகளை மேற்கொண்டு வருவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாகுளுகமுவ பிரதேசத்தில், விஹாரை ஒன்றின் தர்மசாலை அங்குரார்ப்பண வைபவத்தில் கலந்து கொண்டபோதே ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டைச் சீர்குலைக்கும் நோக்கில் பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பயங்கரவாதத்தை இல்லாதொழிக்க போர் முன்னெடுக்கப்பட்டது. பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டு நாட்டுக்கு சுதந்திரம் பெற்றுக் கொடுத்தோம். மேலும், புலி உறுப்பினர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டு, சமூகத்துடன் மீள இணைக்கப்பட்டுள்ளனர்.

எனினும், நாட்டை குழப்புவதற்குச் சில தரப்பினர் முயற்சி எடுத்து வருகின்றனர். இது தொடர்பில் மக்கள் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டியது அவசியமானது. நாட்டை பிளவுபடுத்த இடமளிக்கப்பட மாட்டாது- என்றார். (த)

### நாணய நிதிய கூட்டத்தில் இலங்கைப் பிரதிநிதிகள்

சர்வதேச நாணய நிதியத்தின் கூட்டத்தில் கலந்து கொள்ளவென இலங்கைப் பிரதிநிதிகள் சிலர் அமெரிக்கா சென்றுள்ளனர். சர்வதேச நாணய நிதியத்தின் கூட்டம் எதிர்வரும் ஏப்ரல் 20ஆம் திகதி தொடக்கம் 22ஆம் திகதி வரை அமெரிக்காவின் வாஷிங்டனில் நடைபெறவுள்ளது.

நிதித் திட்டமிடல் அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம உள்ளிட்ட குழுவினர் இலங்கையை பிரதிநிதித்துவப் படுத்தி வாஷிங்டன் சென்றுள்ளனர். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர் கொள்ளைகளால் அச்சத்தில் யாழ். மக்கள்

## கந்தரோடை, கொட்டடிச் சம்பவங்களால் பதற்றம்

*யாழ்ப்பாணம், ஏப்.17*

***யாழ். குடாநாட்டில் மீண்டும் துப்பாக்கி போன்ற பயங்கர ஆயுதங்களைக் காட்டி, அச்சுறுத்தி கொள்ளையிடும் சம்பவங்கள் அதிகரிக்கத் தொடங்கி உள்ளதால் குடாநாட்டு மக்கள் அச்சத்தில் உறைந்து போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.***

கந்தரோடை, கொட்டடி, யாழ். நகர் உள்ளிட்ட பகுதிகளில் கடந்த இரு வாரங்களில் ஆயுத முனையில் நகைகள், பணம் உள்ளிட்ட பெறுமதியான பொருள்களை கொள்ளையர்கள் அபகரித்துச் சென்றுள்ளனர். இது தவிர முன்னரெல்லாம் தனியே பொருள்களை மட்டும் கொள்ளையடித்து விட்டு செல்லும் இவர்கள் தற்போது தம்மை எதிர்ப்போரை ஈவிரக்கமின்றி தாக்கவும் தொடங்கியுள்ளனர். கந்தரோடையில் ஒரே இரவில் ஐந்து வீடுகளில் நடைபெற்ற தொடர் கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டவர்களின் முயற்சிக்கு தடையாக இருந்த குடும்பஸ்தர் மீது கொள்ளையர்கள் ஆத்திரம் கொண்டு பலமாக தலையில் கூரிய ஆயுதங்களால் தாக்கியுள்ளனர். இதனால் அவர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட வேண்டிய சூழல் ஏற்பட்டது.

இதேபோன்று அண்மையில் கொட்டடி சீனிவாசகம் வீதி மற்றும் கூழாவடி ஒழுங்கை, யாழ். நகர் மணிக்கூட்டு வீதி போன்ற இடங்களிலும் வீடுகளில் இருந்தோர் மீது தாக்குதல் நடத்தி விட்டே கொள்ளையர்கள் நகை, பணம் என்பவற்றை அபகரித்துள்ளனர்.

சில மாதங்களாக அமைதியாக இருந்த குடாநாட்டை இத்தகைய கொள்ளைச் சம்பவங்கள் மீண்டும் பீதியில் ஆழ்த்தியுள்ளன.

இதேவேளை, கந்தரோடை கொள்ளைச் சம்பவத்தின் போது பொலிஸாருக்கு தெரியப்படுத்திய போதும், அவர்கள் கொள்ளையர்கள் தப்பித்த பின்னரே அவ்விடத்துக்கு வந்து சேர்ந்துள்ளனர். இது பொது மக்களிடையே பல வித சந்தேகங்களை தோற்றுவித்துள்ளதுடன், தமது பாதுகாப்புக்குறித்த அச்ச நிலையையும் அவர்களிடத்தே உருவாக்கி உள்ளது.

எனவே மீண்டும் குடாநாட்டில் தலையெடுக்கத் தொடங்கியுள்ள கொள்ளைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த சிவில் பாதுகாப்புக் குழுக்கள், விழிப்புக்குழுக்கள் என்பவற்றை செயற்திறனோடு இயங்க வைப்பதே ஒரே வழி என்று பொது மக்கள் கருத்துத் தெரிவித்தனர். (ங- 86)

## முதற் கணவரை மறைத்த மனைவி இரண்டாவது கணவர் வழக்கு

யாழ்ப்பாணம், ஏப். 17

முதற் கணவர் இருக்கிறார் என்பதனை மறைத்து தன்னை ஏமாற்றித் திருமணம் செய்தார் என்று கூறி குறித்த பெண்ணுக்கு எதிராக அவரது இரண்டாவது கணவர் யாழ். விசேட குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸில் முறைப்பாடு செய்தார். அந்த வழக்கு யாழ். நீதிமன்றுக்கு விசாரணைக்கு வந்துள்ளது.

இந்த வழக்கு நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. ஆரம்ப விசாரணையின் பின்னர், பிரஸ்தாபப் பெண் தலா 10 ஆயிரம் ரூபா பெறுமதியான 2 ஆள்பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

31 வயதுடைய குறித்த கில்லாடிப் பெண் கொழும்பு உடப்புசல்லாவவையைச் சேர்ந்தவர். அங்கு அவர் ஏற்கனவே பதிவுத் திருமணம் செய்து இரண்டு பிள்ளைகளையும் பிரசவித்துள்ளார்.

இந்த நிலையில் அவர் யாழ்ப்பாணத்துக்கு வந்த போது அங்கு கோப்பாயைச் சேர்ந்த நபர் ஒருவரை பதிவுத் திருமணம் செய்தார். அவர்களுக்கு இப்போது இரண்டுமாதக் குழந்தை ஒன்றும் உள்ளது.

அதன் பின்னரே குறித்த பெண் ஏற்கனவே திருமணம் ஆனவர் என்றும், அவரது முதற் கணவர் உடபுசல்லாவயில் வசித்து வருகிறார் என்றும், அவரிடமிருந்து விவாகரத்துக் கூடப் பெறாமலேயே தன்னை திருமணம் செய்து கொண்ட விடயம் இரண்டாவது கணவருக்குத் தெரியவந்துள்ளது.

அதனையடுத்தே இரண்டாவது கணவர் இது தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். வழக்கு அடுத்த மாதத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (ங-4)

## முகாமையாளருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஏப். 17

வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க எரிபொருள் விற்பனை நிலையத்தில் லட்சக்கணக்கில் பண மோசடி செய்தார் என்று அதன் முகாமையாளரான சந்தேக நபரை எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

யாழ். விசேட குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் சந்தேகநபரைக் கைது செய்து யாழ். நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜாவிடம் நேற்று முன்னிலைப்படுத்தியபோது இவ்வாறு உத்தரவிடப்பட்டது.

டீசல், பெற்றோல், மண்ணெண்ணெய் என்பவற்றை விற்பனை செய்த 6 லட்சத்து 23 ஆயிரத்து 411 ரூபாவை அவர் மோசடி செய்துள்ளார் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (ங-4)

# வாக்குறுதி 25 கிடைத்ததோ 2

## அரைச்சொகுசு பஸ்கள் இன்று கையளிப்பு

யாழ்ப்பாணம், ஏப் 17

யாழ். மாவட்டத்தில் சேவையில் ஈடுபடுவதற்காக இரண்டு புதிய அரைச் சொகுசு பஸ்கள் இன்று செவ்வாய்க்கிழமை கொழும்பில் வைத்து கையளிக்கப்படவுள்ளன.

இலங்கை போக்குவரத்துச் சபைத் தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியோரின் பணிப்புரைக்கு அமைவாக கொழும்பிலுள்ள அசோக் லேடன் நிறுவனத்தில் வைத்து 52 ஆசனங்களைக் கொண்ட இரண்டு அரைச் சொகுசுப் பஸ்களே கையளிக்கப்படவுள்ளன. அவற்றைப் பொறுப்பேற்பதற்காக பருத்தித்துறை முகாமையாளர் அங்கு சென்றுள்ளார் என்று வட பிராந்திய பிரதம முகாமையாளர் க.கணேசபிள்ளை தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை, காரைநகர் ஆகிய இரண்டு சாலைகளிலும் இந்த பஸ்கள்சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

வடபகுதியின் தேவைக்குப் போதுமான பஸ்கள் இல்லாத காரணத்தினால் பஸ் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்ட நிலையிலேயே வழங்கப்பட்டு வருகின்றது. இந்த நிலையில் வடபிராந்திய பிரதம முகாமையாளர், சேவையைச் சீராக மேற்கொள்ள உதவுவதற்காக மேலதிக பஸ்களை உடனடியாக வழங்குமாறு இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவருக்கும் போக்குவரத்துத்துறை அமைச்சருக்கும் பலமுறை கோரிக்கை விடுத்திருந்தார் இந்த நிலையில் இரண்டு பஸ்கள் மாத்திரமே வழங்கப்பட்டுள்ளதால் மக்களுக்கான போக்குவரத்துச் சேவையில் பெரிதாக முன்னேற்றம் இருக்காது என்று தெரிவிக்கப்படுகிறது.

52 ஆசனங்களைக் கொண்ட அரைச் சொகுசுப் பஸ்களே கையளிக்கப்படவுள்ளதாக பிராந்திய பிரதம முகாமையாளர் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் விசேட பணிப்புரைக்கமைய 25 பஸ்கள் வடக்குக்கு கையளிக்கப்படும் என்று கூறப்பட்டுவந்த போதும் தற்போது இரண்டு பஸ்களே கிடைத்துள்ளன. (ங-3)

## திருநாவுக்கரசரின் குருபூசை விழா

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் தஞ்சை ஐங்கரன் அறநெறிப் பாடசாலையும் இணைந்து நடத்தும் திருநாவுக்கரசு நாயனாரின் குருபூசை தினம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு கரவெட்டி தஞ்சை ஐங்கரன் அறநெறிப் பாடசாலையில் நடைபெறும்.

இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி மகிந்தினி விஜயகுமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டி உதவிப் பிரதேச செயலர் திருமதி சுபாசினி மதியழகன் கலந்துகொள்வார். (10)

### மாற்றுவலுவுடையோருக்கு அ.அட்டைக்கு புகைப்படம் எடுத்தல்

தென்மராட்சி, ஏப் 17

தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த மாற்று ஆற்றல் உடையோருக்கான நலன்புரி அடையாள அட்டைகளுக்கான புகைப்படங்கள் எடுக்கும் நிகழ்வு இன்று நடைபெற ஏற்பாடகி உள்ளது.

இன்று காலை 9 மணி தொடக்கம் பகல் 11 மணி வரை மறவன்புலோ, தனங்கிளப்பு கிராம அலுவலர் அலுவலகத்திலும், காலை9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை சாவகச்சேரி நகரம், கோயிற்குடியிருப்பு, நுணாவில் கிழக்கு ஆகிய பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு சாவகச்சேரி நகர கிராம அலுவலர் அலுவலகத்திலும்,

நண்பல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை கல்வயல், நுணாவில் மத்தி நுணாவில் மேற்கு ஆகிய பிரிவைச்சேர்ந்தவர்களுக்கு நுணாவில் பொது சன நூல் நிலையத்திலும் படப்பிடிப்புகள் இடம்பெற உள்ளன.

ஏனைய பிரிவுகளைச் சேர்ந்த மாற்று வலுவுள்ளோர்களை புகைப்படம் எடுக்கும் தினங்கள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ங-10-9)

# காளையின் கதி என்ன? நீதிமன்றம் இன்று தீர்ப்பு

யாழ்ப்பாணம், ஏப்.17

இறைச்சிக்காக வெட்டப்படவிருந்த நிலையில் அரச அதிபரால் தடுத்து நிறுத்தப்பட்டு தற்போது கொள்வனவு செய்தவரிடம் உள்ள காளையை இறைச்சிக்காக வெட்ட அனுமதிப்பதா, இல்லையா என்பது தொடர்பான தீர்ப்பு இன்று வழங்கப்படவுள்ளது.

இந்த வழக்கு யாழ். நீதிமன்றில் நீதிவான் மா. கணேசராஜா முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

ஐரோப்பிய இனத்தைச் சேர்ந்த சுமார் 2ஆயிரத்து 500 இறாத்தலுடைய பல லட்சம் ரூபா பெறுமதியான இந்தக் காளை யாழ். திருநெல்வேலி பண்ணையில் இருந்து ஏலவிற்பனையின் போது இறைச்சிக் கடைக்காரர் ஒருவரினால் கொள்வனவு செய்யப்பட்டது.

கடந்த மாதம் 25 ஆம் திகதி நாவாந்துறையிலுள்ள மாட்டிறைச்சிக் கடையில் குறித்த காளை இறைச்சிக்காக வெட்டப்படவிருந்தது. எனினும் அந்த முயற்சி யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரினால் தடுத்து நிறுத்தப்பட்டது. காளையை நகுலேஸ்வரர் ஆலயத்தில் வைத்துப் பராமரிக்கும் படியும் காளையின் பெறுமதியான பணத்தை யாழ். வர்த்தகர் சங்கத்தினர் உரியவருக்கு வழங்குவதாகவும் மன்றுக்குத் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையிலேயே காளையை வெட்டுவதற்கு அனுமதி தருமாறு கோரி காளையைக் கொள்வனவு செய்தவர்கள் தமது சட்டத்தரணிகளூடாக அனுமதி கோரியுள்ளனர். இவர்களின் சார்பில் சார்பில் சட்டத்தரணிகளான ஏ.நுஃமான் மற்றும் ஜொனி மதுரநாயகம் ஆகியோர் முன்னிலையாகினர்.

இதேவேளை அந்தக் காளையை வெட்டக் கூடாது எனவும் அதற்கான பெறுமதியை உரியவர்களுக்கு வழங்க முடியும் என்றும் மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி இ.த. விக்னராஜா மன்றில் தெரிவித்தார். அதனையடுத்து தீர்ப்புக்காக வழக்கு இன்றுவரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (ங-4)

# இடைநிறுத்தப்பட்ட மாணவர் மீளவும் இணைக்கப்பட்டனர்

யாழ்ப்பாணம்,ஏப்.17

கொக்குவில் இந்துக் கல்லூரியின் கல்விச் செயற்பாடுகளிலிருந்து இடைநிறுத்தப்பட்ட 7 மாணவர்களில் ஆறு பேர் மீளவும் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

மாணவர்கள் தாம் செய்த குற்றத்தை ஒப்புக் கொண்ட நிலையில் மிகக் கடுமையாக எச்சரிக்கப்பட்டதன் பின்னரே கல்விச் செயற்பாட்டில் இணைத்துக்கொள்ளப்பட்டதாகத் தெரிய வருகிறது.

இடைநிறுத்தப்பட்ட மாணவர்களில் ஒருவர் உயர்தரக் கல்வியைத் தொடர்வதற்கான அடிப்படைக் கல்வித் தகைமையைக் கொண்டிருக்காத காரணத்தினால் மீளவும் கல்விச் செயற்பாட்டில் இணைத்துக் கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக மேலும் தெரிய வருகிறது.

பாடசாலை அதிபருடன் யாழ்.வலயக் கல்விப் பணிமனை நடத்திய கலந்துரையாடலை அடுத்தே மாணவர்கள் மீளவும் கல்விச் செயற்பாட்டில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர் என்று கூறப்பட்டது. (ம-3)

# தடுத்து வைக்கப்பட்ட இந்தியர்கள் இருவரும் நேற்று விடுவிக்கப்பட்டனர்

யாழ்ப்பாணம், ஏப். 17

உரிய ஆவணங்கள் இல்லாததால் புங்குடுதீவில் வைத்துக் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட இந்தியர்கள் இருவரும் ஊர்காவற்றுறை நீதிமன்றினால் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்ட இவர்கள் இருவரும் ஊர்காவற்றுறைப் பொலிஸாரினூடாக ஊர்காவற்றுறை நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜாவிடம் முன்னிலைப்படுத்தப்பட்ட போது, உரிய ஆவணங்களைச் சமர்ப்பிக்கும்படியும் அதுவரை விளக்கமறியலில் வைக்கும்படியும் உத்தரவிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் ரயில் பாதை அமைக்கும் நிறுவனத்தில் பணியாற்றும் இருவரதும் கடவுச் சீட்டுக்களை அந்த நிறுவனத் தலைவர் ஊர்காவற்றுறை நீதிமன்றில் நேற்றுச் சமர்ப்பித்தார். சட்டத்தரணி அபிமன்யு சந்தேகநபர்கள் சார்பில் ஆஜராகியிருந்தார்.

ரயில் பாதை அமைக்கும் பணிக்காக யாழ்ப்பாணம் வந்த இவர்கள் இருவரும் புங்குடுதீவுக்குச் சுற்றுலா சென்றபோதே கடற்படையினர் கைது செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ங-4)

## நிகழ்வுகள் இன்று

### குருபூசை

வட்டுக்கோட்டை [illegible] ஆலய நிர்வாகமும் இந்து கலாசார அலுவல்கள் திணைக்களமும் இணைந்து நடத்தும் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை விழா பிற்பகல் 3 மணிக்கு வட்டுக் கோட்டை கண்ணகை அம்பாள் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்து சமய கலாசார உத்தியோகத்தர் எஸ்.உதயபாலன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பொ.சந்திரவேல் ''திருநாவுக்கரசரின் சரியைப்பணி'' எனும் தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார். (ம-14)

### செயலமர்வு

சங்கானை கல்விக் கோட்டப் பாடசாலை ஆசிரிய இணைப்பாளர்களுக்கான செயலமர்வும், கருத்தரங்கும் காலை 8 மணிக்கு மானிப்பாய் ஆசிரிய வள நிலையத்தில் நடைபெறவுள்ளன. (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மிதிவெடியில் சிக்கி இரு இளைஞர்கள் படுகாயம்

01↘ (வயது - 20) காலிலும் மற்றும் எஸ்.மயூரன் (வயது- 21) முகத்திலும் படுகாயமடைந்துள்ளனர்.

யாழ். வைத்தியசாலைப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர்.

உறவினர் வீட்டு வளவொன்றில் குறித்த இரு இளைஞர்களும் தேங்காய் பிடுங்குவதற்காக நேற்றுச் சென்றனர். அப்போது திடீரென குறித்த மிதிவெடி வெடித்ததில் அவர்கள் இருவரும் தூக்கி வீசப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ங-4-6-9)

## பரிந்துரைகளை செயற்படுத்த புதிய பிரிவு

01↘ தாக அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் பொருத்தமானவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் கூறின.

நடைமுறைப்படுத்தப்படவுள்ள பரிந்துரைகளை எப்படி, எந்தக் காலகட்டத்தில் செயற்படுத்துவது தொடர்பில் ஆராய்வதற்கு அரச சட்ட வல்லுநர்கள் அடங்கிய குழு ஒன்றை அமைத்துள்ளதாகவும் அந்தக் குழு ஆய்வொன்றை மேற்கொண்டு வருவதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் கூறின.

இந்தக் குழுவில் முன்னாள் சட்ட மா அதிபரும் அமைச்சரவையின் ஆலோசகருமான மொஹான் பீரிஸ், சட்டமா அதிபர் திருமதி ஈவா வனசுந்தர ஆகியோரும் சிரேஷ்ட சட்டத்தரணிகள் சிலரும் இடம்பெற்றுள்ளனர்.

நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பான ஆயத்தங்களை மேற்கொள்வதற்கான செயற்பாட்டுப் பிரிவு இந்த மாத இறுதியில் அமைக்கப்படும் எனவும் தெரியவருகிறது. (த-22)

## நவம்பரில் இலங்கைக்கு மேலும் ஒரு தலையிடி

01↘ வழங்கப்படும். ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நவம்பர் முதலாம் திகதி இலங்கை மனித உரிமை விடயங்கள் தொடர்பான மீளாய்வு விவாதம் நடத்தப்படவுள்ளது.

இதற்கு முன்னதாக அனைத்துலகப் பணிகள் தொடர்பான மீளாய்வை இலங்கை மேற்கொள்ளும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் ஜுன் மற்றும் செப்ரெம்பர் மாதங்களில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடர்களில், இலங்கையின் முன்னேற்றங்கள் தொடர்பாக தாம் அறிவிக்கவுள்ளதாக அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார். (த)

## மஹிந்தவிடம் கேள்வியெழுப்புக இந்திய எம்.பிக்களிடம் மனோ

01↘ - இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இந்திய எம்.பிக்களின் இலங்கை விஜயம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த மனோ கணேசன் மேலும் கூறியவை வருமாறு -

13ஆம் அரசமைப்புத் திருத்தம், இந்திய- இலங்கை ஒப்பந்தம் பெற்றெடுத்த குழந்தை. இந்திய அரசின் சொந்தத் தயாரிப்பு. இதன் மூலம் மாகாண சபைகள் இந்நாட்டில் உருவாக்கப்பட்டுள்ளன. ஆனால் அரசமைப்புத் திருத்தத்தின்படி அதிகாரம் பரவலாக்கப்படவில்லை. இது தொடர்பில் இலங்கை அரசு இந்திய அரசிற்கு வழங்கிய வாக்குறுதிகளை பலமுறை மீறியுள்ளது. நாட்டின் ஏனைய மாகாணங்களில் உள்ள இந்த அரைகுறை மாகாண சபை கூட இன்று வடக்கில் இல்லை.

கற்றுக்கொண்ட ஆணைக் குழு என்பது இலங்கை பெற்று எடுத்த குழந்தை. இந்நாட்டு அரசின் சொந்த தயாரிப்பு. இதன் சிபாரிசுகளை அமுல் செய்வதாகத்தான் இலங்கை அரசு, உலகத்திற்கு சத்தியம் செய்து கொடுத்துள்ளது. இன்று இது தொடர்பிலும் அரசு உலகத்திற்கு கொடுத்த வாக்குறுதிகளை மீறிக் கருத்துத் தெரிவிக்கிறது.

இந்திய-இலங்கை கூட்டு தயாரிப்பான 13ஆம் திருத்தத்தையும், இலங்கையின் சொந்தத் தயாரிப்பான கற்றுக்கொண்ட பாடங்கள் சிபாரிசுகளையும் குப்பையில் போட்டது ஏன் என இலங்கை அரச தலைவரிடம் இலங்கை வந்துள்ள இந்திய எம்.பிக்கள் குழு கேள்வி எழுப்ப வேண்டும்.

இலங்கை விவகாரம் தொடர்பில் டில்லியில் மாநாடு நடத்தியவரும், ஆளும் காங்கிரஸ் கட்சியின் எம்.பியுமான சுதர்ஷன நாச்சியப்பன் இது தொடர்பில் கூடிய அக்கறை காட்டவேண்டும்.

இலங்கை, இந்தியா ஆகிய இரண்டு நாட்டு அரசுகளின் நல் உறவுகளுக்காக இலங்கை வாழ் வடக்கு, கிழக்கு, மலையக தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் மற்றும் நல்வாழ்வு எப்போதும் பலிகடாவாக்கப்பட்டுள்ளன. இதுதான் கடந்த 60 வருட கால வரலாறு.

சம்பந்தப்பட்ட மலையக தமிழ் மக்களின் ஒப்புதல் இல்லாமல் சிறிமா- சாஸ்திரி நாடு கடத்தல் ஒப்பந்தம் செய்யப்பட்டது. இது நடந்திரா விட்டால் இன்று, மலையகத்தில் இருந்து மாத்திரம், சுமார் 30 தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலங்கை நாடாளுமன்றத்தில் இருந்திருப்பார்கள். மலையக மக்களின் அரசியல் பலத்தை இந்தியா இந்த ஒப்பந்தத்தின் மூலம் காவு கொடுத்தது.

அதேபோல் வடக்கு, கிழக்கு மக்களின் ஒப்புதல் இல்லாமல் இந்திய - இலங்கை ஒப்பந்தம் கொண்டுவரப்பட்டது. அதைக்கூட முழுமையாக அமுல் செய்விக்க பிராந்திய வல்லரசு என தன்னைப் பிரகடனப்படுத்தும், இந்திய அரசால் முடியவில்லை. காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்கி இந்திய மாநிலங்களுக்கு சமானமான ஒரு ஆட்சி அமைப்பை இலங்கையில் ஏற்படுத்த இன்னமும் இந்தியாவால் முடியவில்லை.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள், முஸ்லிம் மக்கள், மலையக தமிழ் மக்கள் ஆகியோருக்கு நியாயம் வழங்கப்படாமல் இலங்கையில் அமைதி திரும்ப முடியாது. தமிழ் பேசும் மக்களுக்கு நியாயம் வழங்கப்படாமல் தடுத்து நிறுத்தி இருப்பது, இலங்கை அரசு முன்னெடுக்கும் கடுமையான இனவாதக் கொள்கை என்பதை இந்திய நாடாளுமன்றக் குழு அறிந்து கொள்ள வேண்டும்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு முழுமையான தீர்வாகக் கருதப்பட முடியாத மாகாண சபைகளைக்கூட தமிழ்ப் பகுதிகளில் முழுமையான சட்டப்படியான அதிகாரம் மிக்க சபைகளாக அமுல் செய்ய இந்த அரசு தயார் இல்லை. அதேபோல் தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட அனைத்து கொடுமைகளுக்கும் தீர்வு தராத, கற்றுக் கொண்ட ஆணைகுழுவின் சிபாரிசுகளைக்கூட அமுல் செய்ய அரசு தயங்குகிறது. அரைகுறை தீர்வுகளைக் கூட தருவதற்கு இலங்கை அரசு தயார் இல்லை என்பதுதான் உண்மை. இந்த நிலைமைக்கு இந்திய அரசு தார்மீகப் பொறுப்பை ஏற்க வேண்டும்.

இதுதொடர்பில் இந்தியத் தூதுக்குழுவில் இடம் பெறும் எதிர்க்கட்சி தலைவர் சுஷ்மா சுவராஜ், காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த சுதர்ஷன நாச்சியப்பன் ஆகிய முன்னணி எம்.பிக்கள் தமது பயணத்தின் இறுதி தினத்தில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் நடத்தும் சந்திப்பின்போது கேள்வி எழுப்ப வேண்டும். இலங்கை ஜனாதிபதி தரப்போகும் புதிய வாக்குறுதிகள் என்ன என்பதை அறிந்து கொள்ள உலகம் ஆவலாகக் காத்திருக்கின்றது. - இப்படி அவர் தெரிவித்துள்ளார்.

## முகாம் மக்களைச் சந்திக்க அனுமதியுங்கள்; இலங்கையிடம் இந்தியா அவசர கோரிக்கை

01↘ வுக்கு எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் தலைமை தாங்குகிறார்.

போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களை நேரடியாகச் சந்தித்துப் பேசுவதற்கான ஏற்பாடுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை எனவும், இலங்கை அரசைத் திருப்திப்படுத்தவே இந்தப் பயணம் எனவும் குற்றஞ்சாட்டி முதல்வர் ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க., கருணாநிதி தலைமையிலான தி.மு.க. ஆகியன இலங்கைப் பயணத்தில் இருந்து விலகிக் கொண்டன.

இந்த நிலையில் இலங்கைப் பயணம் பயனுள்ளதாக அமையுமா என்று எழுப்பப்பட்ட கேள்விக்கே சுஷ்மா சுவராஷ் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

போரினால் இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் வசித்து வரும் வன்னி மக்களைச் சுதந்திரமாகக் கட்டுப்பாடுகள் இன்றி சந்தித்துப் பேசுவதற்கு அனுமதி வழங்குமாறு இலங்கை அரசிடம் நாம் கோரியுள்ளோம். முன்னர் தயாரிக்கப்பட்ட எமது நிகழ்ச்சி நிரலில் அது இல்லை. எனினும் இப்போது நாம் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளோம். எமது கோரிக்கைக்கு இலங்கை அரசிடம் இருந்து சாதகமான பதில் கிடைக்கும் என நம்புகின்றோம் - என்றார். (த)

## மேற்கு நாடுகளின் தூதுவர்கள் இலங்கை மீது கடும் அதிருப்தி

01↘ இரவு விருந்தின் போது கூறியுள்ளதாகத் தெரியவருகிறது.

அண்மைக்காலமாக மேற்குலக நாடுகளின் மீது விமர்சனங்களை முன்வைத்து வந்தது இலங்கை அரசு. ஜெனிவாவில் இலங்கை மீதான தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர் அரசின் இந்தச் செயற்பாடுகள் மேலும் தீவிரமடைந்திருக்கிறது. இலங்கை மீதான தீர்மானத்துக்கு மேற்கு நாடுகள் அனைத்தும் ஆதரவு வழங்கியமையே இதற்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது.

ஜனாதிபதி மஹிந்தவும், அமைச்சர்களும் இப்போது வெளிப்படையாக பொதுக் கூட்டங்களில் மேற்கு நாடுகள் மீது வசைபாடி வருகின்றனர். நாட்டைப் பிளவுபடுத்த மேற்குநாடுகள் சூழ்ச்சி செய்து வருவதாக ஜனாதிபதி அடிக்கடி குற்றஞ்சாட்டி வருகிறார். இலங்கையின் ஆட்சியைக் கவிழ்க்க மேற்குலகு முயற்சிப்பதாக அமைச்சர்கள் கூறி வருகின்றனர்.

இந்தக் கருத்துகளாலேயே மேற்கு நாடுகளின் தூதுவர்கள் கடும் சினமடைந்துள்ளதாகவும், அவர்கள் இது தொடர்பில் தமது அதிருப்தியை இலங்கை வெளிவிவகார அமைச்சிடம் வெளியிட்டுள்ளதாகவும் ராஜதந்திர வட்டாரங்கள் கூறுகின்றன.

இலங்கையில் அமைதியும் சமாதானமும் ஏற்பட வேண்டும் என்றே மேற்கு நாடுகள் விரும்புகின்றன. ஆட்சி மாற்றத்தையோ, நாட்டைப் பிளவுபடுத்துமாறோ நாம் கேட்கவில்லை. அனைத்து இன மக்களும் சமமாக நடத்தப்பட வேண்டும் என்பதையே வலியுறுத்துகின்றோம். மனித உரிமை மீறல்களையே நாம் கண்டிக்கின்றோம். அதற்கு அப்பால் வேறு எதுவும் இல்லை என மேற்கு நாடுகளின் தூதுவர்கள் வெளிவிவகார அமைச்சிடம் சுட்டிக் காட்டியுள்ளதாகவும் தெரியவருகிறது. (த)

## கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சராக பொது வேட்பாளர்

01↘ தும் பொது வேட்பாளராகக் களமிறக்க கொள்கையளவில் அவசர முடிவு எடுத்திருக்கின்றன என நம்பகரமாகத் தெரியவருகின்றது.

மு.கா. தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீமை முதலமைச்சராக நியமிக்க அரசு முடிவு எடுத்திருக்கிறது என செய்திகள் வெளியானதையடுத்து, மேற்படி பொது வேட்பாளர் 'பேச்சுக்கு' முக்கியத்துவம் வழங்கி மேற்படி இரு கட்சிகளும், சட்டத்தரணி நிஸாம் காரியப்பரின் கருத்துக்குப் பின்னர் குறித்த பொது வேட்பாளர் விடயத்தை பரிசீலனைக்கு எடுத்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஜனரஞ்சகமிக்க, தமிழ் மக்களாலும் விரும்பப்படுகின்ற ஒருவராக குறித்த 'பொது வேட்பாளர்' தெரிவின்போது முக்கிய கவனம் செலுத்துவது குறித்து இரு கட்சிகளும் இணக்கம் கண்டுள்ளன.

கிழக்கு மக்களின் விருப்பத்திற்கிணங்க குறித்த பொதுவேட்பாளர் தெரிவு இடம்பெறும். இது தொடர்பில் சகல தகைமையும் பெற்ற ஒருவருடன் பேச்சு நடத்தப்பட்டு வருகின்றது என முஸ்லிம் கட்சியொன்றின் உயர் பிரமுகர் ஒருவர் 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க, சட்டத்தரணி நிஸாம் காரியப்பரை நேற்றுத் தொடர்பு கொண்டு அ.இ.ம.காவில் இணைந்துகொள்ளவுள்ளதாக வெளியாகியுள்ள செய்தி தொடர்பில் கேட்டபோது மு.கா. என்ற எனது கட்சிக்குள்ளிருந்துதான் எனது கருத்தைப் பலமாக முன்வைக்கவுள்ளேன்.

வேறொரு கட்சியில் இணைந்துகொள்ளுமளவுக்கு எந்தவொரு தேவைப்பாடும் இப்போதைக்கு இல்லை.

கிழக்கைச் சேர்ந்தவர்தான் கிழக்கு மாகாண முதலமைச்சராக வரவேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றேன்.

மு.கா.தலைவர் கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவிக்குப் போட்டியிடுமளவுக்கு கிழக்கில் பிறந்த தகுதியான எவரும் இல்லையா?

எங்களைப் போன்றவர்களையெல்லாம் கட்சியை விட்டு விலக்கிவிட்டுத் தனக்கு வேண்டியவர்களை வைத்துக்கொண்டு கட்சி அதிகாரத்தைப் பயன்படுத்த முனைகிறார். கருத்துச் சுதந்திரம் இருக்கிறது.

கட்சிக்குள் இருந்து கொண்டுதான் எனது கருத்தை [illegible] (த-சி)

## தமிழரின் நியாயமான கோரிக்கைகள் உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும்

01↘ சபைகளுக்கு அதிகாரங்களைப் பகிர்வதால் மக்கள் நன்மையடையப் போவதில்லை. அது அரசியல் வாதிகளுக்கே சாதகம். அமைச்சர் டக்ளஸ் முதலமைச்சராக வந்தால் கூட இதே நிலைமைதான் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் செயலாளர் கலாநிதி வசந்த பண்டார தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் 'உதய'னிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

வடக்கு மக்களுக்கு நீதி இன்னும் முழுமையாகக் கிடைக்கப்பெறவில்லை. அவற்றை அரசு உடன் பெற்றுக்கொடுத்து, மக்களின் வாழ்க்கையைக் கட்டியெழுப்பவேண்டும். இதற்கு தெற்கு மக்களும் உதவி புரிய வேண்டும்.

வடக்கு மக்களுக்கு விவசாயக்கடன், வீடமைப்புக் கடன் ஆகிய வசதிகள் இல்லை. வடக்குக்கு நான் விஜயம் செய்தபோது இந்த அவல நிலைமையை உணர்ந்தேன்; அறிந்தேன்.

அதுமட்டுமின்றி, இன்னும் பல பிரச்சினைகள் உள்ளன. அவற்றை இனங்கண்டு தமிழ்மக்களின் சாதாரண கோரிக்கைகள் அனைத்தையும் அரசு நிறைவேற்ற வேண்டும்.

வடக்கில் மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளை மீண்டும் இயங்க வைப்பதற்கு இந்தியா உதவவேண்டும். அவ்வாறு உதவிகளை வழங்கிய பின்னர் இலங்கை உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்காவிட்டால் அழுத்தம் கொடுக்கவேண்டும். இதுதான் உண்மையான அக்கறை. மாறாக வந்து போவதில் பயனில்லை.

வடக்கில் சிவில் குழுக்கள் இன்னும் முழுமையாக சக்திபெறவில்லை. அதனால்தான் அங்கு இராணுவம் நிறுத்தப்பட்டுள்ளது. சிவில் குழுக்கள் சக்தியடைந்தால் இராணுவத்தினர் முகாம்களுக்குத் திரும்பி விடுவர்.

மாகாண சபைகளுக்கு அதிகாரங்களைப் பகிர்வதன் மூலம் அரசியல்வாதிகளே அதிக நன்மைகளை நுகர்வர். பலன்கள் மக்களைச் சென்றடையா. அரசியல்வாதிகள் நினைத்தபடி சொகுசு வாழ்க்கை வாழலாம்.

அதனால்தான் பிரதேச சபைகளுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் முழுமையான அதிகாரங்களை வழங்கவேண்டும் என்று நாம் கூறுகின்றோம். அவ்வாறு வழங்கப்பட்டால் மக்களுக்கு நல்ல சேவையை வழங்கமுடியும்.

வடக்கு மக்களின் பிரச்சினைகள் இன்னும் முழுமையாகத் தீர்க்கப்படவில்லை என நான் கூற வரவில்லை. உள்ள பிரச்சினைகளையே சுட்டிக்காட்டுகின்றேன் எனக் குறிப்பிட்டார் கலாநிதி வசந்த பண்டார. (த-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வடகொரிய ஏவுகணைச் சோதனை; தாக்கம் எந்தத் திசை சாயும்?

வடகொரியாவின் நிறுவுநர் கிம் இல்-சுங்கின் 100ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, செய்மதி ஒன்றுடன் ஏவப்பட்ட ஏவுகணை, இரண்டே இரண்டு நிமிடங்களில் வானத்தில் வெடித்துச் சிதறிய சம்பவம் அனைத்துலக நாடுகளின் கவனத்தை மீண்டும் அந்நாட்டின் பக்கம் திருப்பிவிட்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளாகக் கடும் பஞ்சத்தையும், பொருளாதார நெருக்கடியையும் எதிர்நோக்கியுள்ள வடகொரியா, கிம் இல்-சுங்கின் 100ஆவது பிறந்தநாளை முன்னிட்டு கடந்த வெள்ளிக்கிழமை ஏவிய ஏவுகணைக்கான முழுச்செலவு 85 கோடி டொலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஏவுகணை ஏவப்பட்டதோடு, கடந்த பெப்ரவரி மாதம் அமெரிக்காவுடன் வடகொரியா செய்து கொண்ட ஒப்பந்தம், காற்றில் பறக்கவிடப்பட்டுவிட்டதாகக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

உலகிலேயே, வெளித் தொடர்புகளை இழந்து ஒதுங்கிவாழும் நாடான வடகொரியாவின் இளம் தலைவர் கிம் ஜொங் - உன், தமது நாட்டை ஒரு வளமான எதிர்காலத்துக்கு இட்டுச் செல்வாரா என்பது சந்தேகத்துக்கு உரியதாகவே இருக்கிறது.

நீண்டதூர ஏவுகணைப் பரிசோதனை மற்றும் அணு ஆயுதப் பரிசோதனைகளை நிறுத்த வடகொரியா, ஒருசில வருடங்களுக்கு முன்னர் இணக்கம் தெரிவித்தது. அதற்குக் கைமாறாக 2 இலட்சத்து 40 ஆயிரம் தொன் உணவுப் பொருள்களை வழங்க அமெரிக்கா அப்போது சம்மதித்தது.

வடகொரியா கடந்த வெள்ளிக்கிழமை ஏவிய ஏவுகணை, அணு ஆயுதங்களை எடுத்துச் செல்லக்கூடிய நீண்டதூர ஏவுகணைக்கான ஒத்திகையாக இருக்கலாம் என்றும், ஆயிரக்கணக்கான மைல்களைக் கடந்து அமெரிக்காவைத் தாக்கும் ஒரு நிகழ்ச்சிநிரலுடன் வடகொரியா செயற்படுவதாகவும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுகின்றன.

இவற்றுக்கிடையில், வடகொரியா, சர்வதேச சமூகத்தை எதிர்த்துச் செயற்படும் பட்சத்தில் அது மேன்மேலும் தனிமைப்படுத்தப்படும் என்று அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா எச்சரிக்கும் தொனியில் கருத்து வெளியிட்டுள்ளார்.

அதேவேளை, தமது பதவிக்காலத்தில் முதன்முதலாக பொது மக்கள் முன்பு தோன்றி தலைநகர் பையோங்க்கில் உரையாற்றிய ஜனாதிபதி கிம் ஜொங் - உன், தமது நாட்டுக்கு இனி எவரும் அணு ஆயுத மிரட்டலை விடமுடியாது என்று எச்சரித்தார். வடகொரியாவும் அடுத்த கட்டமாக அணு ஆயுத பரிசோதனைகளில் ஈடுபட வேண்டும். அதற்கு முதற்படியாக இராணுவத்தைப் பலப்படுத்தப் போவதாக முழங்கினார்.

இவற்றுக்கிடையே -

வடகொரிய ஏவுகணை எதிர்பாராது வெடித்துச் சிதறியதற்கு, தென்கொரியப் புலனாய்வாளர்களின் சதி நடவடிக்கைகள் காரணமாக இருக்கலாம் என்ற சந்தேகங்களும் எழுப்பப்பட்டுள்ளன. அண்மைக்காலமாக, வடகொரியாவின் ஏவுகணைத் திட்டத்தைத் தென்கொரியப் புலனாய்வாளர்கள் கண்காணித்து வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. ஏவுகணை அனுப்பப்படுவதற்கு முன்னர், தென்கொரியப் புலனாய்வாளர்கள் தமது அவதானிப்பு அறிக்கையை வெளியிட்டிருந்தனர் என்ற தகவல்கள் இப்போது கசிந்துள்ளன.

பொருளாதாரத் துறையில் அமெரிக்காவை விஞ்சும் இலக்குடன் வேகமாக வளர்ந்துவருகிறது சீனா, அதன் மிக நெருங்கிய நட்பு நாடான வடகொரியா, தூர கிழக்கில் அமெரிக்காவுக்கு நெருக்கடி தரும் நாடாகவே இருக்கப்போகிறது என்ற கருத்தும் பரவலாக நிலவுகிறது.

கிம் இல்-சுங்கின் 100ஆவது பிறந்தநாளை முன்னிட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை பியொங்யாங்கில் இராணுவ அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்ட வடகொரியாவின் இளம் தலைவர் கிம் ஜொங் - உன், முன்னைய தலைவர்களைப் போன்று இராணுவத்துக்குப் பெரும் முக்கியத்துவம் கொடுத்து வருகிறார். கொரிய தீபகற்பத்தில் நிரந்தர அமைதிக்கு இது ஒருபோதும் வழி அமைக்கமாட்டாது என்று அனைத்துலக மட்டத்தில் எதிர்வு கூறப்படுகிறது.

உலகில் எந்தவொரு நாட்டிலும் இல்லாதவாறு, வடகொரியாவில் குடும்ப ஆட்சி, அடுத்துத் தொடுத்து, நடைபெற்றுவருகிறது. 1949 ஆம் ஆண்டு பதவியேற்ற வடகொரியாவின் நிறுவுநரான கிம் இல்-சுங் 1994 இல் மரணமடைய, அவரது புதல்வர் கிம் ஜொங்-இல் பதவியேற்றார்.

கடந்த ஆண்டு டிசம்பரில் கிம் ஜொங்-இல் இன் மரணத்தை அடுத்து புதல்வர் கிங் ஜொங்-உன் ஆட்சிபீடம் ஏறினார். சுமார் 60 ஆண்டுகளுக்கு மேலாக ஒரு குடும்பமே வடகொரியாவை ஆட்சிசெய்து வருகிறது.

வடகொரிய மக்களில் ஆயிரம் பேருக்கு 48 பேர், இராணுவத்தில் பணியாற்றுகின்றனர் என்று ஒரு புள்ளிவிவரம் தெரிவிக்கின்றது.

கடந்த ஐந்து தசாப்தங்களுக்கும் அதிகமாக, வடகொரியா, பிராந்திய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவும் சர்வதேச சட்டங்களை மீறுவதாகவும் உத்தரவாதங்களை மீறிச் செயற்படுவதாகவும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன; சுமத்தப்படுகின்றன.

வடகொரிய ஆட்சியாளர், இராணுவத்துக்கான செலவைக் குறைத்து பொருளாதாரத்தில் கவனம் செலுத்துவதன்மூலமே, பிராந்தியத்தில் நீடித்துவரும் பதற்றத்தைக் குறைக்கமுடியும். தவறினால், ஏவுகணை போன்றே அதன் வீழ்ச்சியும் தவிர்க்க முடியாததாகி விடலாம் என்று நோக்கர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

ஏற்கனவே, 2006 ஆம் ஆண்டிலும் 2009 ஆம் ஆண்டிலும் வடகொரியா நடத்திய ஏவுகணைச் சோதனைகள் காரணமாக ஐ.நா. சபை அந்த நாடு மீது பொருளாதாரத் தடைகளை விதித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் பெப்ரவரியில் - தனது அணு ஆயுத சோதனைத் திட்டங்களை கணிசமான அளவு குறைக்கப் போவதாக வெளிப்படுத்திய, வாக்குறுதி அளித்த வடகொரியா, இப்போது (கடந்த வியாழக்கிழமை) ஏவுகணையைச் செலுத்தியமை அனைத்துலக வட்டாரங்களில் பெரும் அதிருப்தியை உண்டாக்கி உள்ளது.

அத்தோடு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் இரண்டு முக்கிய தீர்மானங்களை (இல: 1718, 1874) வடகொரியா ஏற்கனவே மீறிச் செயற்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

எதுவாயினும் வடகொரியாவின் செயற்பாடுகள், அதன் போக்கும், நோக்கும் அது இலக்கு வைத்துள்ள குறிகளை - இலக்குகளை - எய்துமா என்பதற்கு காலமே பதில் சொல்லும்.

# வடக்கு-கிழக்கில் இதுவரை 49,507 வீடுகள் நிர்மாணம்

### உலக வங்கியின் உதவியுடன்

யாழ்ப்பாணம்,ஏப். 17

வடக்கு, கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத்திட்டத்தின் கீழ் வடக்கு -கிழக்கு மாகாணங்களில் தற்போது 49 ஆயிரத்து 507 வீடுகளின் நிர்மாண வேலைகள் முடிவடைந்து அவை பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளன என்று திட்டப் பதில் பணிப்பாளர் க.தெய்வேந்திரம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உலக வங்கி, பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஊடாக இந்தத் திட்டத்துக்கு நிதியை வழங்கியிருந்தது. தலா 3 லட்சத்து 25 ஆயிரம் ரூபா இந்தத் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு பயனாளிகளுக்கும் வழங்கப்பட்டு அவர்களுடைய பங்களிப்பையும் இணைத்து இந்த வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

இந்த இரண்டு மாகாணங்களுக்குமான வீடமைப்பு ஒதுக்கீடு 50 ஆயிரத்து 91 ஆகும். எனினும் 572 பயனாளிகளுக்கான வீடமைப்பு உதவிகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

மீளக்குடியமராமை, இந்தியாவுக்குப்புலம் பெயர்ந்தமை, பகுதி வீட்டுடன் காணி விற்கப்பட்டமை, உள்ளூர் இடப்பெயர்வு, காணிப் பிணக்கு, பயனாளிகளின் இறப்பு, கட்டிய வீடுகள் போரினால் அழிவுற்றமை, மிகவும் நலிவடைந்தமை ஆகிய 8 காணரங்களுக்காகவே இவை இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 73 பயனாளிகளுக்கும், கிளிநொச்சி மாவட்டதில் 167 பயனாளிகளுக்கும், வவுனியா மாவட்டத்தில் ஒரு பயனாளிக்கும், மன்னார் மாவட்டத்தில் 42 பயனாளிகளுக்கும், திருகோணமலை மாவட்டத்தில் 119 பயனாளிகளுக்கும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 170 பயனாளிகளுக்கும் வீடமைப்பு உதவி இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் 13 ஆயிரத்து 269 வீடுகளும், கிளிநொச்சியில் 5 ஆயிரத்து 335 வீடுகளும் முல்லைத்தீவில் 2 ஆயிரத்து 920 வீடுகளும், வவுனியாவில் 2 ஆயிரத்து 142 வீடுகளும், மன்னாரில் 3 ஆயிரத்து 431 வீடுகளும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இதே போல கிழக்கு மாகாணத்தில் திருகோணமலையில் 6 ஆயிரத்து 394 வீடுகளும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 11 ஆயிரத்து 441 வீடுகளும், அம்பாறையில் 4 ஆயிரத்து 575 வீடுகளும் இவ்வாறு நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

இவற்றில் முல்லைத்தீவு, அம்பாறை ஆகிய மாவட்டங்களின் நிர்மாண வேலைகள் நூறு வீதம் நிறைவடைந்துள்ளன.

அத்துடன் முற்றாகச் சேதமடைந்த மற்றும் பகுதியளவாகச் சேதமடைந்த 50 ஆயிரத்து 79 வீடுகள் புனரமைப்புச் செய்யப்பட்டு நிர்மாண வேலைகள் நிறைவடையும் நிலையில் உள்ளன -என்றார். (த-3)

# அடிப்படைத் தகைமையற்ற ஆசிரியருக்கு ஆசிரிய கலாசாலையில் அனுமதி இல்லை

அச்சுவேலி,ஏப். 17

அடிப்படைக் கல்வித் தகைமையை பூர்த்தி செய்யாத ஆசிரிய உதவியாளர்களுக்கு ஆசிரிய கலாசாலையில் அனுமதி வழங்கப்பட மாட்டாது.

அவர்கள் தொடர்ந்து பாடசாலைகளில் கடமைபுரிவதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்படுமா என்பது கேள்விக் குறியாகி உள்ளது.

**ஆசிரிய உதவியாளராக நியமனம் பெறுபவர்கள் கணிதம், தாய்மொழி உட்பட ஆறு பாடங்களில் சாதா ரண தரப் பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும். உயர்தரத்தில் ஒரே தடவையில் மூன்று பாடங்களிலும் சித்தி அடைந்திருக்க வேண்டும்.**

யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாக கடமை யாற்றியவர்களுக்கு நீண்ட காலக் கோரிக்கைக்கு பின்னர் 2010 ஆண்டு ஆசிரிய உதவியாளர் நியமனம் வழங்கப்பட்டது.

ஆசிரிய உதவியாளர் நியமனம் தொடர்பாக மூன்று கட்டங்களில் வலயம், மாகாணம், வடக்குமாகாண கல்வி அமைச்சு ஆகியவற்றில் நேர்முகப்பரீட்சையும் நடத்தப்பட்டது.

அத்துடன் தொண்டர் ஆசிரியர்கள் கடமையாற்றிய பாடசாலை அதிபர்களின் அந்தரங்க அறிக்கையும் பெறப்பட்டது.

இந்த நடவடிக்கை எல்லாவற்றுக்கும் டிமிக்கு கொடுத்த நிலையில் கல்வித் தகைமையை உரிய முறையில் பூர்த்தி செய்யாத சிலர் ஆசிரியர் உதவியாளர் நியமனம் பெற்றுள்ளனர்.

சாதாரண தரத்தில் கணித பாடத்தில் சித்தியடையாமை, உயர்தரத்தில் மூன்று பாடங்களிலும் சித்தியடையாமை, கற்பிப்பதற்கு தெரிவு செய்யப்பட்ட பாடங்களில் திறமைச் சித்தி இன்மை என்ற வகையில் அடிப்படைக் கல்வித் தகைமை இல்லாமல் ஆசிரிய உதவியாளர் நியமனம் பெற்றிருப்பது ஆசிரிய கலாசாலை அனுமதி நேர்முகப் பரீட்சையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஆசிரிய உதவியாளர் நியமனம் பெறுபவர்கள் கணிதம், தாய்மொழி உட்பட ஆறு பாடங்களில் சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும். உயர்தரத்தில் ஒரே தடவையில் மூன்று பாடங்களிலும் சித்தி அடைந்திருக்க வேண்டும். ஆரம்பக்கல்வி மற்றும் தமிழ் பாடத்துறைகளை கற்பிப்பவர்கள் உயர் தரத்தில் தமிழ் பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருக்க வேண்டும். ஏனைய பாடங்களை கற்பிப்பவர்கள் குறித்த பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருக்க வேண்டும் என்பது அடிப்படைக் கல்வித் தகைமையாக முன்வைக்கப்பட்டிருந்தது.

ஆசிரியர் கலாசாலை அனுமதிக்காக கடந்த மாதம் 23 ஆம், 24ஆம், 25 ஆம் திகதிகளில் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக்கு 480 ஆசிரியர்கள் தோற்றி இருந்தனர்.

இவர்களின் விவரங்கள் கல்வி அமைச்சின் ஆசிரியர் கல்விப்பிரிவுக்கு அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

அடிப்படைக் கல்வித் தகைமையை நிறைவு செய்யாதவர்களுக்கு ஆசிரிய கலாசாலை அனுமதி கிடைக்காது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

(ம-11)

# வீட்டு நிர்மாணப் பணிகள் நிறைவடைந்தால் இறுதிக்கட்டநிதி

### வீடமைப்புத் திட்டத்தின் பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம்,ஏப். 17

வடக்குக் கிழக்கு வீடமைப்பு நிர்மாணத்திட்டத்தில் பயனாளிகளாகத் தெரிவுசெய்யப்பட்டு இரத்துச் செய்யப்பட்டவர்கள், இந்த வருட ஜனவரி முதலாம் திகதிக்குப் பின்னர் வீட்டு நிர்மாண வேலைகளைப் பூர்த்தி செய்தவர்கள் மிகுதிப் பணத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று திட்டப் பதில் பணிப்பாளர் க.தெய்வேந்திரம் தெரிவித்துள்ளார்.

பரந்தனில் உள்ள வடக்குக் கிழக்கு வீடமைப்பு நிர்மாணத்திட்ட அலுவலகத்தின் பதில் திட்டப் பணிப்பாளரின் 021 228 0069 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பயனாளிகள் இவ்வாறான முறைப்பாடுகளைத் தெரிவிக்க முடியும் என்று கூறப்பட்டது.

உரிய காலப்பகுதியில் வீட்டு நிர்மாணப் பணிகளை முடிக்காமை உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்காக 572 பயனாளிகளுக்கு வீட்டுத் திட்டத்துக்கான மிகுதிப் பணம் வழங்காது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

யுத்தத்தால் வீடுகளை இழந்தவர்கள், வறுமைக் கோட்டுக்குள் வாழ்பவர்கள், சொந்தக் காணி உள்ளவர்கள் என்ற அடிப்படைகளிலேயே பயனாளிகள் தெரிவு இடம் பெற்றது.

இந்த அடிப்படையில் சுமார் 49 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

பயனாளி ஒருவருக்கு 3 லட்சத்து 25 ஆயிரம் ரூபா வழங்கிப் பயனாளிகளின் பங்களிப்புடன் இந்த வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.- என்று அவர் மேலும் கூறினார்.

(ம-3)

# தேசிய பயிற்சிப் பாசறையில் வடமாகாண மாணவர்கள்

யாழ்ப்பாணம்,ஏப். 17

பெண் சாரணிய தேசிய பயிற்சிப் பாசாறை பொலநறுவை ராஜகிரிய மாளிகா மகா வித்தியாலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 21 ஆம் திகதி வரை நடைபெறும்.

இந்தப் பாசறையில் கலந்து கொள்வதற்காக வடமாகாணத்திலிருந்து 95 பெண்சாரணிய மாணவிகளும் 15 வழிகாட்டுநர்களும் வடமாகாண பெண்சாரணியத் தலைவி திருமதி என். தர்மகுலசிங்கம் தலைமையில் சென்றுள்ளனர்.

இவர்களுக்கான போக்குவரத்து ஏற்பாடுகளை, வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ் சத்தியசீலன் மேற்கொண்டுள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடநெருக்கடியில் முன்பள்ளிச் சிறார்கள்

கிளிநொச்சி,ஏப். 17

கிளிநொச்சி தருமபுரம் பரி. லூக்கா முன்பள்ளியில் கல்வி கற்கும் சிறார்கள் போதிய இட வசதிகள் இல்லாததால் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த முன்பள்ளியில் கிளிநொச்சி தருமபுரம் கிழக்கு, தருமபுரம் மேற்கு, உழவனூர் போன்ற பகுதிகளைச் சேர்ந்த சுமார் 110 இற்கும் மேற்பட்ட சிறார்கள் கல்வி கற்று வருகின்றனர். இந்த நிலையில் போதிய இடவசதிகள் இங்கு காணப்படாததால் சிறார்களும், ஆசிரியைகளும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

எனவே இந்த முன்பள்ளிக்குக் கட்டடவசதிகளை ஏற்படுத்தித் தருமாறும், இந்தச் சிறுவர்களின் மகிழ்வான கற்றலுக்கு உதவுமாறும் முன்பள்ளிச் சிறார்களின் பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-6)



அண்மையில் நெடுங்கேணியில் வீசிய மினி சூறாவளியால் வாழை மரங்கள் முறிந்து நாசமடைந்திருப்பதையே காண்கிறீர்கள் (435)

தெரிவு செய்யப்பட்டு கைவிடப்பட்ட நிலையில்

## அடுத்த தேர்தல் எப்போது? காத்திருக்கும் வீதிகள்

கிளிநொச்சி,ஏப். 17

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் கடந்த ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தல்களின் போது அவசர அவசரமாகப் புனரமைக்கவெனத் தெரிவு செய்யப்பட்ட சுமார் 144 கிராமிய வீதிகள் அப்படியே கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.

கரைச்சி, பூநகரி, பச்சிலைப்பள்ளி உள்ளிட்ட பிரதேச சபைகளுக்கான உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெறுவதற்கு முன்னரும், அதன்பின்னர் முல்லைத்தீவு மாவட்டத்திலும், சுமார் 144 கிராமிய வீதிகளைக் கொங்கிறீற் வீதிகளாக மாற்றுவதாகக் கூறி மேற்படி வீதிகளின் பெயர்ப் பலகைகளும் திரைநீக்கம் செய்யப்பட்டன. வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் சம்பிரதாய பூர்வமாக வீதிகளின் வேலைகளை ஆரம்பித்து வைத்தனர்.

ஆனால் வருடக் கணக்காகிய போதிலும் அந்த வீதிகளின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படாது ஆரம்ப நிலையிலேயே இன்று வரை காணப்படுகின்றன.

இதேவேளை குறிப்பிட்ட சில வீதிகளில் கிரவல்கள் குவிக்கப்பட்டும் அல்லது சிறிய கற்கள் பரவப்பட்டும் உள்ளதால் பயணங்களின் போது பெரும் சிரமங்கள் ஏற்படுகின்றன. (க-6)

## துணுக்காய்ப் பாடசாலையை தரமுயர்த்த வேண்டுகோள்

அக்கராயன்,ஏப். 17

துணுக்காய் கல்விளான் பாடசாலையைத் தரமுயர்த்துமாறு பெற்றோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தரம் -9 வரையான வகுப்புகளுடன் மட்டும் இயங்கும் இந்தப் பாடசாலையில் விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லை. தரம் 10,11 ஆகிய வகுப்புகளில் கல்வி கற்கும் இந்தப் பகுதி மாணவர்கள் 4 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள மல்லாவி மத்திய கல்லூரிக்குப் பல்வேறு இடர்களுக்கு மத்தியில் சென்று வருகின்றனர்.

இந்த நிலையில் கல்விளான் பாடசாலையைத் தரமுயர்த்துமாறு பெற்றோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மிகவும் பின்தங்கிய மக்களே இந்தக் கிராமத்தில் வசித்து வருகின்றனர். இவர்கள் தமது பிள்ளைகளை வெளியிடங்களுக்கு அனுப்பிக் கல்வி கற்பிக்கும் நிலையில் இல்லை.

எனவே இங்குள்ள பாடசாலைகளில் தரம் 10,11 ஆகிய வகுப்புகளை அமைப்பதன் மூலம் மாணவர்களின் கல்வி உயர்வடைவதோடு, பெற்றோர்களின் சிரமங்களும் குறைவடையும் என்று பலரும் கருத்து வெளியிட்டுள்ளனர். (க-18)

# குளம் அமைந்திருந்த காணிக்கு பலர் உரிமை கோரும் விசித்திரம்

வவுனியா,ஏப். 17

வவுனியா கனகராயன் குளம் ஏ-9 வீதியின் அருகில் உள்ள பாழடைந்த குளத்தின் நிலப்பகுதி தமக்குச் சொந்தமானது என்று பலர் உரிமை கோரி வருகின்றனர்.

வவுனியா கனகராயன் குளம் ஏ-9 வீதியை அண்டிய பகுதியில் தனியார் ஒருவருக்குச் சொந்தமான 10 ஏக்கர் காணியை வவுனியா வடக்கு பிரதேச செயலர் வழங்க மறுத்து வருகின்றார் என்ற குற்றச்சாட்டு காணிக்கு உரிமை கோருபவரால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

> 25 ஏக்கர் வரையில் காணி இருந்துள்ளது. ஏனைய பகுதியை வேறு சிலர் அபகரித்துள்ளனர். தற்போது எஞ்சியுள்ள பத்து ஏக்கர் காணியைத் தமது சொந்தக் காணி என இதுவரை நான்கு பேர் உரிமை கோரியுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக வவுனியா வடக்குப் பிரதேச செயலர் க.பரந்தாமனிடம் கேட்டபோது அவர் கூறியதாவது:-

மேற்படி காணிக்கு ஒருவரல்ல, நான்கு பேர் உரிமை கோருகின்றனர். இந்தக் காணி ஏ- 9 வீதியின் அருகில் அமைந்துள்ளது. இந்தக் காணியில் மரக்காரன் குளம் இருந்து அழிவடைந்துள்ளது. இதில் 25 ஏக்கர் வரையில் காணி இருந்துள்ளது. ஏனைய பகுதியை வேறு சிலர் அபகரித்துள்ளனர். தற்போது எஞ்சியுள்ள பத்து ஏக்கர் காணியைத் தமது சொந்தக் காணி என இதுவரை நான்கு பேர் உரிமை கோரியுள்ளனர்.

இந்தக் காணி அரச காணி என்று நில அளவைத் திணைக்களம் கூறியுள்ளது. இந்தக் காணி எதிர்காலத்தில் பொதுத் தேவைகளுக்கே பயன்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் காணி தொடர்பாக பிரதேச செயலருக்கு பலரால் எச்சரிக்கை விடுக்கப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (க-6)

## மன்னாரில் காற்றுடன் பலத்த மழை

> வீதியோரங்களில் கழிவு நீர் செல்லத்தக்க வகையில் கால்வாய்கள் அமைக்கப்பட வேண்டும்.

மன்னார்,ஏப். 17

மன்னாரில் கடும் காற்றுடன் பலத்த மழை பெய்துள்ளது. நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சுமார் ஒரு மணி நேரம் பலத்த மழை பெய்தது. அப்போது கடும் காற்றும் வீசியது.

தற்போது மன்னாரில் சகல பகுதிகளிலுமுள்ள வீதிகள் உயர்த்தப்பட்டு 'கொங்கிறீட்' வீதிகளாக மாற்றப்பட்டுள்ளன. ஆனால் கழிவு நீர் வாய்க்கால்கள் அமைக்கப்படாமையால் மழை நீர் தாழ்வான பகுதிகளில் தேங்கி நிற்கின்றது. இதனால் தாழ்வான பகுதிகளிலுள்ள வீடுகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

எனவே வீதியோரங்களில் கழிவு நீர் செல்லத்தக்க வகையில் கால்வாய்கள் அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை இங்கு எழுந்துள்ளது.

இவற்றை அமைக்காத நிலையில் எதிர்வரும் காலங்களில் மழை பெய்யும் போது மக்கள் இடம் பெயர வேண்டிய நிலை ஏற்படும் என்று இங்கு வசிக்கும் மக்கள் தெரிவித்துள்ளனர். (க-12)

# செயலகப் பணிக்காக 70 கி.மீ.அலைச்சல்

## துணுக்காய் மக்களின் அவலம்

அக்கராயன்,ஏப். 17

தமது தேவைகளின் பொருட்டு முல்லைத்தீவு அரச செயலகத்துக்கு 70 கிலோ மீற்றர் தூரம் பயணிக்க வேண்டியுள்ளதாகத் துணுக்காய் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மீள்குடியமர்ந்த இந்த மக்கள் பல்வேறு தேவைகளின் பொருட்டும் முல்லைத்தீவு அரச செயலகத்துக்குத் தினமும் செல்ல வேண்டிய நிலையில் உள்ளனர். ஆனால் அதிக பணம் செலவழித்து இவர்கள் 70 கிலோ மீற்றர் தூரம் செல்ல வேண்டிய அவல நிலையில் உள்ளனர்.

இதனால் இவர்கள் தமது தொழில்களை இழப்பதோடு, நேரத்தையும் விரயம் செய்கின்றனர். அத்துடன் அதிகளவு பணமும் செலவாகின்றது.

ஆண் துணைகளின்றி குழந்தைகளுடன் வாழுகின்ற பெண்களின் நிலை மிகவும் பரிதாபகரமாக உள்ளது. இவர்கள் தமது தேவைகளை நிறைவு செய்வதற்கு செயலகத்துக்கு பல தடவைகள் செல்ல வேண்டிய நிலையிலும் உள்ளனர்.

எனவே துணுக்காய்ப் பிரதேச செயலகத்தின் ஊடாக தமது தேவைகளை நிறைவு செய்வதற்கு ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு இவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-18)

## கல்விளான் குளத்தில் புனரமைப்புப் பணிகள்

அக்கராயன்,ஏப்.17

கல்விளான் குளத்தின் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இந்தக் குளத்தின் மூலமாக 500 ஏக்கர் நிலப் பரப்புக்கு நீர்ப்பாசனத்தை மேற்கொள்ள முடியும்.

தற்போது இதன் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்று வருவதனால் சிறுபோக நெற்செய்கைகள் இடம்பெறவில்லை. மேலும் கல்விளான் கிராம மக்கள் காட்டு யானைகளால் பெரும் தொல்லைகளுக்கும், அச்சத்துக்கும் ஆளாகி வருகின்றனர்.

இங்கு இதுவரை மின்சார வசதிகள் ஏற்படுத்தப்படவில்லை. மின்சார வசதிகள் ஏற்படுத்தித் தரப்பட்டால் தான் தாம் யானைகளின் தொல்லைகளிலிருந்து ஓரளவு விடுபட முடியுமென இங்கு வசிக்கின்ற மக்கள் கூறுகின்றனர். தற்போது இந்தக் கிராமத்தில் 195 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. துணுக்காயிலிருந்து இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் இந்தக் கல்விளான் கிராமம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

### புதிய நிர்வாகிகள்

மன்னார் உப்புக்குளம் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்துக்குப் புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கான கூட்டம் கடந்த 8 ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தலைமையில் இடம்பெற்றது.

தலைவராக மன்னார் உப்புக் குளத்தைச் சேர்ந்த வை.எம். சதாத் என்பவர் போட்டியின்றித் தெரிவானார்.

இந்தக் கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கென கட்டடம் அமைப்பதற்கு காணியும், 40 லட்சம் ரூபா நிதியும் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-12)

## அதிபரை நியமிக்குமாறு அபிவிருத்திச் சங்கம் மனு

அக்கராயன்,ஏப். 17

அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்துக்கு அதிபர் ஒருவரை நியமிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தெரிவித்துப் பாடசாலையின் அபிவிருத்திச் சங்கத்தினர் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமாகிய மு.சந்திரகுமாரிடம் மனுவொன்றைக் கையளித்துள்ளனர்.

> 153 மாணவர்கள் இந்தப் பாடசாலையில் கல்வி கற்று வருகின்றனர். 15 மாதங்களுக்கு மேலாக அதிபர் ஒருவரை வலயக் கல்விப் பணிமனை நியமிக்கவில்லை.

2011 இல் இருந்து அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம் தனிப்பாடசாலையாக இயங்கி வருகின்றது. 153 மாணவர்கள் இந்தப் பாடசாலையில் கல்வி கற்று வருகின்றனர். 15 மாதங்களுக்கு மேலாக அதிபர் ஒருவரை வலயக் கல்விப் பணிமனை நியமிக்கவில்லை. மூன்று தடவைகளுக்கு மேல் அதிபர் நியமிக்கப்படுவார் என வலயக் கல்விப் பணிமனை உறுதி அளித்திருந்தும் அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்துக்கு அதிபர் நியமிக்கப்படவில்லை.

அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்துக்கு 05 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டுள்ளதை பெற்றோர்களாகிய நாம் பெரிதும் பாராட்டுகிறோம். எமது பாடசாலைக்கு அவசரமாக அதிபர் ஒருவரை நியமிக்கும் முயற்சிகளுக்கு தங்களின் உதவியை எதிர்பார்க்கின்றோம்.

அதிபர் ஒருவரை நியமிப்பதன் மூலமே கிளிநொச்சிக் கல்வி வலயத்தில் உள்ள 107 பாடசாலைகளில் ஒன்றாகிய அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்தின் எதிர்கால வளர்ச்சி உள்ளதோடு புதிய கட்டடத்தைப் பாடசாலைக்குரிய காணியில் அமைத்துக் கொள்ளவும் வழியேற்படும்.

இந்த நிலையில் அதிபர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கின்றோம் என்று அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-18)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# போக்குவரத்து ஆணைக்குழு ஊழியரை தனியார் பஸ் ஒன்றியம் மிரட்டியதாம்

## யாழ். அரச அதிபர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஏப்.17

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் ஊழியரை, வடமாகாண தனியார் பஸ் உரிமையாளர் ஒன்றியத்தைச் சேர்ந்தவர்கள் மிரட்டியதாக யாழ்.மாட்ட அரச அதிபர் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில், வடமாகாண தனியார் பஸ் உரிமையாளர் ஒன்றியத்தின் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலிலேயே அரச அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:- கடந்த 11 ஆம் திகதி புதுவருட தினத்துக்காக அதிகளவான பயணிகள் யாழ்.நகருக்கு வந்திருந்தனர். கிளிநொச்சி செல்வதற்காக 75 பயணிகள் வரையில் யாழ்.நகரில் நின்றனர். இதனையடுத்து கிளிநொச்சி பேருந்து ஒன்றை நண்பகல் 12 மணிக்கு முன்னர், தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவின் ஊழியர் புறப்படச் சொல்லியுள்ளார்.

இதனை ஆட்சேபித்த வடமாகாண தனியார் பஸ் உரிமையாளர் ஒன்றியத்தினர் தமது தீர்மானத்தின் படி நண்பகல் 12 மணிக்கு பின்னரே கிளிநொச்சி பேருந்தை எடுக்க முடியும் என்று கூறியுள்ளனர். அத்துடன் தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவின் ஊழியரை மிரட்டியுள்ளனர். இந்த விடயம் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். (ம-5)

# விடுவிக்கப்பட்ட இடங்களுக்கு 4,000 குடும்பங்கள் வரவில்லை

யாழ்ப்பாணம், ஏப்.17

யாழ்.மாவட்டத்தில் பாதுகாப்பு அமைச்சால் அனுமதிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் உரிய வசதிகள் இன்மையால் 4 ஆயிரம் குடும்பங்கள் வரையில் இன்னமும் மீளக்குடியமரவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

யாழ். மாவட்டத்தில் மீளக் குடியமர்வதற்காக அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களில் மக்கள் அடிப்படை வசதிகள் இல்லாத காரணத்தால் மீளக்குடியமர்வதற்கு பின்னடித்து வருகின்றனர்.

பெரும்பாலானவர்கள் வீடு, மின்சார வசதி எதுவுமில்லாததால் மீளக்குடியமராமல் இருக்கின்றனர்.

இவ்வாறு யாழ்.மாவட்டத்தில் 4 ஆயிரம் குடும்பங்கள் வரையில் மீளக்குடியமராமல் உள்ளன. அத்துடன் மீள்குடியேற்ற அமைச்சால் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு உதவிப் பொருள்கள், நிவாரணங்கள் வழங்கப்பாடாமையால் மக்கள் மீளக்குடியமர்வதில் பின்னடித்து வருகின்றனர்.

மாவட்ட செயலகத்தால் மீள்குடியேற்ற அமைச்சு நிவாரணம் கோரி கடிதங்கள் அனுப்பட்ட போதும் உரிய பதில்கள் கிடைக்கவில்லை என்று சுட்டிக் காட்டப்பட்டது.

அரச சார்பற்ற நிறுவனங்களும் தமது தேவைக்கேற்ப வசதிக்கேற்ப உதவிகளை வழங்குகின்றனரே தவிர மக்களின் தேவைகள் அறிந்து அதற்கேற்ப உதவிகள் வழங்குவதில்லை. இதனாலேயே மக்கள் மீளக்குடியமர பின்னிற்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-5)

# இளைஞனைக் காணவில்லை ஆணைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,ஏப்.17

தொண்டமானாறைச் சேர்ந்த இளைஞர் ஒருவரைக் காணவில்லை என்று மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

செல்லமுத்து சிவலிங்கம் (வயது 18) என்ற இளைஞனே இவ்வாறு காணாமல் போயுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது. கடந்த 13 ஆம் திகதி இவர் காணாமல் போனதாக நேற்றுத் திங்கட்கிழமை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 14 ஆம் திகதி வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்திலும் இந்த இளைஞன் காணாமல் போனமை தொடர்பாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டது. (ம-3)

# பயிர்ச் செய்கை பாதிப்பு விவரங்கள் திரட்டல்

அச்சுவேலி, ஏப்.17

யாழ்.மாவட்ட விவசாயிகளுக்கு இந்த வருடம் பயிர்ச் செய்கையில் ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பான விவரங்கள் விவசாய சம்மேளனங்கள் ஊடாகத் திரட்டப்படுகின்றன.

யாழ்.மாவட்டத்தில் இந்த வருடம் நெற் பயிர்ச் செய்கை, வெங்காயச்செய்கை மற்றும் மரக்கறிப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளுக்குப் பல்வேறு வகையான பாதிப்புக்கள் ஏற்பட்டிருப்பதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மழை வெள்ளம் மற்றும் உரிய வேளையில் மழையில்லாத வரட்சி நிலைமை என்பனவற்றால் நெற்பயிர் சேதமடைந்தமையால் கணிசமான அளவு பாதிப்பு நெற்பயிர்ச் செய்கையில் ஏற்பட்டுள்ளது.

காலநிலை முரண்பாடு, கடும் வெப்பம், இரவு வேளையில் கடும் பனி, பனிப் புழுத்தாக்கம் என்பனவற்றால் வெங்காயப் பயிர் கருகி மடிந்தமையால் தோட்டங்களில் அறுவடை செய்யப்படாமல் கைவிடப்பட்ட நிலையில் உள்ளன.

இந்த வகையில் வெங்காயப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த வருடம் பெப்ரவரி முற்பகுதியில் இருந்து மரக்கறி வகைகளின் விலை திடீரென வீழ்ச்சியடைந்தது. அதேநேரம் எரிபொருளின் விலை அதிகரித்தது. இதனால் முட்டைக் கோவா உள்ளிட்ட சில பயிரினங்களை உரிய முறையில் பராமரிக்காமலும் விளைச்சலை அறுவடை செய்யாமலும் தோட்டங்களில் கைவிடவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

இதனால் மரக்கறிப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் பெரும் பொருளாதார நெருக்கடிக்கு ஆளாகினர்.

பயிர்ச் செய்கை நடவடிக்கையில் பாதிப்புக்கள் ஏற்பட்ட எதிர்பாராத சூழ்நிலையால் குறிப்பிட்ட பயிர் மூலம் பெறப்படும் வருமானத்தை நம்பிப் பெற்றுக் கொண்ட கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாமலும் பெரும் சிரமம் அடைந்தனர்.

இந்த நிலையில் விவசாய சம்மேளனங்கள் விவசாயிகளுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் குறித்த விவரங்களைத் திரட்டி வருகின்றன. (ம-11)



வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் ஆலய அறநெறிப் பாடசாலை திறப்பு விழா நேற்று இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமராட்சி இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி மகிந்தினி விஜயகுமார் பாடசாலைக் கட்டடத்தை நாடா வெட்டித் திறந்து வைக்கிறார். (ம-253)

# ஆனைவிழுந்தான் மயானத்தை துப்புரவு செய்யக் கோரிக்கை

பருத்தித்துறை-மருதங்கேணி பிரதான வீதியில் உள்ள ஆனைவிழுந்தான் பொது மயானத்தை துப்புரவு செய்து தருமாறு பருத்தித்துறை பிரதேச சபையிடம் கோரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது.

இந்த மயானத்துக்குள் குப்பை கூளங்கள் கொட்டப்படுவதால் மயானத்தில் துர்நாற்றம் வீசுவதுடன் தகனக் கிரியைகளை மேற்கொள்ளச் செல்லும் மக்கள் பெரிதும் அசௌகரியத்தைச் சந்திக்க வேண்டியுள்ளது என்றும் கூறப்பட்டது.

இந்த மயானத்தை துப்புரவு செய்து, அதற்கு கதவு ஒன்று பொருத்தப்பட்டால் குப்பை கூழங்கள் கொட்டப்படுவது தடுக்கப்படும் என்றும் மயானமும் சுத்தமாக பாதுகாக்கப்படும் என்றும் கூறப்பட்டது.

மயானத்தை அசிங்கமாக வைத்திருக்காமல் துப்புரவாக வைத்து பாதுகாக்கப்பட வேண்டியது அவசியமாகும் எனவும் உரியவர்கள் இதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் கேட்கப்பட்டுள்ளது. (ம-8)


# களை கட்டும் அட்சய திருதியை

யாழ்ப்பாணத்தில் அட்சய திருதியை முன்னேற்பாட்டு நடவடிக்கைகளில் யாழ்.நகர் நகைக்கடைகளின் உரிமையாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் முதல் தடவையாக 2010 ஆம் ஆண்டு அட்சய திருதியை கொண்டாடுவதை நகைக் கடை உரிமையாளர்கள் நடைமுறைப்படுத்தினர்.

அட்சய திருதியை இந்தியாவில் பெரிதாகக் கொண்டாடப்படுவது வழக்கம்.இது போல கடந்த இரு வருடமாக யாழ்ப்பாணத்திலும் கொண்டாடப்படுகின்றது. அட்சய திருதியையின் போது பெருமளவில் பொது மக்கள் நகைகளை வாங்குவதில் ஆர்வம் காட்டியிருந்தனர்.

எதிர்வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம் பெற்றவுள்ள அட்சய திருதியை தினத்துக்காக யாழ். நகரின் நகைக்கடைகளின் உரிமையாளர்கள் விசேட ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-14)



யாழ். நகரிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் நேற்று முன்தினம் காலை கடும் மழை கொட்டித்தீர்த்தது. முற்பகல் 11.30 மணியளவில் கொட்டித்தீர்த்த மழையினால் நகரின் தாழ்ந்த இடங்களில் வெள்ளம் தேங்கியது. கழிவு நீர் வாய்க்கால்கள் முட்டியதால் வெள்ளம் வீதிகளை மூடியது. யாழ். முற்றவெளியில் தேங்கிய வெள்ளம் பிரதான வீதியை மூடிப்பாய்ந்தது. இந்தப் பகுதியில் தொடர்ந்து வெள்ளம் தேங்குகின்றபோதும் அதனை சீர்செய்ய மாநகர சபை இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. (த-17)

# பருத்தித்துறையில் மூடப்பட்டுள்ள வீதியைத் திறக்கக் கோரிக்கை

வடமராட்சி, ஏப்.17

பருத்தித்துறை நகரம் அபிவிருத்தி அடைய வேண்டுமானால் நகரில் மூடப்பட்டுள்ள நூறு மீற்றர் தூர வீதியைத் திறந்துவிட வேண்டும்.

வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவரும், பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவருமான த.சந்திரதாஸ் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

வடமராட்சி வடக்குப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலென்ரின் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இதன்போதே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறைக் கடற்கரை வீதி பிரதான வீதியில் கொட்டடிப் பிள்ளையார் கோயில் நீதிமன்ற வீதிச் சந்தி தொடக்கம் துறைமுகம் வரையிலான வீதி இன்னமும் திறக்கப்படாமல் முடக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான எரிபொருள் விற்பனை நிலையத்தைக் கையளிக்குமாறு பல தடவைகள் கோரிக்கை விடுத்தோம். அதனை இன்னமும் மீள எமக்குத் தரவில்லை. அதேபோல் தபால் நிலையமும் இன்னமும் தபால் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படவில்லை.

நீதிமன்றச் சந்தி தொடக்கம் துறைமுகம் வரையான நூறு மீற்றர் வீதியைத் திறந்து, எரிபொருள் நிலையத்தைச் சங்கத்திடமும் தபாலகத்தை தபால் திணைக்களத்திடமும் ஒப்படைக்க வேண்டும்.

இந்தக் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டால்தான் பருத்தித்துறை நகரம் அபிவிருத்தி அடையும். நகரின் அபிவிருத்தியை கருத்தில் கொண்டு இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றுங்கள்- என்றார்.

பருத்தித்துறை நகர கிராம சேவையாளர் ஆ.தயாநிதி "கொட்டடி, துறைமுகம், விநாயகர் முதலியார் தெரு ஆகிய பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர்வு இன்னமும் நடைபெறவில்லை. அந்தப் பகுதிகளில் 25 குடும்பங்கள் மீளக்குடியமர்வுக்கு விண்ணப்பித்துள்ளன.

இது தொடர்பான விவரங்கள் யாழ்.அரச அதிபருக்கு ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அந்தக் குடும்பங்கள் தங்களை மீளக்குடியமர்த்துமாறு வற்புறுத்துகின்றன'' என்று கூறினார்.

இந்தக் கோரிக்கைகளுக்குப் பருத்தித்துறைப் பிரதேச செயலர் இ.த. ஜெயசீலன் பதிலளிக்கையில், ''இது உயர் பாதுகாப்பு வலயம் சம்பந்தப்பட்டது. இது தொடர்பாக அமைச்சு மட்டத்திலேயே முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். எனினும் இது குறித்து மீண்டும் யாழ். அரச அதிபரின் கவனத்துக்கு கொண்டு வருவோம்''. - என்றார். (ம-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கீகாரம் கிடைத்தது

## சிரியா செல்கிறது போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு


ஜெனீவா, ஏப்.17

சிரியாவில் போர் நிறுத்தத்தைக் கண்காணிப்பதற்கு தமது பணியாளர்களை அனுப்புவதற்கு ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்தப் பணியாளர்கள் குழு நேற்று சிரியாவுக்குப் புறப்பட இருந்தது.

சிரியாவின் சில பகுதிகளில் போர் நிறுத்த மீறல் சம்பவங்கள் இடம்பெறுவதாக குற்றம் சுமத்தப்படும் நிலையில் இவர்களின் பயணம் அமைந்துள்ளது.

ஜனாதிபதி பஷார் ஆசாத்தின் அரச படையினருக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையிலான மோதல்களை முடிவுக்குக் கொண்டு வந்து சமாதானத்தை ஏற்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



ஏற்கனவே கொபி அனான் தலைமையிலான சமாதானக் குழு சிரியாவில் சமாதான முயற்சிகளை முன்னெடுத்து வருகின்ற நிலையில் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் பயணம் அந்த நாட்டில் அமைதி திரும்ப வழிவகுக்கும் என நம்பப்படுகின்றது.

போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்ட பின்னரும் இரு தரப்பினரும் மோதல்களில் ஈடுபட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சிக்ஸர்' அடித்த தென்னாபிரிக்க அதிபர்

ஜோகன்னஸ்பர்க், ஏப்.17

தென்னாபிரிக்க அதிபர் ஜேக்கப் ஜுமா, அடுத்த வாரம் ஆறாவது முறையாக, திருமணம் செய்து கொள்கிறார். தென்னாபிரிக்க அதிபர் ஜுமாவுக்கு 70 வயதாகும் நிலையில், மூன்று மனைவியர் உள்ளனர். ஏற்கனவே இவர், 1998இல் ஒரு மனைவியை விவாகரத்து செய்துள்ளார். மற்றொரு மனைவி தற்கொலை செய்து கொண்டார். 2009இல் அதிபரான பிறகு, இரண்டு முறை திருமணம் செய்து கொண்டுள்ளார். இந்த நிலையில், அடுத்த வாரம், குளோரியா போங்கிலி என்ஜிமா என்ற பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள உள்ளார்.

## அமெரிக்காவில் சூறாவளி



அமெரிக்காவில், நேற்று முன்தினம் கன்சாஸ், அயோவா, நெப்ரெஸ்கா, ஒக்லஹாமா உள்ளிட்ட பகுதிகளை, சூறாவளி தாக்கியது. இதனால், இந்த பகுதிகளில், மரங்களும், மின் கம்பங்களும் சாய்ந்தன. பல வீடுகள் சேதமடைந்தன. முன்னெச்சரிக்கையாக மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டனர். ஒக்லஹாமாவின் உட்வார்டு பகுதியில், புயலில் சிக்கி, இரண்டு குழந்தைகள் உட்பட, ஐந்து பேர் பலியாயினர். அயோவாவின் க்ரெஸ்டன் பகுதியில், ஒரு மருத்துவமனை இந்த புயலில் சேதமடைந்தது.

## விசாரணைகளை ஆரம்பிக்கிறது பாகிஸ்தான்

இஸ்லாமாபாத், ஏப்.17

பாகிஸ்தானின் வட மேல் பிராந்தியத்தில் உள்ள சிறைச்சாலை ஒன்றில் ஆயுததாரிகள் நடத்திய தாக்குதல் குறித்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

சிறைச்சாலை மீது ஆயுததாரிகள் தாக்குதல் நடத்தியதை அடுத்து 400க்கும் அதிகமான கைதிகள் தப்பிச் சென்றுள்ளனர்.தப்பிச் சென்றவர்களுள் பாரதூரமான குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய கைதிகளும் அடங்குகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பாகிஸ்தானின் முன்னாள் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப்பை கொலைசெய்வதற்கு முயற்சித்த குற்றவாளிகளும் இங்கு இருக்கின்றனர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

2 மணித்தியாலங்களுக்கும் அதிகமாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதுடன், பொலிஸாரும் இதன் போது காயமடைந்துள்ளனர்.

சிறைச்சாலை வளாகத்துக்குள் பிரவேசித்த ஆயுததாரிகள் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தியதுடன், துப்பாக்கிப் பிரயோகத்திலும் ஈடுபட்டனர். இந்தத் தாக்குதல்களுக்கு பாகிஸ்தான் தலிபான்கள் உரிமை கோரியுள்ள நிலையில் இதனை உறுதிப்படுத்த முடியவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வருடம் ஆப்கானிஸ்தான் சிறைச்சாலை ஒன்றில் தலிபான்கள் நடத்திய தாக்குதல்களில் 470 கைதிகள் தப்பிச் சென்றமை குறிப்பிடத்தக்கது.


உ
சிவமயம்

சிவாகமவிசாரத், சித்தாந்த வித்தகர், கலைமாமணி
டாக்டர் சாம்பசிவஸ்ரீ.சோமாஸ்கந்த குருஜீ
[கனடா] அவர்களின்
ஆகமச்சித்திரங்கள் – பாகம் .3

நூல் வெளியீட்டுவிழா அழைப்பு

காலம்:-
17.04.2012 செவ்வாய்க்கிழமை பிற்பகல்:- 2.00 முதல் 4.00 வரை
இடம்:-
நல்லூர் சிவன்கோயில் மண்டபம்
தலைமை:-
பேராசிரியர் இலக்கியகலாநிதி பிரம்மஸ்ரீ ப.கோபாலகிருஷ்ணஐயர்
[வாழ்நாள் பேராசிரியர்.யாழ்.பல்கலைக்கழகம்]
ஆசியுரை:-
சிவஸ்ரீ.ச.மகேஸ்வரக்குருக்கள் [இலங்கை இந்துமதகுருபீடாதிபதி]
அருளுரை:-
ஸ்ரீலஸ்ரீ.சோமசுந்தர ஞானசம்பந்ததேசிக பரமாச்சார்யசுவாமிகள்
[நல்லை ஆதீனம்]
நூல் ஆய்வுரை:-
வேதாகமபாஸ்கரன் சிவஸ்ரீ.தா.மகாதேவக்குருக்கள்
[தர்மசாஸ்தாகுருகுலம்]
சிறப்புரை:-
கலாநிதி மா.வேதநாதன் [இந்துநாகரிகத்துறை தலைவர், யாழ்.பல்கலைக்கழகம்]

ஆகம ஆய்வு நூலாகிய ஆகமசித்திரங்கள் பாகம் மூன்றினை அந்தணர்கள் அறிஞர்கள், சிற்பாசாரியார்கள், ஸ்தபதிகள், கட்டடக் கலைவல்லுனர்கள் யாவரும் பெற்றுச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நூற்பிரதி ஒன்று 400/=



கலைமாமணி டாக்டர் S.S.குருஜி
ரொரன்டோ, கனடா.

(C/917)(2-6-9)


## தப்பிக்கும் முயற்சியால் விபரீதம்

தன்னைக் கைது செய்வதற்கு வந்த பொலிஸாரிடமிருந்து தப்பித்துக் கொள்வதற்காக 17 ஆவது மாடியிலிருந்து வெளியே தொங்கிய 18 வயது யுவதியொருவர் கைநழுவி கீழே விழுந்து உயிரிழந்த சம்பவம் கிழக்கு லண்டனில் இடம்பெற்றுள்ளது.

வழிப்பறிக் கொள்ளைச் சம்பவம் ஒன்று தொடர்பில் சிறைத் தண்டனைக்கு உள்ளான நிலையில் அவருக்கு மீளவும் முன்னிலையாவதற்கு வழங்கப்பட்ட தவணை கடந்த நிலையில், அவரை கைது செய்ய பொலிஸார் அவர் தங்கியிருந்த வீட்டை முற்றுகையிட்ட போதே மேற்படி விபரீதம் இடம்பெற்றுள்ளது.





ALLIANCE FRANCAISE DE JAFFNA
The Only Official French Language Centre in Jaffna
*Learn French the French Way*
யாழ்ப்பாணத்தில் உள்ள Alliance Francaise de Jaffna இன் ஊடாக French மொழி வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன.
ஆர்வமுள்ள எவரும் கற்றுக்கொள்ளலாம்.
வகுப்புக்கள்: சனி, ஞாயிறுகளில்...
புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.
61, Kachcheri - Nallur Road, Jaffina Phone: 021 2228093
E-mail: alliance jaffina@yahoo. com
(றக்கா வீதியும் கச்சேரி - நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடி வீடு)
மேலதிக விவரங்களை நேரில் / தொலைபேசியினூடாக பெறலாம்.
(17026) (2-6-9)



ஓம் சக்தி ஜோதிடம்
வித்துவான் சுவாமி ஜோதிடக்காரர்
தொ.இல : 075 4031386
எந்தப் பிரச்சினைகளுக்கும் விரைவாக தீர்வு கிடைக்கும்
கைரேகை, நாமநட்சத்திரம், சாதகம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், இல்ட்சுமி வசீகரம், திருமணயோகம், குழந்தைப்பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமை யின்மை, எதிரிகள் கண்திருஷ்டி, பிரிந்தவர்கள் ஒன்று கூடல், பெண்கள் பிரச்சினை ... பேய், குடிவெறி பிரச்சினைகளுக்கு 100% தீர்வுண்டு
... இன், 112/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சபாபதி பாஸ்கரன்



கொட்டடியைப் பிறப்பிடமாகவும், இல.23, கண்ணாபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதி பாஸ்கரன் நேற்று (16.04.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.04.2012) புதன்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.23, கண்ணாபுரம்,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## யோசை வென்சன் சிலாஸ் (யேசு)



நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட யோசை வென்சன் சிலாஸ் நேற்று (16.04.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மனுவல் யோசை - ஆனந்தம் தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான குருஸ் - சூசானம் தம்பதியரின் அன்பு மருமகனும் மேரி மாசி றெட் இன் அன்புக் கணவரும் அன்ரன் ஜெயராஜ், சுபாதினி, அன்ரன்ஜீவராஜ், அன்ரன்யூஜின், ஜெஸ்மினி ஆகியோரின் பாசமிகு தந்தையு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

நாரந்தனை தெற்கு,
ஊர்காவற்றுறை.

தகவல்:
குடும்பத்தினர்

# கிணற்றினுள் சடலம்

சாவகச்சேரி கெருடாவில் பகுதியில் ஆள்களற்ற காணியிலுள்ள கிணற்றில் ஆண் ஒருவரின் சடலம் காணப்படுவதாக அந்தப் பகுதி மக்களால் பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டுள்ளது. குறித்த பிரதேசத்தில் துர்நாற்றம் வீசுவதை அவதானித்தவர்கள் கிணற்றினுள் அழுகிய நிலையில் சடலமொன்று மிதக்கக் கண்டுள்ளனர். தகவல் கிராம சேவையாளர் ஊடாக பொலிஸாருக்கு வழங்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு நேற்றிரவு வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். கிணற்றில் நீர் அதிகம் காணப்படுவதால் இன்று காலையே சடலத்தை மீட்க முடியுமென்று தெரிவிக்கப்பட்டது.

(ங-10-9-136)


## வாகனம் விற்பனைக்கு

Townace CR-42, Original Diesel, Flat roof, Five door, autogiar, Full Option




(விலை 34,50,000/=)
விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 0772637436

## வாகனம் விற்பனைக்கு

ISUZU 250 FULL BODY ALUMINUM 14½ BRAND NEW WHITE COLOUR மொடல் NKR 66L NP LG XXXX

தொடர்புகளுக்கு:- 0777721740

## தவறிவிட்டது

உடுவில் கிழக்கு, கற்பகப்பிள்ளையார் கோயி லடியைச் சேர்ந்த இராசகுலம் ரஜீவன் என்பவருடைய தே.அ. அட்டை (872970738V) மற்றும் முக்கிய ஆவணங்கள் இணுவில் சந்திக்கும் பாலாவோடை பகுதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (சன்மானம் வழங்கப்படும்) தொடர்பு: 077 5735933

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1978 மிருகசீரிடம் 3ஆம் பாதம் 7 இல் செவ்வாய் 47 3/4 பாவம் UK. P.R உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு : 021 4918299, 0750980545

## வீடு வாடகைக்கு

யாழ். புங்கன்குளம் சந்தியிலுள்ள மூன்று அறை, 2 வரவேற்பறை, சமையலறை, குளியலறையுடன் வீடு வாடகைக்கு (நிறுவனங்களுக்கும் கொடுக்கப்படும்).

தொடர்பு: 077 993 7402

## மணப்பெண்கள் தேவை

வடமராட்சி இந்து கௌரவ குடும்பம் 1969 மிருகசீரிடம் 3 ஆம் பாதம் செவ்வாய் குற்றமில்லை மூன்று சுற்று கிரக பாவம் 22. கனடா PR உள்ள மணமகனுக்கும் 1961 பூரம் மொத்த கிரக பாவம் 58இல் செவ்வாயில் பங்கு 26, தாரமிழந்தவர் கனடா PR உள்ள மணமகனுக்கும் பொருத்தமான மணப் பெண்கள் தேவை. கனடாவில் இருப்பவர்களுக்கு முன்னுரிமை. பூரண விவரங்களுடன் பிற்பகல் 3 மணிக்கும் 9 மணிக்கும் இடையில் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:- 071 286 4418


# மரண அறிவித்தல்

## திருமதி நாகமணி இரத்தினம்

நெல்லியடியைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமணி இரத்தினம் நேற்று (16.04.2012) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினத்தின் அன்பு மனைவியும், சரஸ்வதி (கனடா), அன்னபூரணம் (சாவகச்சேரி), பாலசிங்கம் (சிங்கப்பூர்), குலசிங்கம் (ஆஸ்திரேலியா), தர்மலிங்கம் (சுவிஸ்), செல்வக்குமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், சோமசுந்தரம் (கனடா), பாலசிங்கம் (சாவகச்சேரி), திருமதி பாலசிங்கம் (சிங்கப்பூர்), திருமதி குலசிங்கம் (ஆஸ்ரேலியா), திருமதி தர்மலிங்கம் (சுவிஸ்), திருமதி செல்வகுமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.04.2012) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"வளர்மதி",
கென்ஸ்மன் லேன்,
சாவகச்சேரி.

(14635) (2,6,9)

தகவல்:
க.பாலசிங்கம் (மருமகன்)


உதயன்
விளம்பரத்
தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111


# கண்ணீர் அஞ்சலி



தியாகராசா
பிரபாகரன்



சுந்தரலிங்கம்
மயூரன்

அன்பின் உறைவிடமே தோழமையின் ஒளிவிளக்கே
– ஆறாத்துயரினில் தவிக்கின்றோம்
பாசமுள்ள நண்பர்களே என்றுமே உங்கள் இனிய
– நினைவுகளை சுமந்தே வாழ்ந்திடுவோம்
என்றும் உங்கள் துயர நினைவுகளுடன் இடை நடுவே
– பிரிந்த எம் உயிர் நண்பர்களே

உள்நாட்டு, வெளிநாட்டு
நண்பர்கள்
பாண்டியந்தாழ்வு

# மரண அறிவித்தல்



## திருமதி சிவயோகம் சிதம்பரப்பிள்ளை (கனகம்மா)

குடாரப்பு, நாகர் கோயிலை நிரந்தர வதிவிடமாகவும், வீரபத்திரர் கோயிலடி, சாரையடி, புலோலியை தற்காலிக வதிவிடமாகக் கொண்ட வருமான திருமதி சிவயோகம் சிதம்பரப்பிள்ளை (14.04.2012) சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு சிதம்பரப்பிள்ளையின் அன்பு மனைவியும் பசுபதி (இளைப் பாறிய உதவி அரச அதிபர் - மருதங் கேணி, இளைப்பாறிய செயலாளர் பருத்தித்துறை, கரவெட்டி பிரதேச சபைகள்), தவமணிதேவி (கனடா), முருகேசு (இளைப்பாறிய உத்தியோகத்தர் - பருத்தித்துறை நகரசபை - கனடா), குலசிங்கம் (உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் - யாழ்ப்பாணம், முன்னாள் மன்னார் நகர, வேலணை பிரதேச சபைகளின் செயலாளர்), சிவபாதசுந்தரம் (உதவி சுங்க அத்தியட்சகர் கொழும்பு), மனோன்மணி, இராசசிங்கம் (பழனி-டென்மார்க்) ஆகியோரின் அன்புத்தாயும் சிவயோகம், சதாசிவம் (கனடா), பவானி (கனடா), சாந்தநாயகி (யாழ்.பல்கலைகழக உத்தியோகத்தர்), தயாமணி (கனடா), நடராசா (இளைப்பாறிய பருத்தித்துறை நகரசபை, பிரதேச சபைகளின் செயலாளர், சாந்தி (டென்மார்க்) ஆகியோரின் அன்புமாமியும் சிவசங்கர் (ஆஸ்திரேலியா), சிவபாஸ்கரி (அடிலைட் பல்கலைக்கழகம் - ஆஸ்திரேலியா), மணிசேகர் (கனடா), வதனா (பிரதேச செயலகம், பருத்தித்துறை), மணிமாறன் (கனடா), சங்கீதா (கனடா), மணிவண்ணன் (கனடா), சைலஜா (கனடா), நவீனன் (கனடா), தனீபன் (கனடா), றோசனா (ரொரண்டோ பல்கலைக்கழகம்), ரஜீவன் (பதுளை பல்கலைக்கழகம்), ரஜித்தா (யாழ்.பல்கலைக் கழகம்), சிந்துஜா (ரொரண்டோ பல்கலைக்கழகம்), பாஹினி (ரொரண்டோ பல்கலைக் கழகம்), கல்யாணி (பிரதேசசபை, பருத்தித்துறை), கௌரி (பிரதேச செயலகம், பருத்தித் துறை), சிவகுமரன் (ஆசிரியர், மன்னார்), டென்மார்க்கைச் சேர்ந்த அருண், அருணியா, அஸ்வின், அபிநயன், ஜனனி, தயாளினி, சந்திரசேகரம் (நீதிமன்றம் - பருத்தித்துறை), நித்தியா, மணிவண்ணன், சிவாந்தினி, பிரகாஷ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும். சங்கவி, வாசவி, மாதுரி, நிதுரா, அமீரா, அபிராமி, நவியா, அஸ்மி ஆகியோரின் அருமைப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.04.2012) செவ்வாய்க்கிழமை சாரையடியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புலோலி ஆனை விழுந்தான் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வீரபத்திரர் கோயிலடி,
சாரையடி, புலோலி

தகவல்:
சி.பசுபதி (மகன்)


## Tender Notice

Palmyrah Research Institute Kaithady-Jaffna
Palmyrah Development Board

Ministry of Traditional Industries and Small Enterprise Development Invites bids from reputed manufactures/dealers/suppliers for the Palmyrah Research Institute (PRI)

Following are the packages requested for:

| Package | Bid title |
|---|---|
| 1 | Supply of office furniture |
| 2 | Supply of computers,printers,Photo copy machine, fax machine and scanners |
| 3 | Supplying & Fitting of Sign Board. |
| 4 | Supply of tipping trailer. |
| 5 | Supply of water bowser |
| 6 | Supply of air-conditions |
| 7 | Supplying & Fitting of intercom facility |
| 8 | Providing Security Services |
| 9 | Supplying of Plastic coated wire mesh |

Specifications, particulars and requirement details of the above can be collected from the Head Office,
Palmyrah Development Board, N.H.D.A building Kandy Road, Jaffna from 23/04/2012 to 30/04/2012.
The last date for submission of sealed tender document is 3.00pm of 02.05.2012. Tenders will be opened immediately thereafter, the same day.
Please note that the package number quoted in the cage should be clearly mentioned on the top of the left hand corner of the postal cover.

**Chairman,**
**Palmyrah Development Board,**
**N.H.D.A Building 1st Floor, Kandy Road, Jaffna.**
**Tel:021 222 2034, Fax: 021 2224154**

(C/926) (2-6-9)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது சனசமூக நிலையத்தின் ஆரம்பத் தலைவராகவும் தற்போதய நிர்வாக ஆலோசகராகவும் சேவையாற்றிவரும்

**திரு. பசுபதி இராசேந்திரம்**

அவர்கள் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக இருந்து தற்போது அகில இலங்கை சமாதான நீதிவானாக நீதியமைச்சினால், நியமனம் செய்யப்பட்டு கடந்த 23.03.2012ஆம் திகதி யாழ். மாவட்ட நீதிவான்

**உயர் திரு. மா. கணேசராஜா**

அவர்கள் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துள்ளார். அவரை மனமார பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

ஊரெழு கிழக்கு. நிர்வாகிகள்: வளர்பிறை சன சமூக நிலையம்.

# நல்லூர் பிரதேச சபை

## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் - 2012

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் நல்லூர் பிரதேச சபையினால் கோரப்படுகின்றன. கீழ்க்குறித்த வேலைகளுக்கான கேள்வி வைப்புப்பணத்தையும், கேள்விப்பத்திரக் கட்டணத்தையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் செலுத்தி படிவத்தை பெற்றுக்கொள்ளலாம்.

01. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி 17.04.2012 தொடக்கம் 02.05.2012 பி.ப. 4.00 மணிவரை
02. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 03.05.2012 மு.ப. 10.00 மணிவரை
03. கேள்வி திறக்கப்படும் திகதி 03.05.2012 மு.ப. 10.30 மணிக்கு (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்).
04. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு உரிமை உண்டு.
05. இக்ராட் (ICTAD) வழிகாட்டல்களின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கல்வி ஆற்றலை கொண்டிருக்க வேண்டும்.
06. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தக்காரர் வலுவுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப்புத்தகத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.
07. கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியை ''தலைவர்/ செயலாளர், நல்லூர் பிரதேச சபை, கருவப்புலம் வீதி, கொக்குவில்'' என்ற விலாசத்துக்கு பதிவுத் தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப் பெட்டியிலோ இடவேண்டும். மறு பிரதியை, ''பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்'' என்ற விலாசத்துக்கு 2ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைக்கு அமைவாக கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.
08. மேலதிக விவரங்களை நல்லூர் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| தொ. இல | வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் (VAT,NBT நீங்கலாக) | இருக்க வேண்டிய ஆகக்குறைந்த ICTAD தரம் |
|---|---|---|---|---|
| 01 | கொக்குவில் மஞ்சவனப்பதி பின்வீதி | 2860.00 | 500.00 | M10/C10 |
| 02 | இணுவில் கொண்டலடி 1ம் ஒழுங்கை | 4865.00 | 500.00 | M10/C10 |
| 03 | கோண்டாவில் சோலையம்மன் வீதி | 2160.00 | 500.00 | M10/C10 |
| 04 | கோண்டாவில் வீரபத்திரர் வீதி | 3350.00 | 500.00 | M10/C10 |
| 05 | கொக்குவில் முதலி கோவில் 1ம் ஒழுங்கை | 3825.00 | 500.00 | M10/C10 |
| 06 | கே.கே.எஸ் குறுக்கு வீதி கோண்டாவில் ( உப தபாலகத்திற்கு அருகில்) | 2120.00 | 500.00 | M10/C10 |
| 07 | கே.கே.எஸ் 2ம் குறுக்கு வீதி கோண்டாவில் ( சிவா மெடிக்கலுக்கு அருகில்) | 5420.00 | 500.00 | M09/C10 |
| 08 | நெல்லியடி வீதி – கொக்குவில் | 2650.00 | 500.00 | M10/C10 |
| 09 | செங்குந்தா முன் வீதி – கல்வியங்காடு | 1550.00 | 500.00 | M10/C10 |
| 10 | கருவப்புலம் குறுக்கு வீதி – கொக்குவில் | 4080.00 | 500.00 | M10/C10 |
| 11 | பூம்புகார் பிரதான வீதி – அரியாலை | 21050.00 | 500.00 | M07/C08 |
| 12 | பூநாரி 1ம் ஒழுங்கை – கொக்குவில் | 2210.00 | 500.00 | M10/C10 |
| 13 | பூநாரி 2ம் ஒழுங்கை – கொக்குவில் | 4350.00 | 500.00 | M10/C10 |
| 14 | குமரக்கோட்டம் பெரிய ஒழுங்கை – கோண்டாவில் | 5150.00 | 500.00 | M09/C10 |
| 15 | பிடாரி அம்மன் கோவில் வீதி – வண்ணார் பண்ணை | 4150.00 | 500.00 | M10/C10 |
| 16 | நாராயணா வீதி – கோண்டாவில் | 12950.00 | 500.00 | M08/C09 |
| 17 | நாகலிங்கம் வீதி – கொக்குவில் | 4000.00 | 500.00 | M10/C10 |
| 18 | பாடசாலை வீதி – திருநெல்வேலி | 13000.00 | 500.00 | M08/C09 |

நல்லூர் பிரதேச சபை,
கொக்குவில்.

திரு. ப. வசந்தகுமார
தவிசாளர்.

### மண்டலாபிஷேக பூர்த்தி

கந்தரோடை அருள்மிகு அருளானந்தப் பிள்ளையார் கோயில் புனராவர்த்தன கும்பாபிஷேகத்தில் எதிர்வரும் 19 ஆம் திகதி வியாழக்கிழமை மண்டலாபிஷேக பூர்த்தியும் சங்காபிஷேகமும் நடைபெறும். அன்றையதினம் அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்படும்.

## காணி தேவை

சங்கத்தானை ஆரம்ப பாடசாலை அருகிலோ A9 வீதி, சாவகச்சேரி மீசாலை அருகிலோ மலிவாகக் காணி தேவை.

தொடர்பு : 077 693 5338

(17095)(45,6,7)

## மோட்டார் சைக்கிள் தேவை

நல்ல நிலையிலுள்ள பாவித்த மோட்டார் சைக்கிள்கள் தேவை. விற்க விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொ.பே. 0777705307

## 50 ஆவது பிறந்த நாள் வாழ்த்து
## செல்வராஜா பிரதிபா
### 17.04.2012



இன்று தனது இல்லத்தில் ஐம்பதாவது பிறந்த தினத்தை கொண்டாடும் திருமதி செல்வராஜா பிரதிபா அவர்கள் இன்னும் பல்லாண்டு காலம் வாழ மேன்மேலும் வாழ்த்துகின்றோம்.

71/12 கலாசாலை வீதி,
திருநெல்வேலி;
யாழ்ப்பாணம்.

வாழ்த்துபவர்கள்,
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்கள்



செல்வன்

## தியாகராசா பிரபாகரன்

புங்குடுதீவு, 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, மோதறையை வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராசா பிரபாகரன் நேற்று முன்தினம் (15.04.2012) ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற தியாகராசா - லோகேஸ்வரி தம்பதியரின் புதல்வனும், சுகன்யா, வசீகரன், பாஸ்கரன், சதீஸ்கரன், திவாகரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் அகிலதரன், பத்மினி ஆகியோரின் மைத்துனரும், சினேகா, கிசானா, தேனிகா ஆகியோரின் மாமனும் கோபிகா, அபிசா, கவினயா ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக இன்று (17.04.2012) மட்டும் இன்பம் மலர்ச்சாலையில் (கோம்பயன் மணல் இந்து மயானம் அருகில்) மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் வைக்கப்பட்டு பின்னர் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகனக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

897, 6/5, அளுத்மாவத்தை வீதி,
மோதறை, கொழும்பு - 15.

தகவல்:
ந. கோணேஸ்வரன் (சிவா),
அம்பலவாணர் வீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம்.

## சுந்தரலிங்கம் மயூரன்



(யாழ். மத்திய கல்லூரி 2007 கணித பிரிவு பழைய மாணவனும் H.N.D. In Software Development at IIS City Campus, Jaffna)

புங்குடுதீவு, 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், பாண்டியன்தாழ்வு, சுண்டுக்குழியை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரலிங்கம் மயூரன் நேற்று முன்தினம் (15.04.2012) ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் சுந்தரலிங்கம் (S.P.)- காலஞ்சென்ற சதாலெட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், கஜேந்திரனின் (யாழ். தொழில்நுட்பக் கல்லூரி, Q.S. English Medium மாணவன்) அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(17.04.2012) செவ்வாய்க்கிழமை பி.ப. 3.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

15, சந்தனமாதா கோயில் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வசந்தகாலத் தாக்குதல்

## ஆப்கனில் தலிபான்களின் அதிரடி

காபூல்,ஏப்.17

மேற்குலக தூதரகங்கள், நேட்டோ தலைமையகம், நாடாளுமன்றம் மீது தலிபான்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

ஆப்கான் தலைநகர் காபூலிலும் இன்னும் சில மாகாணங்களிலும் தலிபான் இயக்கத்தினர் ஒருங்கிணைந்த வகையில் தொடர் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

வெளிநாட்டுத் தூதரகங்கள், நேட்டோவின் தலைமையகம், ஆப்கன் நாடாளுமன்றம் என முக்கிய பல இடங்களை இலக்கு வைத்து நடத்தப்பட்டுள்ள இந்தத் தாக்குதல்கள் கடந்த ஆறு மாதங்களில் அங்கு நடந்துள்ள மிகப்பெரிய தாக்குதல்களாகக் கருதப்படுகின்றன.

இந்தத் தாக்குதல்களில் குறைந்தது 14 ஆயுததாரிகள் கொல்லப்பட்டுள்ளனர், காயமடைந்துள்ள 23 பேரில் ஆப்கானிய காவல்துறையினர் 14 பேரும் 9 பொதுமக்களும் அடங்குகின்றனர்.

காபூலிலும் லோகார், பாக்டியா மற்றும் நங்கார்ஹார் ஆகிய மாகாணங்களிலும் தமது தற்கொலைக் குண்டுதாரிகள் பலர் தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர் என்று தலிபான் அறிவித்துள்ளது.



மேற்குலக சக்திகளின் மீது தலிபானின் வசந்த காலத் தாக்குதல்களின் ஆரம்பகட்டம் தான் இது. இந்தத் தாக்குதல்கள் இப்போதைக்கு முடிவுக்கு வரப்போவதில்லை.

காபூலில் மட்டும் 7 இடங்களின் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக நேட்டோ தெரிவித்துள்ளது.

பிரிட்டன் தூதரகத்தின் காவலாளிகள் கண்காணிப்பு கோபுரத்தின்மீது இரண்டு ரொக்கெட்டுகள் தாக்கியுள்ளதாகவும் பிரிட்டன் தூதரக அதிகாரிகளின் வீடொன்றின் மீது இன்னொரு ரொக்கெட் குண்டொன்று வீழ்ந்து வெடித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

கிழக்கு காபூல் பகுதியில் பிரெஞ்சுப் படை வாகனத் தொடரணியின் மீதும் கிரேக்க இராணுவ படைத் தளமொன்றின் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. பதிலுக்கு பிரான்ஸ் மற்றும் கிரேக்கப் படைகளும் சரமாரியான இயந்திரத்துப் பாக்கித் தாக்குதல்களை நடத்தியுள்ளன.

மத்திய காபூலில் கடுமையான பாதுகாப்புக் கெடுபிடிகள் மிக்க வெளிநாட்டு தூதரகங்கள் அமைந்துள்ள வளாகத்தில் பல பகுதிகளிலிருந்தும் தலிபான் ஆயுததாரிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

ஆயுததாரிகள் நாடாளுமன்றத்தைத் தாக்க முற்பட்டபோது, அங்கிருந்த எம்.பிக்களும் படையினருடன் சேர்ந்துகொண்டு பதில் துப் பாக்கித் தாக்குதல்களில் ஈடு பட்டுள்ளனர்.

ரஷ்யத் தூதரகத்தின் மீதும் ரொக்கெட் தாக்குதல்கள் நடந்துள்ளன. அமெரிக்கத் தூதரகத்தின் மிக அருகில் தாக்குதல் நடந்துள்ளதாகவும் தூதரகம் மூடப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் கூறுகின்றனர்.

ஜலலாபாத் மாகாணத்தில் கிழக்கு நகரொன்றில் தற்கொலை குண்டுதாரிகள் விமான நிலையத்தின் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளனர் என்று காவல்துறை கூறுகிறது. அங்கு அமெரிக்க விமானப் படைத்தளம் தாக்கப்பட்டுள்ளது.

அதிபர் ஹமீட் கர்சாயின் மாளிகை அமைந்துள்ள அதியுயர் பாதுகாப்பு வளாகத்தின் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளதாக தலிபான் கூறுகிறது. ஆனால் அதனை சுயாதீனமாக உறுதிப்படுத்த முடியவில்லை.

''மேற்குலக சக்திகளின் மீது தலிபானின் வசந்த காலத் தாக்குதல்களின் ஆரம்ப கட்டம் தான் இது'' என்று தலிபான் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார்.

# இந்தோனேசியாவில் மீண்டும் நில அதிர்வு



ஜகார்த்தா, ஏப்.17

இந்தோனேசியாவின் சுமாத்ரா தீவில் நேற்றுமுன்தினம் 6.4 ரிக்டர் அளவிலான நில அதிர்வு ஒன்று உணரப்பட்டுள்ளது.

உலக அளவில் அடிக்கடி நில அதிர்வு ஏற்படும் நாடுகளில் ஒன்று இந்தோனேசியா. கடந்த 11ஆம் திகதி சுமாத்ரா தீவின் பாண்டா ஏஸ் பகுதியில் கடல் பகுதியில் பயங்கர நில அதிர்வு ஏற்பட்டது. ரிக்டரில் 8.7 புள்ளியாக பதிவான பயங்கர நில அதிர்வால் இந்தியா உட்பட 28 நாடுகளுக்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டு, பின்ணர்வாபஸ்பெறப்பட்டது.

இதைத்தொடர்ந்து நில அதிர்வுகள் தொடர்ந்த வண்ணம் உள்ளன. எனினும், பெரிய அளவில் உயிர்ச் சேதமோ பொருள்சேதமோ ஏற்படவில்லை.

இந்த நிலையில், சுமாத்ரா தீவில் நேற்றுமுன்தினம் நில அதிர்வு ஏற்பட்டது.

இது ரிக்டரில் 6.4 புள்ளியாக பதிவானது. ஆனால், சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட வில்லை.

ஏனெனில், ரிக்டரில் 7 புள்ளிக்கு கீழ் ஏற்படும் நில அதிர்வு மிதமானதாக கருதப்படுவதாக வானிலை மற்றும் புவியியல் மையம் தெரிவித்தது.

மேலும், நில அதிர்வால் எந்தவொரு சேதமும் ஏற்படவில்லை என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த 2004ஆம் ஆண்டில் சுமத்ராவில் ஏற்பட்ட பயங்கர நில அதிர்வினால் சுனாமி ஏற்பட்டு இந்தியா உட்பட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 1.7 லட்சம் பேர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# 3 பெண்களை சாப்பிட்டவர் சிக்கினார்

ரியோ டி ஜெனிரோ,ஏப்.17

பிரேசிலில் 3 பெண்களை கொடூரமாக கொலை செய்து அவர்களது உடல்களை சமைத்துச் சாப்பிட்ட 3 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர். பிரேசிலில் உள்ள கரன்ஹன்ஸ் நகரத்தில் கடந்த 2008ஆம் ஆண்டு ஜெசிகா என்ற இளம்பெண் காணாமற் போனார். அதன் பின் அடுத்தடுத்து சில பெண்கள் காணாமல் போயினர்.

அவர்களை பொலிஸார் தீவிரமாக தேடி வந்தனர். இந்த நிலையில் ஜோர்ஜ் பெல்ட்ராவ் நெக்ரோமான்டி டா சில்வீரா என்ற 51 வயது நபரை பொலிஸார் கைது செய்தனர். விசாரணையில் திடுக்கிடும் தகவல்கள் வெளியாகின. இது குறித்து பொலிஸார் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:-

மதத்தின் மீது அதீத நம்பிக்கை கொண்டவர்களை செக்ட் பிரிவினர் என்று கூறுகின்றனர். இவர்கள் மக்களிடம் இருந்து வேறுபட்டவர்களாக இருப்பார்கள். கைது செய்யப்பட்ட ஜோர்ஜ் பெல்ட்ராவ் இந்தப் பிரிவைச் சேர்ந்தவர் என்று கூறப்படுகிறது.

மேலும், ''மூளை கோளாறின் ரகசியம்'' என்ற தலைப்பில் புத்தகம் எழுதியுள்ளார். அதில் செக்ட் பிரிவினரின் நடவடிக்கைகள் குறித்து நிறைய தகவல்கள் எழுதியுள்ளார். ஜெசிகா உட்பட 3 பெண்களைக் கொடூரமான முறையில் கொலை செய்து சமைத்துச் சாப்பிட்டுள்ளார்.



இவருக்கு உடந்தையாக இருந்த அவரது மனைவி இசபெல் கிறிஸ்டினா ஒலிவீரா டா சில்வா மற்றும் புரூனா கிறிஸ் டினா ஒலிவீரா (25) ஆகிய 2 பெண்கள் கைது செய்யப் பட்டனர். அவர்களுடன் 5 வயது சிறுமியும் இருந்தாள். அவள் கொலை செய்யப்பட்ட ஜெசிகாவின் மகளாக இருக்கலாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வடகொரிய அதிபரின் முதல் உரை

வடகொரியா புதிய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கிம் ஜோங்-உன், முதல்முறையாக, பொது மக்கள் முன்பு தோன்றி உரையாற்றினார்.

வடகொரியாவின் தலைவராக இருந்த இரண்டாம் கிம்ஜோங், கடந்த ஆண்டு டிசம்பரில் இறந்ததை தொடர்ந்து புதிய தலைவராக அவரது இளைய மகன் கிம்ஜோங்-உன் பதவியேற்றார். கடந்த சில நாள்களுக்கு முன்பு வட கொரியா தனது ரொக்கெட்டை விண்ணில் செலுத்த முயன்று தோல்வியுற்றது.

இந்தநிலையில், வட கொரியாவை நிறுவிய இரண்டாம் கிம்-சங்கின் 100ஆவது பிறந்த நாளையொட்டி, புதிய தலைவரும் பேரனுமான கிம்ஜோங்-உன் , தலைநகர் பையோங்க் நகரில் உள்ள முக்கிய சதுக்கத்தில் உரையாற்றினார். இதில் பல்லாயிரக் கணக்கானோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக இரண்டாம் கிம் ஜோங்க் தனது பதவி காலத்தில் இதுவரை பொது மக்கள் முன்பு தோன்றி உரையாற்றியது கிடையாது. தற்போதைய புதிய தலைவராக உள்ள கிம்ஜோங்-உன், முதல் முறையாக பொதுமக்கள் முன்பு தோன்றி உரையாற்றினார்.இவரது பேச்சை அரச தொலைக்காட்சி நேரடியாக ஒளிபரப்பியது.

நமது நாட்டுக்கு அணு ஆயுத மிரட்டல் என்பது இனி நடக்காது. அதற்கு முன்பாக இராணுவத்தை பலப்படுத்த வேண்டும்-என்றார்.

## பதியப்படாத போர்க் குற்றம்...



யேமனில் அந்த நாட்டு அரசு தீவிர வாதிகளை இல்லா தொழிக்கும் போர்த் திட்டம் ஒன்றை நடைமுறைப் படுத்தி வருகிறது. அதன்போது கைதுசெய் யப்பட்ட தீவிரவாதிகள் பொதுமக்கள் முன்னிலையில் சுட்டுக்கொல்லப் படுகின்றனர்.

# தீவிரவாதிகளை களையெடுக்கும் யேமன்

சனா,ஏப்.17

யேமனில் அந்த நாட்டு அரசபடை தீவிரவாதிகளை தேடி அழிக்கும் நடவடிக்கையை துரிதப்படுத்தியுள்ளது.

ஒவ்வொரு கிராமம் கிராமமாக இந்தத் தேடுதல் பணிகள் தொடர்வதாக அங் கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த 5 நாள்களில் மட்டும் தேடுதலின்போது நடைபெற்ற தாக்குதல்க ளில் 183 தீவிரவாதிகள் உட் பட 222 பேர் பலியானதாக பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர். யேமனின் தெற்கு பகுதியில் லோடர் அமைந் துள்ளது.

இந்தப் பகுதியை தேடுதலுக்கு மத்தியிலும் மீண்டும் கைப்பற்றும் முயற் சியில் அல்குவைதா தீவிரவாதிகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந் நிலையில், லோடரை சுற்றியுள்ள பல் வேறு பகுதிகளில் தீவிரவாதிகள் நாச வேலையில் ஈடுபட்டனர். அப்போது, பொலிஸார், துணை ராணுவத்திருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே நடந்த பயங்கர துப்பாக்கிச் சண்டையில் 183 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

மேலும், பல பகுதிகளில் நடந்த சண்டையில் இராணுவத்தினர் 14 பேரும், மக்கள் 24 பேரும் பலியாகினர். இதற்கிடையில், உள்ளூர் அல் குவைதா தலைவர் அப் தல் ரயுப் என்பவரை இராணுவத்தினர் கைதுசெய்துள்ளனர்.

மேலும், அபயான் மாகாணத்தில் லோடர் மற்றும் முதியா தவிர பிற பகுதிகள் அல்குவைதாவின் கட்டுப் பாட்டில் இருந்து விடுபட்டு விட்டன என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவிரவாதத்தை ஒழிப்பதில் இந்திய அரசு கடும் உறுதி

## மன்மோகன்சிங் தெரிவிப்பு



புதுடில்லி, ஏப்.17
தீவிரவாதச் செயல்களைத் தடுப்பதிலும், முறியடிப்பதிலும் மத்திய அரசு உறுதியுடன் உள்ளது. மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளால் தான், காஷ்மீரில் தலைவிரித்தாடிய வன்முறைகள் குறைந்துள்ளன.

இந்தியாவின் உள்நாட்டுப் பாதுகாப்பில் மத்திய, மாநில அரசுகள் இணைந்து செயற்பட வேண்டும் என்று இந்தியப் பிரதமர் வேண்டுகோள் விடுத்தார்.

புதுடில்லியில் நேற்று பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் அனைத்து மாநில முதல்வர்கள் பங்கேற்கும் மாநாடு நடைபெற்றது. இதில் அவர் பேசுகையில் தெரிவித்ததாவது:

கடந்த ஆண்டில் தீவிரவாதத்தைத் தடுப்பதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகள் திருப்திகரமாக அமைந்துள்ளன. இருப்பினும் வடகிழக்கு மாநிலங்களின் பாதுகாப்பு குறித்த கவலை தொடர்ந்து கொண்டேதான் இருக்கின்றது - என்றார். எனினும் தற்போதைய மாநாடு எதிர்காலத்தில் தீவிரவாதத்தைத் தடுக்க உதவிகரமாக இருக்கும் என்றும் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் மாநில முதல்வர்கள் அனைவரும் ஒன்றாகப் பங்கேற்கும் மாநாடு வருடத்துக்கு ஒருமுறை நடத்தப்படுகிறது. இந்த வருடத்துக்கான மாநாட்டைப் பெப்ரவரியில் நடத்த முடிவு செய்யப்பட்டிருந் தது. ஆனால், 5 மாநிலத் தேர் தல் மற்றும் நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் காரணமாக மாநாடு ஏப்ரலுக்கு பிற்போடப்பட்டிருந்தது.

இந்த மாநாட்டில் உள்நாட்டு பாதுகாப்புக் குறித்து விவாதிக்கப்படும் என்று அரசு அறிவித்தது. ஆனால், மாநாட்டில் தேசிய தீவிரவாதத் தடுப்பு நிலையம் அமைப்பது என்ற மத்திய அரசின் சர்ச்சைக்குரிய முடிவு குறித்து விரிவான விவாதம் நடத்த வேண்டும் என்று கோரிக்கை எழுந்தது.

தமிழக முதல்வர் ஜெயலலிதா, மேற்கு வங்காள முதல்வர் மம்தா பானர்ஜி உட்பட பல மாநில முதல்வர்கள் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தினர். இதைப் பரிசீலித்த மத்திய அரசு, தேசிய தீவிரவாதத் தடுப்பு நிலைய விவகாரம் தொடர்பாக விவாதிக்க அடுத்த மாதம் 5 ஆம் திகதி முதல்வர்கள் மாநாடு நடத்தப்படும் என்று அறிவித்தது.

இந்த நிலையில், உள்நாட்டு பாதுகாப்பு நிலவரம் குறித்து விவாதிக்க முதல்வர்கள் மாநாடு டில்லியில் நேற்று நடைபெற்றது. இந்த மாநாட்டில் தமிழக முதல்வர் ஜெயலலிதா உட்பட பல்வேறு மாநிலங்களின் முதல்வர்கள் கலந்து கொண்டனர்.

இதேவேளை மாநாட்டில் மேற்கு வங்காள முதல்வர் மம்தா பானர்ஜி கலந்து கொள்ள மாட்டார் என்று கொல்கத்தாவில் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. அவர் சார்பில் மேற்கு வங்காள நிதி அமைச்சர் அமித் மித்ரா பங்கேற்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## பஸ்ஸில் தீ: பயணிகள் 4 பேர் சாவு

குவாஹட்டி, ஏப்.17
அசாமில் காஸிரங்கா தேசிய பூங்கா அருகே சுற்றுலா பஸ் ஒன்று தீப்பிடித்து விபத்துக்குள்ளானதில் 4 பயணிகள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். டிரக் ஒன்றுடன் மோதியதையடுத்து பஸ் தீப்பிடித்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தின்சுகியாவில் இருந்து குவாஹட் டிக்கு அந்த பஸ் சென்று கொண்டிருந்த போது நேற்று அதிகாலை 4.30 மணியளவில் இந்தச் சம்பவம் நடந்தது.

பஸ்ஸில் இருந்த ஏனைய பயணிகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (வ)

### காபூல் தாக்குதலின் எதிரொலி

## பாதுகாப்பைப் பலப்படுத்துமாறு பாதுகாப்பு அமைச்சர் உத்தரவு

டில்லி, ஏப்.17
ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலில் நேற்று முன்தினம் நண்பகலில் நடைபெற்ற தலிபான்களின் திடீர் தாக்குதலையடுத்து, இந்தியாவில் ராணுவ பாதுகாப்பை பலப்படுத்துமாறு பாதுகாப்புத் துறை அமைச்சர் ஏ.கே. அந்தோனி உத்தரவிட்டுள்ளார்.

ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலில் அமெரிக்கா, பிரிட்டன் தூதரகங்கள் அமைந்துள்ள இடங்கள் மற்றும் நாடாளுமன்றம் ஆகிய இடங்களில் தலிபான் தீவிரவாதிகள் நேற்று முன்தினம் கடும் தாக்குதலை மேற்கொண்டனர். இதில் காவலர்கள் உட்பட 19 பேர் உயிரிழந்தனர்.

இதனையடுத்து, காபூலின் பல இடங்களில் குண்டு வெடிப்புச் சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன. அந்த நாட்டு நாடாளுமன்றம் ரொக்கெட் குண்டுகள் வீசித் தாக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் காலை நடைபெற்ற இந்தத் தீவிரவாதத் தாக்குதலால் காபூலில் பெரும் பதட்டம் நிலவி வருகிறது. எனவே, தலிபான்களின் அடுத்த கட்ட தாக்குதல் இந்தியாவின் மீது திரும்பலாம் என்பதால், இந்திய ராணுவ பாதுகாப்பை மேலும் பலபடுத்துமாறு பாதுகாப்புத் துறை அமைச்சர் உத்தரவிட்டுள்ளார். (வ)

# ஈழத்தமிழர் மீது தி.மு.க. அக்கறை கொள்ளவில்லை

## இப்படிக் கூறுகிறார் நாராயணசாமி



இலங்கை செல்லும் நல்லெண்ணக் குழுவில் இருந்து கடைசி நேரத்தில் விலகுவதாக தி.மு.க. அறிவித்திருப்பது இலங்கைத் தமிழர்கள் மீது அவர்கள் அக்கறை கொள்ளவில்லை என்பதையே காட்டுகிறது என்று மத்திய அமைச்சர் நாராயணசாமி தெரிவித்துள்ளார்.

மத்திய அமைச்சர் நாராயணசாமி நேற்றுக் காலை சென்னையில் இருந்து விமானம் மூலம் புதுடில்லிக்குப் புறப்பட்டுச் சென்றார். அப்போது விமான நிலை யத்தில் அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது:-

டில்லியில் இருந்து இலங்கைக்குச் செல்லும் நல்லெண்ண குழுவில் தி.மு.க. சார்பில் டி.கே.எஸ். இளங்கோவன் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வார் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. டி.கே.எஸ். இளங்கோவனும் இந்தப் பயணம் இலங்கை வாழ் தமிழர்களுக்கு பயனுள்ளதாக அமையும் என்று கருத்துத் தெரிவித்திருந்தார்.

ஆனால் கடைசி நேரத்தில் இலங்கை செல்லும் நல்லெண்ணக் குழுவில் இருந்து தி.மு.க. இடம்பெறாது என்று அறிவித்தது கவலை அளிக்கிறது. இந்த செயல் பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்கள் மீது அவர்கள் அக்கறை கொள்ளவில்லை என்பதையே காட்டுகிறது.

மத்திய அரசு நல்லெண்ணக் குழுவை இலங்கைக்கு அனுப்புவதன் மூலம் இந்தியா - இலங்கை நல்லுறவை நீடிப்ப தோடு உலகில் பல்வேறு நாடுகளின் ஆதரவையும் இதன் மூலம் பெறு கின்றது.

இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மின்சாரம், வீட்டு வசதி, உணவு, உடை உள்ளிட்ட வாழ்வாதாரத்திற்காக இந்தியா உதவி செய்வதன் மூலம் அண்டை நாடுகளின் உதவி இலங்கைக்குக் கிடைக்கப்பெறாமல் தடுக்கும் ராஜதந்திர வழிமுறையாகும்.

ரஷ்யா சென்றுள்ள வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா கூடங்குளத்தில் 2ஆவது அனல் மின் நிலையம் ரஷ்யா உதவியோடு அமைக் கப்படும் என்று கூறியிருப்பது வரவேற்கத்தக்கது. இதன் மூலம் அங்கு உற்பத்தி செய்யும் மின்சாரம் தமிழகத்திற்கு கூடுதலாக வழங்கப்படும் - என்றார். (வ)

# தொழிற்சாலைக் கட்டடம் இடிந்தது; இடிபாடுகளில் 25 பேர் சிக்கி தவிப்பு



ஜலந்தர்,ஏப்.17
பஞ்சாப் மாநிலம் ஜலந்தரில் உள்ள கம்பளி ஆடைகள் தயாரிக்கும் கட்டடம் ஒன்று இடிந்து விழுந்ததில் சுமார் 25இற்கு மேற்பட்டவர்கள் சிக்கியுள்ளனர்.

பஞ்சாப் மாநிலம் ஜலந்தரில் கம்பளம் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று செயற்பட்டு வந்தது. 4 மாடிகளைக் கொண்ட இந்த தொழிற்சாலையில் சுமார் 100 பேர் பணியாற்றிக் கொண்டிருந்தனர்.

நேற்று முன்தினம் இரவு அந்த தொழிற்சாலையில் இருந்த உணவு (பொயிலர்) ஒன்று பயங்கரச் சத்தத்துடன் வெடித் தது. அதில் அந்த 4 மாடி தொழிற்சாலை இடிந்து விழுந்தது. இடிபாடுகளுக்குள் தொழிலாளர்கள் அனைவரும் சிக்கிக் கொண்டனர்.

இதுபற்றி தகவல் அறிந்ததும் சம்பவ இடத்துக்கு தீயணைப்பு மீட்புப் படையினர் சென்று மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர். தேசிய பேரழிவு மீட்பு குழுவும் சம்பவ இடத்துக்கு விரைந்து அவர்கள் விடிய, விடிய மீட்பு பணிகளில் ஈடுபட்டனர்.

நேற்று அதிகாலை வரை கட்டட இடிபாடுகளில் இருந்து 45 தொழிலாளர்கள் உயிருடன் மீட்கப்பட்டனர். இந்த நிலையில் கடும் மழை பெய்ததால் மீட்பு நடவடிக்கைகளில் சற்று பாதிப்பு ஏற்பட்டது.

கட்டட இடிபாடுகளில் 25 - 30 பேர் வரை இன்னமும் சிக்கி இருப்பதாக தெரிய வந்துள்ளது. அவர்களை மீட்க தேசிய பேரழிவு மீட்பு குழுவினர் கடுமையாக போராடி வருகிறார்கள். காலை 8 மணியளவில் கட்டட இடிபாடுகளில் இருந்து ஒருவர் பிணமாக மீட்கப்பட்டார். எனவே பலியானவர்கள் எண்ணிக்கை மேலும் உயரும் என்று அஞ்சப்படுகிறது.

சம்பவ இடத்தில் மாவட்ட மஜிஸ்திரேட் மற்றும் உயர் பொலிஸ் அதிகாரிகள் முகாமிட்டு மீட்புப் பணிகளை முடுக்கி விட்டுள்ளனர். (வ)

## உலக வங்கி கூட்டத்தில் பிரணாப்

புதுடில்லி, ஏப்.17
அமெரிக்காவில் இன்று நடை பெறவுள்ள உலக வங்கி மற்றும் பன்னாட்டு நிதியத்தின் ஆண்டு இறுதிக் கூட்டத்தில் நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி கலந்து கொள்ளவுள்ளார்.

அதில் பங்கேற்பதற்காக நிதி அமைச்சர் 5 நாள் சுற்றுப்பயணமாக அமெரிக்கா செல்கிறார்.

இந்தக் கூட்டத்தில் கச்சா எண்ணெய் விலை உயர்வு மற்றும் பருவநிலை மாற்றம், பேரிடர் மேலாண்மை போன்ற பன்னாட்டு பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்படுகிறது.

உலக வங்கிக் கடன் உச்சவரம்பை பல ஐரோப்பிய நாடுகள் தாண்டியுள்ளன. இதனால் பன்னாட்டு நிதியத்தில் ஏற்பட்ட பாதிப்பை நிவர்த்தி செய்வது பற்றிய கலந்தாய் வுக் கூட்டத்திலும் பிரணாப் முகர்ஜி பங்கேற்கிறார். (வ)

## படகு கவிழ்ந்து 8 பேர் உயிரிழப்பு

பீகாரில் ஆற்றில் படகு கவிழ்ந்து 8 பேர் பரிதாபமாக நீரில் மூழ்கி உயிரிழந் தனர்.

பீகார் மாநிலம் பைஜலபூர் கிராமத்தின் அருகே 9 பேர் காந்தாக் ஆற்றில் ஒரு கரையிலிருந்து மற்றொரு கரைக்கு படகு ஒன்றில் சென்று கொண்டிருந்தனர். ஆற்றின் நடுபகுதியில் சென்று கொண்டிருந்த போது எதிர்பாராமல் அந்தப் படகு கவிழ்ந்தது.

சிறுவன் ஒருவனைத் தவிர ஏனைய 8 பேரும் நீரில் மூழ்கி உயிரிழந்து விட்ட தாக அஞ்சப்படுகிறது. (வ)



மத்தியப் பிரதேசம், போபாலில், காங்கிரஸ் கட்சியினருக்கான பயிற்சி முகாம் நடைபெற்றது. இதில் பங்கேற்ற மத்திய அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் மற்றும் காங்., பொதுச் செயலர் விலாஸ் முத்தம்வார் ஆகியோருக்கு, வில், அம்பு பரிசாக வழங்கப்பட்டது. தலைவர்கள் அதை மகிழ்ச்சியாகப் பெற்றுக்கொண்டனர்.

### இந்தோனேசியா நாட்டிலிருந்து

# 14 லட்சம் தொன் நிலக்கரி தமிழகத்துக்கு இறக்குமதி

தமிழ்நாட்டில் உள்ள அனல் மின்நிலையங்களுக்கு 14 லட்சம் தொன் நிலக்கரி இந்தோனேஷியாவில் இருந்து இந்த மாத இறுதியில் இறக்குமதி செய்யப்படுகிறது.

தமிழ்நாட்டில் மொத்த மின் உற்பத்தியை விட மின் தேவை அதிகமாக உள்ளது. தமிழ்நாட்டில் மொத்த மின் உற்பத்தி 8,000 மெகாவோல்ற் ஆகும். காற்றாலை, நீர் மின்நிலையங்களில் நிரந்தரமாக மின் உற்பத்தி செய்ய முடியாது.

நிரந்தரமாகக் கிடைப்பது அனல் மின் உற்பத்தி தான். அதிலும், நிலக்கரி பற்றாக்குறை ஏற்படும் போது, அனல் மின் உற்பத்தி குறைந்துவிடும். தமிழ்நாட்டில் எண்ணூர், வடசென்னை, மேட்டூர், தூத்துக்குடி ஆகிய 4 இடங்களில் அனல் மின் நிலையங்கள் உள்ளன.

இவற்றின் மூலம் மொத்தம் 2,700 மெகாவோல்ற் மின் உற்பத்தி செய்யப்படுகிறது. இதுதவிர, வள்ளூரில் சோதனை ஓட்டம் முடிந்து, விரைவில் மின் உற்பத்தி ஆரம்பிக்கப்படவுள்ளது.

**தமிழ்நாட்டில் மொத்த மின் உற்பத்தியை விட மின் தேவை அதிகமாக உள்ளது.**

இதேபோல், மேட்டூரில் சோதனைப் பணிகள் ஆரம்பமாகியுள்ளன. இதனால் அனல் மின்நிலையங்களுக்கு நிலக்கரித் தேவை அதிகரித்துள்ளது. ஏற்கனவே உள்ள ஒப்பந்தப்படி, பழைய அனல் மின் நிலையங்களுக்குப் போதுமான நிலக்கரியை இந்திய நிலக்கரி கழகம் வழங்குகிறது.

இதைவிட, நிலக்கரித் தேவை அதிகமாக உள்ளதால், தனியார் நிறுவனங்களிடம் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் தமிழ்நாடு மின்சார வாரியம் நேரடியாக நிலக்கரியை இறக்குமதி செய்து வருகிறது.

இந்தநிலையில் இந்தோனேஷியாவில் இருந்து இந்த மாத இறுதிக்குள் 14 லட்சம் தொன் நிலக்கரியை கொள்முதல் செய்ய உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுய மதிப்பீடல்

(11)

இம்மாதிரியான நிலநடுக்கங்களில் சூறாவளியில் பேராபத்துக்களில் சிக்கியவர்கள், எத்தனையோ நாள்கள் உணவு உண்ணாமல், நீர் அருந்தாமல் வெறும் கடவுள் நம்பிக்கையால் தப்பித்து வந்திருக்கிறார்கள்.

நமக்கு தன்னம்பிக்கையைத் தருவதற்கு மட்டுமன்றி ஒழுக்கமான, சுயகட்டுப்பாடான வாழ்க்கையை வாழ்வதற்கும் இயற்கையின் பேராற்றல் மீதான நம்பிக்கை நமக்கு அவசியமே.

**தியானம்**

தன்னம்பிக்கை குறைந்து போகும்போது தொட்டதற்கெல்லாம் அச்சம் தோன்றிவிடலாம். தன் குழந்தைக்கு விபத்து நிகழ்ந்து விடுமோ? என்று அச்சம். தன் கணவர், மனைவி சற்று தாமதமாக வந்தால் அவருக்கு என்ன ஆகியிருக்குமோ? என்று அச்சம், இவையெல்லாம் மன ஆரோக்கியக் குறைபாடுதான்.

இம்மாதிரி மன ஆரோக்கியக் குறைபாட்டைக் களைவதில் சிறந்த பங்காற்றுவது தியானம். ஆல்ஃபா என்றொரு தியான முறையில் ஒருவரது ஆழ்மன நிலைக்குச் சென்று அவரது பய எண்ணங்களை விலக்கிவிட முடியும்.

தியானம் செய்ய வேண்டும் என்று அமர்ந்தவுடன் உங்கள் மனம் உங்களிடம் வசப்பட்டு விடாது. அதனால் அலைகிற மனதை அதன்போக்கில் விடுங்கள். வீடு முழுவதும் சுற்றித் திரிந்து பின் ஒரு மூலையில் வந்து விழும் ஒரு நாய்க்குட்டியைப் போல் உங்கள் மனம் உங்கள் வசம் வந்துவிழும்.

பிறகு நல்ல மெல்லிசையையோ, இயற்கைக் காட்சி நிறைந்த ஒரு படத்தையோ நன்றாக ரசியுங்கள். உங்கள் மனம் அமைதியில் திளைத்திருப்பதாகக் கற்பனை செய்யுங்கள். உங்கள் உடலும் மனமும் நிஜமான ஓய்வில் இருப்பதாகக் கற்பனை செய்யுங்கள். நீங்கள் நிஜமான ஓய்வை அனுபவித்துக் கொண்டிருக்கிறீர்கள்.

இறைவன் கொடுத்த விலை மதிக்க முடியாத செல்வம் நம்முடைய சுவாசம். மெதுவாக மூச்சை உள்ளே இரு நாசித்துவாரத்தின் வழியாக உள்ளே இழுங்கள். அப்பொழுது உங்கள் சிந்தை முழுவதும் மூச்சிலேயே இருக்கட்டும். மெதுவாக மூச்சை இரு நாசித் துவாரத்திலும் வெளியிடுங்கள். மூச்சில் மட்டும் கவனம் செலுத்துங்கள். தொடர்ந்து 5 நிமிடம் இதைச் செய்யுங்கள்.

இப்பொழுது 'ஓம்' மந்திரத்தை உச்சரிக்கும் பயிற்சி. 'ஓ' என்ற வாய்வழியாகச் சத்தமாகச் சொல்லுங்கள். அப்பொழுது உங்கள் பிராணன் முதுகுத் தண்டின் கடைசிப் பகுதியிலிருந்து மெதுவாக மேல் ஏறி வந்து தலைப்பின் வழியாக உச்சந்தலை வந்து அப்படியே நெற்றிப் பொட்டில் இறங்கிப் பின் இருதயத்துக்கு வந்து அமர்வதாக எண்ணவும்.

இதில் 'ஓ' என்று கூறிக் கொண்டே உணர்வை முதுகுத்தண்டின் கடைசிப் பகுதியிலிருந்து உச்சந் தலைவரை பிராணன் மேல்நோக்கி வருவதாக எண்ணிப் பின் 'ம்' என்று கூறும் பொழுது உச்சந்தலையிலிருந்து மெதுவாகப் பிராணன் நெற்றிப் பொட்டின் வழியாக இருதயத்தில் வந்து அமர்வதாக எண்ணவும். இதுபோல் ஆறு முறை 'ஓ' 'ம்' உச்சரிக்கவும்.

பின் மூச்சினால் பிராணன் முதுகுத் தண்டின் பின் பகுதியிலிருந்து மேல் நோக்கி வந்து உச்சந்தலை நெற்றிப் பொட்டின் வழி இருதயத்தில் வருவதாக எண்ணவும். அதாவது 'ஓம்' என்று வாய்விட்டுக் கூறாமல் மூச்சினால் அந்தப் பயிற்சி உணர்வில் வருவதாக மூச்சை இழுத்து வெளியிட்டுப் பழகவும்.

பின் உங்களது இஷ்ட தெய்வம் அல்லது ஜோதி வடிவில் இறைவனை நினைத்து அவர் இருதயத்தில் அமர்ந்திருப்பதாக எண்ணி அவரிடம் உங்கள் பிராணனும் ஒடுங்கி அமைதியாக உள்ளது என்று இருதயத்தில் மனதை நிறுத்தி ஜீவனை சிந்தையில் நினைத்து 10 நிமிடம் முதல் அரை மணிநேரம் வரை இருக்கவும். பின் மெதுவாக 'ஓம் சாந்தி' சொல்லி தியானத்தை நிறைவு செய்யவும்.

மனதில் எண்ணங்கள் வரும் பொழுதெல்லாம் மெதுவாக மூச்சை இழுத்து, மெதுவாக மூச்சை வெளிவிட்டு சுவாசத்தில் கவனம் வைக்கவும். இந்தப் பயிற்சியைத் தினமும் அதிகாலையிலும் மாலையிலும் செய்து வாருங்கள். தொடர்ந்து பயிற்சி செய்தால் மிக விரைவில் நல்ல முன்னேற்றம் கிடைக்கும்.

மேலே கூறிய தியானம் ஓர் அற்புதத் தியானம். உடலில் வலு இல்லாதவர்கள், வயதானவர்கள் இதனைப் பத்மாசனமிட்டு செய்ய வேண்டிய அவசியமில்லை.

விரிப்பில் கை, கால்களை ஓர் அடி அகற்றி சாந்தி ஆசன (சவாசனம்) நிலையிலேயே மேற்கூறிய தியானத்தைச் செய்யலாம். நாற்காலியில் அமர்ந்த நிலையில் செய்யுங்கள். தவறில்லை.

உடலில் பலமுள்ளவர்கள் ஆசனம், மூச்சுப் பயிற்சிசெய்து பின் பத்மாசனமிட்டு நிமிர்ந்த நிலையில் மேற்கூறிய தியானத்தைச் செய்யுங்கள்.

இந்தத் தியானம் செய்வதால் உடல் உள்ளத்திலுள்ள டென்ஷன் நீங்கும். நாளமில்லா சுரப்பிகள் நன்கு இயங்கும். இருதயம் பலப்படும். இதயக் கோளாறு வராது.

இரத்த அழுத்தம், ஒரு தலை மண்டைவலி நீங்கும். நீரிழிவு வராது. உள்ளத்தில் பேரமைதி ஆத்மானந்தம் நிலைத்திருக்கும். மனம் உங்கள் கட்டுக்குள் இருக்கும். உயிரின் உண்மை நிலையை உணர்ந்து ஆத்மானந்தம் அடையலாம்.

மந்திரம் மதத்துக்கு அப்பாற்பட்டது. ஓம் என்று கூறினாலும் ஆமென், அல்லாஹ் என்று கூறினாலும் கிடைக்கும் ஒரே பலன் நம் இதயம் முழுவதும் ஆக்ஸிஜன் பரவி நம் உடலுறுப்புகளுக்கு எல்லாம் சிறந்த ரத்த ஓட்டம் கிடைக்கிறது. இதுவே உண்மை.

தியானத்தை நீங்களே பயிற்சி செய்ய முடியும். உங்களால் இயலவில்லை என்றால் சரியான பயிற்சியாளரைத் தேர்ந்தெடுங்கள்.

(தொடரும்)

-ஷிவேந்த்ரா

# கேள்விக்குறியான நிலையில் இன்று கலாசாரமும் சிறுவர் பாதுகாப்பும்

## புத்தாண்டு விழாவில் யாழ். அரச அதிபர்

**அபிவிருத்திகளை முன்னெடுத்துச் செல்லவேண்டிய ஒரு சமுதாயம், தனக்குள் ஏற்படக்கூடிய சீரழிவுகளை முற்று முழுதாக களைவதன் மூலமே துரிதமாக அபிவிருத்தி அடையக் கூடியதாக இருக்கும்.**

யாழ்ப்பாணம்,ஏப்.17

கலாசாரம், சிறுவர் பாதுகாப்பு என்பன இன்று பெரும் கேள்விக் குறியாகியுள்ளன. இதற்கென உத்தியோகத்தர்கள் இருந்த போதும் இவற்றைத் தவிர்க்க முடியவில்லை.

இவ்வாறு கவலை தெரிவித்தார் யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார்.

நல்லூர் பிரதேச செயலகமும், கோண்டாவில் மக்களும் இணைந்து நடத்திய புத்தாண்டு விழா பிறப்பு-இறப்பு பதிவாளர் திருமதி வ.சோம சூரியசிங்கம் தலைமையில் சனிக்கிழமை கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் மேலும் தெரிவித்ததாவது:-

சமூகச் சீரழிவுகள் அதிகரித்து வருகின்றன. இந்த நிலை கூடுதலாக கிராமப் புறங்களிலேயே காணப்படுகின்றன. சிறுவர் நன்னடத்தை, கலாசாரம், மகளிர் அபிவிருத்தி எனப் பல்வேறு நிலைகளுக்குமென ஐநூறுக்கும் மேற்பட்ட உத்தியோகத்தர்கள் பணியில் இருந்தும் அதனைக் கட்டுப்படுத்த முடியாதுள்ளது. தவறான செயற்பாடுகளால் சீரழிந்து கொண்டிருக்கும் எமது மக்களைப் பாதுகாக்க அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்படல் வேண்டும்.

அபிவிருத்திகளை முன்னெடுத்துச் செல்லவேண்டிய ஒரு சமுதாயம், தனக்குள் ஏற்படக்கூடிய சீரழிவுகளை முற்று முழுதாக களைவதன் மூலமே துரிதமாக அபிவிருத்தி அடையக் கூடியதாக இருக்கும்.

பெற்றோர்கள் இந்த விடயத்தில் தமது முழுமையான ஒத்துழைப்பை வழங்கி சமுதாய சீர்கேடுகளைத் தவிர்க்க உதவ வேண்டும்.

விளையாட்டுக்கள் ஒருவனை நிறைவான மனிதனாக வாழத் துணைபுரிகின்றன. இவ்வாறான நிகழ்வுகளூடாக எல்லோரும் தம்மிடையே சிறந்த குணாதிசயங்களை வளர்க்க முடியும்-என்றார்.

புத்தாண்டை முன்னிட்டு இடம்பெற்ற போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன. நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் உட்பட பலர் உரையாற்றினர்.

(ம-7)

## பொன்னாலையில் ஆஞ்சனேயர்

சுழிபுரம்,ஏப்.17

பொன்னாலை ஸ்ரீ வரதராசப் பெருமாள் ஆலயத்தில் புதிதாக பெரிய அளவிலான ஆஞ்சனேயர் சுவாமி உருவம் பிரதிஷ்டை செய்யப்படவுள்ளது. இதற்கான வேலைகள் விரைவாக நடைபெற்று வருகின்றன.

பக்தர்களின் வேண்டுகோளுக்கு அமைவாக இங்கு ஆஞ்சனேயர் சிலை அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-28)

## சிறந்த பெண்மணி

யாழ்ப்பாணம்,ஏப்.17

சாவற்கட்டு தாரகா விதவைகளுக்கான மலர்வு மையத்தின் தலைவி இதயராஜ்னசபா யாழ். மாவட்டத்தின் முதலாவது சிறந்த பெண்மணியாக சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (எ)

# எமது கலைகள் ஊடாகவே நாம் பண்பாட்டைப் பேணவேண்டும்

## சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் உரை

நவாலி, ஏப்.17

எமது பாரம்பரியக் கலைகள் ஊடாக பண்பாட்டைப் பேணிப் பாதுகாக்க வேண்டிய தேவை தற்போது ஏற்பட்டுள்ளது. எமது சமூகத்தில் பண்பாட்டுக் கோலங்கள் அருகி வருகின்றன.

இவ்வாறு தெரிவித்தார் சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் கே.சிவானந்தராஜா. ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையில் அண்மையில் இடம்பெற்ற தமிழ்த்தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்ததாவது:-

எமது சமூகத்தில் பண்பாடுகள் அற்றுப் போய்விட்டன. பெற்றோரைக் கனம் பண்ணுதல் முதல் ஆசிரியரைக் கனம் பண்ணுதல் வரை எதையுமே இப்போது காண முடிவதில்லை.

பாடசாலைகளில் நடத்தப்படும் தமிழ்த்தின விழாக்கள் ஊடாக இவற்றை மாணவர்களிடையே ஊட்ட வேண்டும்.

குடாநாட்டில் எங்கு பார்த்தாலும் குற்றச்செயல்கள் மலிந்து போய்விட்டன. இவற்றைக் கட்டுப்படுத்த வேண்டும். எமது பாரம்பரியத்தை இளையோருக்கு விளங்கப்படுத்துவதன் மூலமே குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த முடியும்- என்றார்.

(ம)



தென்மராட்சி பிரதேச செயலக மகளிர் தின விழா அண்மையில் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது. உதவிப் பிரதேச செயலர் செல்வி ரஞ்சனா நவரத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கலந்து கொண்டார். இந்த வருட சர்வதேச மகளிர் தின நிகழ்வில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, திருமதி சிராந்தி ராஜபக்ஷ ஆகியோரால் சிறந்த பெண்மணியாக தெரிவு செய்யப்பட்ட யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தென்மராட்சி பிரதேச மக்கள் சார்பில் கௌரவிக்கப்பட்டார். (ம-9)

## நிர்வாகிகள் தெரிவு

தென்மராட்சி, ஏப்17

சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கை புவேந்தர் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தின் பொதுக் கூட்டம் அண்மையில் யாழ். மாவட்ட நன்னடத்தை அலுவலர் சி.க.சிவகரன் தலைமையில் நடைபெற்றது. நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவும் இதில் இடம்பெற்றது.

தலைவர் வை.இராசரத்தினம், உபதலைவர் சி.மகாலிங்கம், செயலாளர் த.நிரூபன், உதவிச் செயலாளர் சி.மதீஸ்வரன், பொருளாளர் திருமதி ம.கீர்த்திநாதன். இவர்களுடன் மேலும் ஆறு பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. (ம-9)

* * *

அரியாலை வெட்டுக்குளம் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான பரிபாலனசபையின் பொதுச் சபைக் கூட்டத்தில் புதிய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் விவரம் வருமாறு;

தலைவர் பீ.ஜெயவிருதன், செயலாளர் கா.ஜெயராஜசிங்கம், பொருளாளர் க.சந்திரராஜா, உபதலைவர் மு.கெஸ்ரிபாலா, உபசெயலாளர் ந.விஜிகாந்தன். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
**தொலைபேசி:** 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789, 021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## வாய்ப்பைப் பயன்படுத்துங்கள்

இலங்கை வந்துள்ள இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவில் இருந்து அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் அதனைத் தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகமும் வெளியேறி உள்ளன. பாதிக்கப்பட்ட மக்களைச் சந்திக்கவும் உண்மையான களநிலைமையை நேரில் பார்க்கவும் குழுவின் நிகழ்ச்சி நிரலில் போதிய நேரம் ஒதுக்கப்படவில்லை என்ற காரணத்தாலேயே தமிழகக் கட்சிகள் வெளியேறின.

இலங்கை அரசு ஓர் இனவாத அரசு, அது தமிழ் மக்களை இனப்படுகொலை செய்கின்றது என்ற திட்டவட்டமான தமது நிலைப்பாட்டின் அடிப்படையில், பாதிக்கப்பட்ட மக்களின் நிலமையை நேரில் பார்ப்பதும் அவர்களது தேவைகளை அறிவதுமே இந்தக் குழுவின் முக்கிய நோக்கமாக இருந்திருக்க வேண்டும் என்றும் அதற்கே அதிகளவு நேரம் செலவிடப்பட்டிருக்க வேண்டும் என்றும் தமிழகக் கட்சிகள் நினைப்பதில் நியாயம் இருக்கிறது.

இத்தகைய ஒரு பயணத்தில் ஏற்கனவே என்ன நடந்தது என்பதைப் பற்றிய பட்டறிவும் அந்தக் கட்சிகளுக்கு இருக்கின்றது. அதனடிப்படையிலும் எடுக்கப்பட்டதே அவற்றின் முடிவு. இது நியாயமானது; ஏற்றுக்கொள்ளத்தக்கது.

ஆனால், தமிழகக் கட்சிகளே குழுவில் இடம்பெறாமல் விலகிக் கொண்டுவிட்ட பின்னர் அந்தக் குழுவினரை, ஈழத் தமிழர்களாகிய நாம் மட்டும் எப்படிச் சந்தித்துப் பேசுவது என்ற எண்ணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்திப்பில் கலந்துகொள்ளாமல் விடுவதற்குத் தீர்மானித்திருக்கிறார்கள்.

அவர்களின் இந்த முடிவை விவேகம் மிக்கது எனக் கொள்ள முடியாது. இது தொடர்பில் அவர்கள் மீள்பரிசீலனை செய்ய வேண்டும். தற்போதைய அரசியல் சூழலில், ஈழத் தமிழர்கள் தமக்கான சர்வதேச ஆதரவைக் குறிப்பாக இந்திய அரசின் நேசத்தை விரும்பியோ விரும்பாமலோ பெற வேண்டியவர்களாக இருக்கிறார்கள். எனவே அதற்கான வாய்ப்புக்களைச் சரிவரப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

தமிழகக் கட்சிகள் விலகிக் கொண்டுள்ள நிலையில், இலங்கை வரும் இந்தியக் குழுவில் தமிழகக் காங்கிரஸ் உறுப்பினர்கள் நீங்கலாக ஏனைய அனைவரும் வட இந்தியாவைச் சேர்ந்தவர்களாகவே இருக்கப் போகிறார்கள். இவர்களுக்கு ஈழத் தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பில் நேரடியாகவும் தீர்க்கமாகவும் விளக்க வேண்டியவர்கள் கூட்டமைப்பின் உறுப்பினர்களே. தெற்கைவிட வடக்குத்தான் இந்தியாவை ஆள்கிறது என்பது யதார்த்த உண்மை. அவர்களுக்கு எமது உண்மையான நிலை புரியாதவரை புதுடில்லியின் கொள்கை முடிவுகளில் மாற்றங்கள் வரமாட்டா. எனவே தத்தம் பிரதேசங்களில் அரசு புரியும் அடக்குமுறைகளையும் அதனால் தமிழர்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களையும் ஆதாரங்களுடனும் புள்ளிவிவரங்கள், ஆவணங்களுடனும் சமர்ப்பித்து உண்மையை அவர்களுக்குப் உணர்த்த வேண்டியது தமிழ் மக்கள் பிரதிநிதிகளின் கடமை.

அதேநேரத்தில் குழுவுக்குத் தலைமை தாங்கி வருபவரான சுஷ்மா சுவராஜ், பாரதிய ஜனதாக் கட்சியைச் சேர்ந்தவர். ஈழத் தமிழர் பிரச்சினையில் அக்கறை கொண்ட அந்தக் கட்சியின் வடமாநில உறுப்பினர். எதிர்காலத்தில் பாரதிய ஜனதாக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றும் நிலையில் அவருடனான உறவு தேவையானதும் பயன்மிக்கதுமாக இருக்கும். இந்தச் சந்தர்ப்பத்தில் அந்த உறவை உருவாக்கிக் கொள்வதும் இரு தரப்பு நம்பிக்கைகளைக் கட்டி எழுப்புவதும் ஈழத் தமிழர்களுக்கு மிக அவசியமானது.

இந்திய அரசு தனது நலன்கள் தாண்டிச் செயற்படாது என்றபோதும், வாய்ப்புக்களை நாமே புறந்தள்ளுவதும் நன்மை பயக்காது.

# பந்துலவின் பாட போதனை

■ வியெஸ்ரி



“கணித பாடச் சித்திக்கான உச்சப்புள்ளியை 17 ஆகக் குறைத்தும் கூட கணிதபாடப் பரீட்சைக்குத் தோற்றியோரில் 50 வீதத்தினர் மட்டுமே சித்தியடைந்தார்கள் என்றால் அதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை.

ஐ மூன்று பேர் கொண்ட ஒரு குடும்பம் சீவிப்பதற்கு மாதமொன்றுக்கு 7500 ரூபா போதும் என்கிறார் கல்வி அமைச்சர். கடைசியாக வெளிவந்த க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை முடிவுகளின் படி தோற்றியோரில் 50 வீதத்தினரே கணித பாடத்தில் சித்தி அடைந்தனர் என்று பத்திரிகைச் செய்தி கூறுகிறது. இதே பரீட்சையில் கணித பாட சித்திக்கான உச்சப் புள்ளி 17 ஆகக் குறைக்கப்பட்டது என்கிறார் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுர குமார திஸநாயகா.

கணித பாடச் சித்திக்கான உச்சப் புள்ளியை 17 ஆகக் குறைத்தும்கூட கணிதபாடப் பரீட்சைக்குத் தோற்றியோரில் 50 வீதத்தினர் மட்டுமே சித்தியடைந்தார்கள் என்றால் அதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை. நாளொன்றுக்கு 250 ரூபா வருமானம் கிட்டும் ஒரு குடும்பம், உண்டு குடித்து, வீடு வாசல் கட்டி, பிள்ளைகளை ரியூசனுக்கு அனுப்பி, உடு புடவை வாங்கி, போக்குவரத்துச் செய்து, மருந்து மாத்திரை வாங்கி, கரண்ட் பில், தண்ணீர் பில் செலுத்தி வாழ்க்கையை ஒட்ட இயலும் என்று சொல்லும் கல்வி அமைச்சரின் கீழ் இயங்கும் பாடசாலைகளில் கணித பாடம் கற்பிக்கும் திறன் வேறு எப்படி இருக்க முடியும்?

இந்த விதத்தில் கல்வி அமைச்சரிடம் கணக்குக் கற்கும் மாணவர்கள், கணித பாடத்தில் சித்திபெறத் தவறும்போது, முச்சக்கர வண்டி ஓட்டப்போய் விடுகிறார்கள். முச்சக்கர வண்டி ஓட்டி, செலவுகள் தவிர்த்து அவர்களுக்கு கிட்டும் இலாபம் - வருமானம், நாளொன்றுக்கு ஏறக்குறைய 250 ரூபா மட்டுமே. அந்த வருமானத்தில் தமது குடும்பச் செலவுகளை செய்து முடிக்க இயலாது போகும் போது, அவர்கள் கல்வி அமைச்சரின் வகுப்புக்குப் போய் எவ்வாறு 250 ரூபாவுக்குள் தமது குடும்பத்தின் ஒரு நாள் செலவுகளைச் செய்து முடிக்க முடியுமென்று ரியூஷன் எடுத்துக் கொள்ள நேரிடும்.

பாடசாலையில் கணித பாடம் என்பது மற்றைய சகல பாடங்களையும் விடவும் வேறுபட்டதொன்று. கணக்கு என்பது படிமுறையாகச் செய்யப்பட வேண்டியதாகும். அப்படிமுறையில் ஓரிடத்தில் தவறு ஏற்பட்டால் முழுக் கணக்கும் தவறானதாகிவிடும். எனவே மிக அவதானமாக, துல்லியமாக மேற்கொள்ளப்பட்டாலே சரியான விடை கிட்டும். அத்தகைய கணக்கிடுதலில் உலகில் இன்று போட்டிகள் இடம்பெறுகின்றன. அதனடிப்படையில் உலக நாடுகள் தர வரிசைப் படுத்தப்படுகின்றன. அந்த வகையில் இன்று கணிப்பீட்டில் உலகிலேயே முதலிடம் வகிக்கும் நாடு சிங்கப்பூர் ஆகும். இலங்கை இத்தகைய கணிப்பீட்டில் வெகுவாகப் பின் தங்கியுள்ளது. அதற்குக் காரணம் கணக்கீட்டில் சுத்த சூனியமான பந்துல குணவர்த்தனா போன்றவர்கள் கல்வி அமைச்சராகப் பதவி வகிப்பதே ஆகும்.

இதற்கு மற்றொரு காரணம், தர்க்கரீதியான சிந்தனையாளர்களுக்கு இந்த நாட்டின் அரசியலில் தட்டுப்பாடு நிலவுவதாகும். உண்மையில் எமது நாட்டு மக்களில் 75 வீதம் வரையானோர் 8 ஆம் வகுப்பு வரை மட்டுமே கல்வி கற்றுள்ளனர். அந்த [illegible] 75 வீதமானோர் 8 [illegible] சிந்திக்கும் அளவுக்கே சிந்திக்கின்றனர்.

இதற்கான உதாரணமொன்றைக் குறிப்பிட இயலும். அண்மையில் ஜெனிவா மாநாட்டில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்து அத்தகைய பொது மக்கள் என்ன பேசிக் கொண்டார்கள் தெரியுமா? “அப்படியானால் எந்த வேளையிலும் சரி, அமெரிக்க இராணுவம் இலங்கையில் தரையிறங்குமல்லவா?” இதிலிருந்து என்ன புலனாகிறது? இந்த நாட்டின் படிப்பறிவில்லாத பாமர மக்களை அரசும், அதன் பிரதானிகளும், ஊடகத்துறையினரும் எந்த அளவுக்கு ஏமாற்றுகின்றனர் என்பது புலனாகிறதல்லவா? அரசு இந்த அளவுக்கு அமெரிக்கா மீது வசைபாடுவதைப் பார்த்து அவர்கள் இவ்விதம் சிந்திப்பார்கள்தானே? வெளிநாட்டுச் சக்திகள் எமது நாட்டை ஆக்கிரமிக்க முயல்கின்றன என்று இந்த நாட்டின் பிரதமரே நாட்டு மக்களை அச்சுறுத்துகிறாரே?

ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற சம்பவமொன்று வேடிக்கையானதும் நகைப்புக்கு இடமானதொன்றுமாகும். பல்கலைக் கழக உபவேந்தர், ஒரு நாள் அருகருகாக அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்த ஒரு மாணவ ஜோடியைக் கண்டு, அவர்களைத் தடுத்து வைத்து, அந்த மாணவியின் கன்னித் தன்மையைப் பரிசோதனை செய்வதற்காக அந்த மாணவியை வைத்திய சாலைக்கு அனுப்பி வைத்தார். நல்ல காலம், வைத்தியர்கள் அவர் அளவுக்கு முட்டாள்களாக இல்லாததால் அவர்கள் அந்த மாணவியைப் பரிசோதனைக்கு உட்படுத்த மறுத்து விட்டனர். துரதிர்ஷ்டவசமாக கணித பாடத்தில் சித்தியடைந்து உயர் கல்வி கற்கச் சென்ற அந்த மாணவர்களை எண்ணிக் கவலைப்படுவதா? அல்லது அவர்களின் உயர் கல்வியை வழி நடத்தும் உபவேந்தரை எண்ணிக் கவலைப்படுவதா? நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள். எட்டாம் வகுப்பு வரை கல்வி கற்ற எமது பொது மக்களுக்குள்ள அளவு அறிவே இன்று பல்கலைக் கழக மட்டத்திலும் காணப்படுகிறதா? என்று ஐயமுறுவதில் தவறேதும் இல்லை.

ஒரு நாட்டின் பௌதிக வள வளர்ச்சி மட்டுமே நாட்டின் வளர்ச்சியாகிவிடாது. பௌதிக வள வளர்ச்சியுடன் நாட்டு மக்கள் மத்தியில் பரந்த சிந்தனை வளர்ச்சியும் அவசியம். ஒரு விவசாய நாட்டுக்கு மக்கள் மத்தியில் இலேசான விசுவாசமான சிந்தனை இருப்பின் அது போதுமானது. ஆனால் பரந்த பௌதிக வள வளர்ச்சி வேண்டுமானால் அதற்குப் பரந்த, விட்டுக் கொடுக்கும் மனப்பாங்குடனான சிந்தனை அவசியம். நாட்டின் அரசியல்வாதிகளே நாட்டு மக்களுக்கு அத்தகைய பரந்த எண்ணத்தைக் கற்றுக் கொடுக்க வேண்டும். தாமே அதற்கு உதாரணமாக வாழ்ந்து காட்ட வேண்டும். சுதந்திரமாகச் சிந்திக்க நாட்டு மக்களுக்கு வழியேற்படுத்திக் கொடுக்க வேண்டும். சுதந்திரமாகத் தமது கருத்துக்களை வெளிப்படுத்த இடமளிக்க வேண்டும். வாத விவாதங்களில் ஈடுபட வழி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். எதிர்க் கருத்துக்களை அச்சமின்றித் தெரிவிக்க வாய்ப்பளிக்க வேண்டும். ஆனால் அத்தகைய வாய்ப்பு இந்த நாட்டு மக்களுக்குக் கிட்டாதது அவர்களது துரதிர்ஷ்டமே.


அத்தகைய தமது பரந்த சிந்தனையில் உதித்த கருத்தாகவே அண்மையில் தயான் ஜயதிலக என்ற இந்த நாட்டின் ராஜதந்திரி, மியன்மார் ஆட்சியாளர்கள் தமக்கெதிராக ஐ.நா. மனித உரிமைகள் சபை நிறைவேற்றிய தீர்மானத்துக்கு மதிப்பளித்து தீர்மானத்தின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தியமை போன்று இலங்கை அரசும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டுமெனத் தெரிவித்திருந்தார். ஆயினும் அதனை நடைமுறைப் படுத்துமாறு ஐ.நா. மனித உரிமைகள் சபை அரசை வலியுறுத்துவது அச்சுறுத்தலாக அமைவதாகக் கூறி இலங்கை அரசு அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றது. நாட்டு மக்களது சுதந்திரமான

சிந்தனை அரசுக்கு ஒத்துக் கொள்ளாததாலேயே கூகுள் போன்ற இணையத் தளங்களை இனிமேல் எவரும் பயன்படுத்த வேண்டாமென விமல் வீரவன்ஸ கூப்பாடு போடுகிறார். இணையத்தளங்களில் செய்திகளை வாசிப்பதன் மூலமாக நாட்டின் இளஞ் சந்ததியினரின் அறிவு விருத்தியடைந்து விடும், அவர்களது சிந்தனை பரந்த, விட்டுக் கொடுத்து வாழச் சிந்திக்கும் நிலைக்கு உயர்ச்சி கண்டு விடும் என்ற அச்சம் ஆட்சியாளர்கள் மத்தியில் விரவியுள்ளமை உண்மையிலும் உண்மை.


மேலே குறிப்பிட்ட விதத்தில், “எந்த வேளையிலும் அமெரிக்க இராணுவம் இலங்கையில் தரையிறங்கக் கூடும்” என்ற விதத்தில் மட்டுப்படுத்தப்பட்ட சிந்தனையுடன், இந்த நாட்டு மக்கள் இருக்க வேண்டும் என்பதே விமல் வீரவன்ஸ போன்றோரின் விருப்பமும் எதிர்பார்ப்பும் ஆகும். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## சீர்கெட்டவைகளின் படத்தொகுப்பு





யாழ். பிரதான சாலையில் வாகனம் நிறுத்தத் தடை செய்யப்பட்டுள்ள பகுதியில் பஸ் ஒன்று நிலைத்து நிற்பதை வாடிக்கையாகக் கொண்டிருக்கின்றன சில வாகனங்கள்.



பாதையோரம் தோண்டப்பட்ட இந்தக் குழி இன்னமும் மூடப்படவில்லை. ஆனால் ஆபத்து என்ற அறிவிப்பு நீக்கப்பட்டுவிட்டது.



ஜனசந்தடி மிக்க பெருந்தெருக்களிலும் கனரக வாகனங்கள் நடுவீதியில் நின்றுதான் நீண்டகாலமாகவே பணி செய்கின்றன.



வேம்படி சந்தியில் ஒற்றைப்பாதைப் பயணம் அமுலில் இருக்கும்போதும், அதனைக் கருத்தில் எடுக்காது கனரக வாகனங்கள் நாள்கணக்கில் நடுத்தெருவில் நிற்கின்றன.

# சீர்கெடும் பாதைகள்

■ பஞ்சவர்ணன்

குடாநாட்டில் ஆண்டு தோறும் வீதி விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகப் புள்ளி விவரங்கள் கூறுகின்றன. இதற்கு, வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு, அதற்கு ஏற்ற வகையில் வீதி அகலிப்பு போதாமை, வீதி ஒழுங்கு விதிகளும், வீதிப் பேணுகைகளும் சரிவரக்காணப்படாமை, வீதி ஒழுக்க விதிகளை மக்கள் கடைப்பிடிக்காமை, அதைப் பேண வேண்டியவர்கள் தமது கடமைகளைச் சரிவர நிறைவேற்றாமை போன்ற காரணங் கள் பலவற்றை அடுக்கிக் கொண்டே போகலாம்.

வீதிகள் அவற்றின் தன்மைக்கு ஏற்ப ஆங்கில எழுத்துக்களையும், இலக்கங்களையும் கொண்டு வகைப் படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு வகையான வீதிகளின் பராமரிப்பும், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வீதி அபிவிருத்தித் திணைக்களம், மாநகரசபை, நகரசபை, பிரதேச சபை போன்றவற்றால் மேற்கொள்ளப்படுகிறன.

வீதிகளை நாம் தனிப்பட்ட தேவைகளுக்கு கையாளும்போது, அந்தவீதி எதற்குச் சொந்தமான வீதியோ அதனிடம் அனுமதி பெற வேண்டும். இதற்கு வீதியில் உள்ள வீதிப் பெயர்ப் பலகையில் வீதிப்பராமரிப்பு/ சொந்தமான சபையினது அல்லது திணைக்களத்தினது, பெயர் குறிப்பிடப் படுவதைக் கட்டாயமாக்கல் வேண்டும். இவ்வாறு அடையாளப்படுத்தப்படும்போது, அவசர தேவையின் போது உரியவர்களை உடன் தொடர்பு கொள்வது இலகுவானதாக இருக்கும்.

நாம் வீதியின் மருங்கில் மதில் கட்டுவதற்கும், கட்டடங்களைக் கட்டுவதற்கும் வீதிக்குச் சொந்தமான சபையிடம் அனுமதி பெறல் வேண்டும். வீதியின் தரத்துக்கு ஏற்ப வீதியின் மத்தியில் இருந்து குறிப்பிட்ட 'அடி' தூரத்துக்கு அப்பாலே கட்டடம் அமைக்க அனுமதி வழங்கப்படுகிறது. அவ்வாறு அனுமதி பெறாமல் கட்டப்படும் கட்டடங்களை அகற்ற, குறிப்பிட்ட சபைகளுக்கு அதிகாரம் உண்டு. ஆனால் இந்த அதிகாரங்களை எல்லாம் 'நோட்டுக்கள்' நசுக்கி வைத்திருக்கின்றன என்பது வேறுகதை.

> “
> யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எதிரில் உள்ள முச்சந்தியில் நிர்மாணிக்கப்படும் கட்டடத்துக்கான வேலைகள் மிகவும் போக்குவரத்து நெரிசல் கூடிய நேரங்களிலும் போக்குவரத்துக்கு இடையூறாக, சிலவேளைகளில் ஒரு வழிப்போக்குவரத்தை முற்றாகக்கூட ஸ்தம்பிதம் அடையும் வகையில் கட்டட வேலைகள் விறுவிறுப்பாக நடைபெறுவதை யார் தான் கண்டிப்பாரோ!

மின்சாரசபையினர், தொலைத் தொடர்பு நிறுவனத்தினர், வடிகால்களை சீர்ப்படுத்துபவர்கள் போன்றோர் குறிப்பிட்ட வீதிகளில் திருத்த வேலைகளை மேற்கொள்ளும் போது, வீதிக்குச் சொந்தமான சபையிடம் அனுமதி பெற்றே திருத்த வேலைகளை மேற்கொள்ளலாம். அவர்கள் திருத்த வேலைகளைமேற்கொள்ளும் போது வீதி ஒழுங்கு சட்ட விதிமுறைகளைப் பேண வேண்டும். அத்துடன் வீதிகளை இவர்கள் சேதமாக்குவார்கள். ஆனால் அதற்குரிய பணத்தை உரிய சபைக்குச் செலுத்த வேண்டும். குறிப்பிட்ட வேலை முடிந்தவுடன் வீதி சீர்ப்படுத்தப்படல் வேண்டும் எனப் பல சட்டங்கள் பேசப்பட்டாலும், பல வீதிகளில் மின்சார சபையோ, தொலைத்தொடர்பு நிறுவனமோ தமது திருத்த வேலைகளை முடித்து பல மாதங்களாகியும், வீதி போக்குவரத்துக்கு இடையூறாகக் இருப்பதைக் காணக் கூடியதாக உள்ளது. அவர்கள் அதற்குரிய செலவீனத்தை ஈடுசெய்யவில்லையா? அல்லது ஈடுசெய்ய செலுத்திய பணம் பதுங்கி விட்டதா? யார் அறிவார். கிளறிய வீதியில், கதறி அழும் வாகனங்களும், விபத்துக்களில் சிக்கிக் கண்ணீர் விடும் மக்களும் உரியவர்களின் மனங்களை உருக்கவில்லையா?

வீதி அகலிப்புப் பணியில் ஈடுபடுபவர்கள், வீதி அளப்பவர்கள் போன்றோர் கூட பல சந்தர்ப்பங்களில் வீதி தமக்கு மட்டும் சொந்தம் என நினைப்பது போல் தோன்றுகின்றது.

வீதி ஓரமாக உள்ள வீடுகள், கடைத்தொகுதிகள் கட்டுவதற்கு வேண்டிய கல், மண் போன்றவை வீதி ஓரங்களில் கொட்டுவது தடை செய்யப்பட்டுள்ள போதும், போக்குவரத்துக்கு இடையூறாக இவை வீதி ஓரங்களில் தாராளமாக கொட்டிக் கிடப்பதைக் காணக் கூடியதாக உள்ளது. அதுமட்டுமல்லாது கட்டட தேவைக்குரிய வாகனங்களையும் அதிக போக்குவரத்து நெரிசலான பகுதிகளில் நிறுத்தி வைத்து வேலை செய்வதையும் காணக் கூடியதாக உள்ளது.

யாழ்.போதனா வைத்திய சாலைக்கு எதிரில் உள்ள முச்சந்தியில் நிர்மாணிக்கப் படும் கட்டடத்துக்கான வேலைகள் மிகவும் போக்குவரத்து நெரிசல் கூடிய நேரங்களிலும் போக்குவரத்துக்கு இடையூறாக, சிலவேளைகளில் ஒரு வழிப்போக்குவரத்தை முற்றாகக் கூட ஸ்தம்பிதம் அடையும் வகையில் கட்டட வேலைகள் விறுவிறுப்பாக நடைபெறுவதை யார்தான் கண்டிப்பாரோ!

வீட்டின் கழிவுநீர், கிணற்றுநீர் போன்றவற்றை வீதிகளில் ஓடவிடுகின்றனர். அதற்கு எதிராக அதிகாரம் உள்ளவர்கள் எவரும், எந்த நடவடிக்கையும், எடுக்காமல் வேடிக்கை பார்ப்பதைத் தண்டிக்க நாட்டில் யாரும் இல்லை.

பிரதான வீதிகளில் வாகனங்கள் நிறுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால் பல வியாபார நிறுவனங்களுக்கு முன்னால் நித்தம் கனரக வாகனங்கள் நிறுத்தப்பட்டுப் பொருள்கள் இறக்கப்படுவது வழமையாக உள்ளது. பல தங்கும் விடுதிகளுக்கு முன்னால் அங்கு தங்குவதற்கு வருபவர்கள் வீதி ஓரங்களில் இரவு பகலாக வாகனங்களை நிறுத்தி வைப்பதையும், காணக்கூடியதாக உள்ளது. ''நோ பாக்கிங்'' இல் கூட வாகனங்கள் நிறுத்தப்படுகின்றன. இரவு வேளையில் நிறுத்தப்படும் வாகனங்களில் ''நிறுத்தல் வெளிச்ச விளக்குகள்'' கூட போடப்படுவதில்லை. இதனால் இரவு வேளைகளில் பல விபத்துக்கள் அரங்கேறிய வண்ணமே உள்ளன.

நகரப் புறங்களில், வீடுகளில் நடைபெறும் சில நிகழ்வுகளுக்கு இடப்பற்றாக்குறை காரணமாக பந்தல்களை வீதிகளில் அமைக்கிறார்கள். இதற்கு சில சட்ட விதிமுறைக்கு ஏற்ப அனுமதி வழங்கப்படுகின்றது. ஆனால் அனுமதி பெறலாம் என்பதைக் காரணம் காட்டி, அனுமதித்தகாலம், அனுமதிக்கப்பட்ட இடப் பரப்பு, அனுமதிக்குரிய விதிகளைத் தாண்டியும் பயன்படுத்துகிறார்கள். இதையெல்லாம் தாண்டி அனுமதி இல்லாமலும் வீதிக்கு இடையூறாகப் பந்தல்கள் போடப்படுகின்றன.

அதுமட்டுமல்லாது வீதிக்குக் குறுக்கே ஆன பதாகைகள், விளம்பரப் பலகைகள் போன்றனவும் உரிய அனுமதி பெற்றே நிறுவப்பட வேண்டும். வீதிகளுக்கு ஏற்ப குறித்த உயரத்துக்கு மேல், இவற்றைப் பொருத்துவதற்கு அனுமதிக்கப்பட்டாலும், அவை பரிசோதிக்கப்பட்டு உறுதிப் படுத்தல் நடைபெறுகிறதா என்றால் அது கேள்விக் குறியாகவே உள்ளது.

வீதி ஓரங்களில் நீரோடுவதற்காக கான்கள் விடப் படுகின்றன. இவற்றின் விளிம்புகள் பாதுகாப்பான முறையில் அடையாளப்படுத் தப்பட்டு அடைக்கப்படல் வேண்டும். யாழ்ப்பாணத்தில் எத்தனை வீதிகளில் உள்ள கான்கள் இவ்வாறு பாதுகாப்பு அணைகளுடன் பாதுகாப்புக் குறிகளிட்டு அடையாளப்படுத்தப்பட்டுள்ளன? நகரில் சில வீதிகளை சாரதிகள் பயிற்சிப் பாடசாலையின் வாகனங்கள் ஆக்கிரமித்து இருப்பதும் சிக்கலை ஏற்படுத்தி உள்ளது. இவர்களது பயிற்சிக்கு என குறித்த வீதிகளை, குறித்த நேரங்களுக்குப் பயன்படுத்த ஒதுக்கினால், மக்கள் போக்குவரத்துக்கான இடையூறுகளைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

சில வீதிகள் ''பெரியவர்களின்'' போக்குவரத்துப் பாதையாக இருப்பதால் அடிக்கடி ''மூடப்படும்'' அந்த வீதிகளை நம்பி வந்தவர்கள் பல சந்தர்ப்பங்களில் சங்கடப்பட்டு திரும்புவதைக் காணக்கூடியதாக உள்ளது. அடிக்கடி திறப்பதும், மூடுவதுமாக இல்லாமல், அந்தப் ''பெரியவர்களுக்கு'' எனச் சில பாதைகளை நிரந்தரமாக்கினால், மக்கள் சங்கடப்படுதலைத் தவிர்க்கலாம். இதுவும் யாழ்ப்பாணத்துக்கு வந்த பெரிய கேடே! ✱



கஸ்தூரியார் வீதியில் அமைந்திருக்கும் களஞ்சிய சங்கங்களில் வாகனங்கள் மாலை 4 மணிக்கு போக்குவரத்து நெரிசல் நேரத்தில் நடு வீதியில் நின்றுதான் பொருள்களை இறக்குகின்றன. கேட்பாரில்லை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அவமானம் ஒரு மூலதனம்

நீங்கள் அவமதிக்கப்பட்டவரா? பிறரால் அலட்சியப்படுத்தப்பட்டவரா? யாராவது உங்களை அவமானப்படுத்தியிருக்கிறார்களா?

'ஆம்' என்றால் நீங்கள் அதிர்ஷ்டசாலி. முன்னேறுவதற்கான மூலப்பொருள் உங்களிடம் உள்ளது. நம்பமுடியவில்லையா? இதிகாசங்களைப் பாருங்கள்.

தாய், தந்தை யார் என்று அறிய முடியாத அனாதை என்று கர்ணனைத் துரோணர் இகழ்ந்தார். ''நீ என்ன ராஜகுமாரனா? தேரோட்டி மகன்'' என்று அலட்சியப்படுத்தினார். விளைவு...? வளர்ந்தான்... வானளாவ வளர்ந்தான். தேரோட்டி மகன் என்று கேலி பேசப்பட்டவன், சல்லியன் என்ற அரசன் தேரோட்டத் தேரேறி வந்தான். இகழ்ச்சியே அவனது வாழ்வைப் புகழ்ச்சி நோக்கிய பயணம் ஆக்கியது எப்படி?

அள்ளிக் கொடுத்து, அள்ளிக் கொடுத்து வள்ளலாக வாழ்ந்தான். அவனிடம் மக்கள் கையேந்தினர். புலவர்கள் கையேந்தினர். அநாதை ஆக்கிய அம்மா குந்தியே கை ஏந்தினாள். அடுத்து தேவேந்திரன் வந்து, அருமை மகன் அர்ஜுனனுக்காக கவசகுண்டலங்களைக் கை ஏந்தி வாங்கினார். அதுவும் போதாது என்று அண்டசராசரங்களின் அருமைத் தலைவனாம் ஆண்டவன் கண்ணனே வந்து கை ஏந்தி, ''கொடையால் விளைந்த புண்ணியத்தைக் கொடு'' என்று கேட்டான். அம்மா, அப்பா பெயர் தெரியாத அநாதை என்று அவமானப்படுத்தப்பட்ட கர்ணன், ''அம்மா தாயே, நான் அநாதை'' என்று கை ஏந்தாது அம்மா முதல் ஆண்டவன் வரை கை ஏந்திக் கேட்ட வள்ளலான வரலாற்றுக்கான வீரிய வித்து அவமதிப்பு. அவமானம்.

அவமதிப்பு... அலட்சியம்... அவமானம் இவை யாவும் அக்கினிக் குஞ்சுகள். விண்ணில் பாயும் நம் வெற்றிக் கலனுக்கான எரிசக்திகள். பழைய ரயிலின் இயந்திரம் தகதகவென்று எரியும் நெருப்பைக் கண்டதுண்டா? அந்த நெருப்புத் தான் ரயிலை நகர்த்தும் ஜீவ சக்தி. அந்த இயந்திரம் நெஞ்சில் நின்று எரியும் நெருப்பு. எத்தனை நெடிய பயணத்தை நிறைவேற்றும் தெரியுமா? அப்படியே உங்கள் நெஞ்சில் எரியும் நெருப்பை, அவமதிப்பை, வெற்றிக்கான எரிசக்தியாக்குங்கள்.

ஒரு நிமிடம் அவமதித்தவர்களைப் பழிவாங்கத் துடிப்பது அறிவீனம்... அகங்காரம். அவமதித்தவரும் வருந்தும்படியாக ஏற்கும்படியாக வளர்வதே அங்கீகாரம். உன்னதமான முன்னேற்றம். தன்னை அவமதித்த பிரிட்டிஷ் அதிகாரியும் மதிக்கும்படி விஸ்வரூபம் எடுத்தவர் மகாத்மாகாந்தி. மாறாகப் பழிவாங்கத் துடித்தவர்கள் பாழானதுதான் மிச்சம்.

கவியரசர் கண்ணதாசன் பற்றி அவரது அருமை மகன் காந்தி கண்ணதாசன் ஒரு செய்தி சொன்னார். செட்டிநாட்டிலிருந்து எழுத்துக் கனவுகளுடன் பதினான்கு வயதுச் சிறுவனாக சென்னைக்கு வந்தார் கவிஞர். அன்று இரவு படுக்க இடமின்றி மெரினா கடற்கரையில் காந்தி சிலைக்குப் பின்னால் பெட்டியைத் தலைக்கு வைத்துப் படுத்திருக்கிறார்.

நள்ளிரவு பொலிஸ்காரரின் உருட்டுத்தடி அவரைத் தட்டி மிரட்டியது. காலையில் நகரத்தார் விடுதிக்குப் போக வேண்டும். இரவு மண்ணடி வரை நடந்து போகமுடியாது. அதனால் இங்கு படுத்துக்கொள்ள அனுமதி கேட்ட அந்த சிறுவனின் கோரிக்கையைப் பொலிஸ் நிராகரித்தது. ''படு... படுக்க வேண்டுமென்றால் பணம் கொடு என்று காவல் மிரட்டியது. பணத்துக்கு வழியின்றிக் கலங்கிய கண்களுடன் காந்தி சிலையில் இருந்து நடந்திருக்கிறார் கண்ணதாசன்.

அவர் வளர்ந்து கவியரசாகி ''சுமைதாங்கி'' என்ற சொந்தப் படம் எடுக்கிறார்.கதாநாயகனாக நடித்த ஜெமினி கணேசனை எங்கிருந்து நடக்க விடுவது என்று யோசித்த கவிஞர் அதே காந்தி சிலையைத் தேர்ந்தெடுத்தார்.

நள்ளிரவு படப்பிடிப்பு. ஆனால் படத்தில் இரவு 7 மணி போன்று இருக்க கடற்கரை வீதியில் நிறைய கார்கள் வரிசையாக வரவேண்டும். ஏழு கார்களை நிற்கவைத்து மாறிமாறி ஒன்றன்பின் ஒன்றாக தொடர்ந்து வருவது போன்று படம் எடுக்கிறார்கள். வீட்டில் இந்தப் படத்தைப் போட்டுப் பார்த்துக் கொண்டிருந்த கவிஞர், பிள்ளைகளைப் பார்த்துச் சொல்லியிருக்கிறார். ''இந்தக் கார்களை கவனித்தீர்களா? இவை எல்லாமே நம்முடைய கார்கள். வாழ முடியும் என்ற நம்பிக்கையோடு சென்னை வந்த என்னை இந்த இடத்தில்தான் பணம் இல்லை என்று பொலிஸ் நடக்கவிட்டது... இதே இடத்தில் என் ஏழு கார்களை ஓடவிட்டுப் படம் எடுத்திருக்கிறேன். நம்பிக்கை என்னை வெற்றிபெற வைத்துவிட்டது'' என்றாராம்.


எங்கு அவமதிக்கப்பட்டாரோ, அங்கு கவிஞர் தம் வெற்றியை அரங்கேற்றியிருக்கிறார். அவமானம் ஒரு மூலதனம்... இது புரிந்தால் வெற்றி நிச்சயம்!



சுகி.சிவம்

# மேற்கு நோக்கி கோமுகி அமைந்த வண்ணை வீரமாகாளி அம்மன்

(கடந்த வாரத் தொடர்ச்சி)



**எஸ்.யேசுதாஸ்**

வண்ணை வடக்கு வீரமாகாளி அம்மன் ஆலயம் ஓலைக் கோயிலாக ஆரம்பிக்கப்பட்டு காலப்போக்கில் மூலஸ்தானம் மற்றும் பிரதான மண்டபங்கள் சுண்ணாம்புக் கற்கள் கொண்டு அமைக்கப்பட்டன.

பின்னர் படிப்படியாக சிமெந்துக் கட்டடங்களாக மாற்றப்பட்டன. 1950 ஆம் ஆண்டு வரை முன்மண்டபம் ஓலையால் வேயப்பட்டு நிலம் மண்ணால் மெழுகப்பட்டு இருந்ததாகக் கூறப்படுகிறது.

மருதமரத்தை தலவிருட்சமாகக் கொண்ட இந்த ஆலயத்தில் காளிகா புஸ்கரணி என்னும் தீர்த்த தலமும் காணப்படுகிறது. வீரத்தைக் குறிக்கும் தெய்வங்களின் ஆலய விக்கிரக முக தரிசனம் வடக்கு முகமாக அமைய வேண்டுமென்ற சாத்திரவிதிக்கமைவாக மூலஸ்தானம் கட்டப்பட்டுள்ள போதிலும் பல நடைமுறைகள் ஆகமமும், மரபு வழியும் கலந்த முறையில் இங்கே பின்பற்றப்படுகிறது.

வடக்கு நோக்கிய கோயிலுக்கு கோமுகி கிழக்குத் திசையில் அமைவதே வழமை. ஆனால் இங்கு விதிவிலக்காக மேற்கில் அமைந்துள்ளது. பெரும்பாலும் பூசகர் வடக்கு, கிழக்கு முகமாக நின்று பூசை செய்வது விதிமுறையாக இருக்கும் போது மேற்கு முகமாக இங்கே பூசை நடைபெறுகிறது. அதேவேளை முன்னைய காலங்களில் குறிப்பிட்ட சில தினங்களில் மாமிசம் படைத்து பூசை செய்யப்பட்டதாகவும் அறியமுடிகிறது.

இங்கே பிரதிட்டை செய்து வைக்கப்பட்டு வழிபடப்பட்டு வரும் அம்மன் விக்கிரகம் இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்டது. அந்நியர் ஆட்சிக் காலத்தில் சைவ சமய விக்கிரகங்கள் எடுத்து வருவது தடைசெய்யப்பட்டிருந்த போது கொண்டு வரப்பட்ட இந்தச் சிலையை அம்மிக் கல்லெனக் காண்பித்து எடுத்து வந்ததாகவும், அந்நியரின் கண்களுக்கு அம்மியாக அம்மன் தோன்றச் செய்ததாகவும் மூத்தோர் வழியாக அறியப்படுகிறது.

> தேர் வெள்ளோட்டத்துக்கு விடப்பட்டபோது பலர் கூடி வடமிழுத்தபோதும் அசைய மறுத்து விட்டது. அப்போது வெள்ளைச் சீலை உடுத்த வயோதிப பெண்ணொன்று கை தொட்டதும் நகரத் தொடங்கியது.

காயத்தை ஒரு நிலைப்படுத்தி பயபக்தியுடன் அம்மனைத் தொழுவோரின் வேண்டுதல்களை நிறைவேற்றி அருள் வழங்க அம்பாள் என்றும் தவறுவதில்லை. இவ்வாறு அம்மனின் ஆசிகளைப் பெற்ற அடியார்கள், ஊர்மக்கள், வர்த்தகர்களின் பேருதவியுடன் பழமையான ஆலயம் பெருவளர்ச்சி பெறலாயிற்று, பிள்ளையார், நாகதம்பிரான், சந்தான கோபாலர், வள்ளி, தெய்வயானை சமேத சுப்பிரமணியர், கிழக்கு முக சனீஸ்வரர், தாரிகா சண்டேஸ்வரி ஆகிய தெய்வங்களுக்கு தனி சிற்றாலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வீரமாகாளி அம்மன் வீதி வலம் வரும் அழகிய சித்திரத்தேர் 1941 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. உலகெங்கும் கட்டுத்தேர் பாவனையில் இருந்த காலத்தில் யாழ்.சிற்பாசாரியார்களினால் வடிவமைக்கப்பட்ட முதலாவது சித்திர சிற்பத்தேர் இதுவாகும். திருநெல்வேலி ஸ்தபதி ஆறுமுகத்தால் உருவாக்கப்பட்டது.

இந்தத் தேர் வெள்ளோட்டத்துக்கு விடப்பட்ட போது பலர் கூடி வடமிழுத்தபோதும் அசைய மறுத்து விட்டது. அப்போது வெள்ளைச் சீலை உடுத்த வயோதிப பெண்ணொன்று கை தொட்டதும் நகரத் தொடங்கியது. அந்தக்கிழவி ஸ்தபதிக்கு தட்சணையாக 5 ரூபா கொடுத்து விட்டு மறைந்து சென்றாள். அந்தப் பணம் இன்றும் வைத்துப் பாதுகாக்கப்படுகிறது. இது அம்மன், தன்னை வெளிப்படுத்திய அற்புதமாகக் கருதப்படுகிறது.

1979 ஆம் ஆண்டு மூலஸ்தானம் தூபி அர்த்த மண்டபம் என்பன கட்டப்பட்டன. திருட்டுக்கள், தப்பான செயல்களை உடனுக்குடன் வெளிப்படுத்தி குற்றமிழைத்தவரைத் திருத்துவதில் வல்லமை மிக்க தெய்வமாக அம்மன் விளங்குகிறாள். 1979 இல் இரவுப்படக் காட்சி முடிந்து நள்ளிரவில் சில [illegible] வந்து [illegible]னர். ஆலய முன் [illegible] பெண்ணைக் கண்டு தப்பான கண்ணோட்டத்துடன் அணுகினர். பெண் விரைவாக நடந்து சென்று கோயிலுக்குள் மறைந்து கொண்டாள்.

உள்ளே சத்தங்கள் கேட்டவண்ணமிருந்தன. ஆலய பூசகரான முத்துக்குமாரசாமிக்குருக்களுக்கு அறிவித்து ஆலயத்தைத் திறந்து பார்த்த போது திருடர்கள் ஆலயப் பொருள்களைத் திருடி முடிச்சுக்களாகக் கட்டிக் கொண்டிருந்தனர். கத்தியைக் காட்டி பயமுறுத்திவிட்டு ஓடியவர்களை மக்கள் துரத்திப்பிடித்தனர். இது திருட்டைத் தடுக்க அம்பாள் நிகழ்த்திய அற்புதமாக உணரப்பட்டது.

இந்தக் கோயில் தனிப்பட்ட பரம்பரைக் கோயிலாக விளங்குகிறது. 1941 ஆம் ஆண்டு எழுதப்பட்ட உறுதிச் சாசனத்தில் செல்லக்குருக்கள், சிவசுப்பிரமணியக் குருக்கள், செ.சின்னச்சாமிக் குருக்கள், செ.இரத்தின சாமிக்குருக்கள், சுந்தரக்குருக்கள், நடராசகுருக்கள் என்பவர்களின் பெயர்கள் குறிப் பிடப்பட்டுள்ளன. தற்போதும் இதே பரம்பரையைச் சேர்ந்த 3 குருக்கள் பங்காக ஆலயத்தை நிர்வகித்து பூசைகளை நிறைவேற்றி வருகின்றனர். சிவஸ்ரீ சி.செல்வராசா குருக்கள், சிவஸ்ரீ ந.சண்முகரட்ணம் ஐயர், சிவஸ்ரீ சி.கமல்ராஜ்குருக்கள் ஆகியோர் இணைந்து ஆலய கடமைகளை நிறைவேற்றி வருகின்றனர்.

வீரமாகாளி அம்மன் வருடாந்த மஹோற்சவம் ஆடிப்பரணிக்கு தீர்த்தத்திருவிழா, வரும் வகையில் 25 தினங்கள் முன்னதாக கொடியேற்றத்துடன் ஆரம்பிக்கும். ஆலய மேற்கில் அமைந்துள்ள எண்கோண வடிவான செங்கழுநீர்த் தொட்டியில் 10ஆம் திருவிழா தொட்டித்திருவிழாவாக நடைபெறும். அப்போது அம்மன் அனந்த சயனத்தில் வரும் கண்கொள்ளாக் காட்சியைக் காண பெருமளவு பக்தர்கள் கூடுவர்.

இவற்றை விட தை அமாவாசையில் அலங்கார உற்சவம் 10 தினங்கள் இடம்பெறும். பங்குனிக் குளிர்த்தி சித்திரை வருடப் பிறப்பு, வைகாசி விசாகம், ஆடிச் செவ்வாய், பூரம், நவராத்திரி, கேதாரகௌரி, விளக்கீடு, திருவெம்பாவை என்பன சிறப்பாக நடைபெறுகிறது இலங்கையில் முதன் முதல் மகுடா சூர சங்காரம் நடைபெற்றது. இங்கே என்பது சிறப்பானது.

இந்த ஆலயம் கடந்த 15 வருடங்களில் பல வழிகளிலும் பெருவளர்ச்சி பெற்றுள்ளது. மகாமண்டபம், தரிசன மண்டபம், ஸ்தம்ப மண்டபம், உள் வீதி என்பன 2000 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டன.2008 ஆம் ஆண்டு ஆலய கோபுரம் ஒரு கோடியே 75 லட்சம் செலவிலும், 2010 இல் மஞ்சமும் மஞ்ச முட்டியும் ஒரு கோடி செலவிலும், தற்போது முன்மண் டபம் 1 1/2 கோடி செலவிலும் தனிப்பட்ட குடும்பங் களால் அன்பளிப்பாக அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

ஆலயத்துக்கு அண்மையில் பூசகருக்குச் செந்தமான அன்னபூரணி அலங்கார மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. அதன் வருமானத்தில் சிவசுப்பிரமணிய அறக்கொடை நிதியம் உருவாக்கப்பட்டு வசதியற்றோருக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்படுகிறன. 4 விதவைகளுக்கு தையல் மெஷின்கள் கீரிமலை நகுலேஸ்வர வித்தியாலயத்துக்கு கணினித் தொகுதி, புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த யாழ்.மத்திய கல்லூரி மாணவர்கள் 28 பேருக்கு கற்றல் உபகரணங்கள் 5 பேருக்கு தலா 5000 ரூபா பணவைப்பு என்பன வழங்கப்பட்டது. சிறப்பு வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட வீரமாகாளி அம்மன் தாழ் பணிந்து வீரமிகு உறுதியுடன் உரிமைத் தீர்வைப் பெற்று எம்மக்கள் மகிழ்வுடன் வாழ வேண்டிடுவோம். ✱

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர் ஆளணியை சமப்படுத்துவதற்கு 15 ஆசிரியர்கள்

திருகோணமலை,ஏப்.17

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள குச்சவெளி கல்விக் கோட்டத்தில் நிலவும் ஆசிரியர் ஆளணியை சமப்படுத்த 15 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.புஸ்பகுமார தெரிவித்தார்.

முஸ்லிம்அதிபர்கள்,ஆசிரியர்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

குச்சவெளி, புல்மோட்டை, நிலாவெளி, இறக்கக்கண்டி ஆகிய முஸ்லிம் பாடசாலைகளுக்கென 4 ஆங்கில ஆசிரியர்கள், 9 கணித ஆசிரியர்கள், 2 விஞ்ஞான ஆசிரியர்கள் நியமிக்கப்படுவர். மூதூருக்கு 20 ஆசிரியர்களும், கந்தளாய்க்கு 3 ஆசிரியர்களும் நியமிக்கப்படவுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-40)

## குளத்தில் நீந்திய இளைஞர் மாயம்; பொலிஸார் தேடுதலில்

நுவரெலியா,ஏப்.17

வசந்தகால கொண்டாட்டங்களை முன்னிட்டு நுவரெலியாவுக்கு வந்த இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கிரெகரி குளத்தில் நீந்திய போது காணாமற் போய்விட்டார் என பொலிஸார் தெரிவித்தனர்.

மாத்தளையைச் சேர்ந்த இந்த இளைஞர் சுற்றுலாவாக நுவரெலியாவுக்கு வந்துள்ளார்.

நண்பர்களுடன் பந்தயம் பிடித்து ஒரு கரையிலிருந்து மறுகரைக்கு நீந்திச் செல்வதாக குளத்தில் குதித்த இவர் கரைக்குத் திரும்பவில்லை என்று நுவரெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கூறினார். (ச)

## கைவிடப்பட்ட குழந்தை

கல்முனை,ஏப்.17

கைவிடப்பட்ட பெண் குழந்தை ஒன்று கல்முனை ஆதார வைத்தியசாலையில் பொலிஸாரினால் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இலங்கை போக்குவரத்துச் சபையில் கல்முனைச் சாலையில் இந்தக் குழந்தையுடன் நின்றுகொண்டிருந்த மட்டக்களப்பு, பாலமுனை கிராமத்தைச் சேர்ந்த நவரத்ன என்ற பெண் குழந்தையை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்.

தனக்கு அறிமுகம் இல்லாத பெண்ணொருவர், தான் வர்த்தக நிலையத்தில் பொருள்கள் வாங்கிவரும் வரை இந்தக் குழந்தையை வைத்திருக்குமாறு தந்துவிட்டுச் சென்றுள்ளார். அந்தப் பெண் நீண்டநேரமாக வராத நிலையில் தான் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்து குழந்தையை ஒப்படைத்ததாக அவர் தெரிவித்தார். கல்முனைப் பொலிஸார் இந்தக் குழந்தையை கல்முனை ஆதார வைத்தியசாலையின் சிறுவர் விடுதியில் தற்காலிக பராமரிப்புக்காக ஒப்படைத்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

### மட்டுநகர் கோயில் வீதியிலுள்ள

# ஐ.நா.செயற்பாட்டாளர் வீட்டின் மீது தாக்குதல்

எருவில்,ஏப்.17

மட்டக்களப்பு, கோயில் வீதியில் உள்ள ஐ.நா.வின் செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்குப் பொறுப்பான பொறியியலாளரின் வீட்டின் மீது நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் ஐ.நா. வினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்கான பொறுப்பு வாய்ந்த அதிகாரியாகப் பணியாற்றும் இளங்கோவன் காண்டீபன் என்ற பொறியியலாளரின் வீட்டின் மீதே இந்தக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

**இந்தத் தாக்குதல் ஜெனிவா தீர்மானத்தை அடுத்து இலங்கையில் காட்டப்பட்டு வரும் வெறுப்புணர்வின் வெளிப்பாடாக அமைந்ததா என்று கேள்வி எழுப்பப்படுகிறது.**

இந்தத் தாக்குதலில் வீட்டின் கதவுகள், யன்னல்கள் உடைந்து சேதமாகியுள்ளன. எனினும் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

இந்தத்தாக்குதல்ஜெனிவா தீர்மானத்தை அடுத்து ஐ.நா. மற்றும் மேற்குலகின் மீது இலங்கையில் காட்டப்பட்டு வரும் வெறுப்புணர்வின் வெளிப்பாடாக இடம்பெற்றதா அல்லது வேறு ஏதும் காரணங்கள் உள்ளதா என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-31)



பாலமுனையில் உள்ள 110 வறிய குடும்பங்களுக்கு குடிதண்ணீர் வசதியை பெற்றுக்கொடுக்கும் நிகழ்வில் நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம், நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசீம் ஆகியோர் மாலை அணிவித்து வரவேற்கப்படுகின்றனர். (31)

## மக்களுக்கு சேவையாற்றுவதே இலட்சியம்

### கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் இணைப்பாளர் தெரிவிப்பு

எருவில்,ஏப்.17

கல்முனைத் தொகுதியை கட்டியெழுப்புவதுடன் இப்பகுதி மக்களுக்கு சேவையாற்றுவதுமே எனது இலட்சியமாகும். அதற்காக கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் அனைத்துத் தரப்பினருடனும் இணைந்து செயற்படுவதற்கு நான் தயாராகவுள்ளேன் என்று கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் இணைப்பாளர் ஏ.சி.யஹ் யாகான் தெரிவித்தார்.

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி மண்டபத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஆங்கிலம் மற்றும் கணினி அறிவைப் பெற்றுக் கொள்ளும் இளைஞர்கள் தொழில் வாய்ப்புக்காக அரசியல் வாதிகளை நாட வேண்டிய தேவை ஏற்படாது. கல்வியின் மூலமே நாமும் எமது சமூகமும் முன்னேற முடியும். அதனை எவரும் அழிக்க முடியாது. கடந்த காலங்களில் நடைபெற்ற போரால் எமது உயிர், உடைமைகள் அழிந்த போதிலும் எமது கல்வி மட்டும் அழியவில்லை. ஆங்கிலம், கணினி அறிவு உடையவர்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.- என்றார். (ச-31)

## மாகாணசபை கலைப்பு தொடர்பில் இதுவரை அறிவிக்கப்படவில்லை

மட்டக்களப்பு,ஏப்.17

கிழக்கு மாகாணசபையை முன்கூட்டியே கலைப்பது தொடர்பில் இதுவரையில் தமக்கு அறிவிக்கப்படவில்லை என்று மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

ஆட்சிக்காலம் முடிவடைவதற்கு முன்பே மாகாண சபையைக் கலைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும், உத்தியோக பூர்வமாக மாகாணசபையை கலைப்பது தொடர்பில் இது வரையில் தகவல்கள் வெளியிடப்படவில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

கிழக்கு, சப்ரகமுவ மற்றும் வட மத்திய மாகாண சபைகளைக் கலைத்து தேர்தல் நடத்த அரசு திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## திருமலை தேர்தல் தொகுதியில் மு.கா.கிளைகள் சீர்திருத்தம்

### தௌபீக் எம்.பி. தெரிவிப்பு

திருகோணமலை,ஏப்.17

திருகோணமலை தேர்தல் தொகுதியில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் கிளைகள் விரைவில் சீர்திருத்தப்படும் என்று திருகோண மலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் தெரிவித்தார்.

தக்வா நகருக்கு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சென்று பொதுமக்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். நிலாவெளி பகுதியில் இதற்கென விசேட கூட்டம் நடத்தப்பட்டு கட்சிப் புனரமைப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

தேர்தல் ஒன்று நடத்தப்படும் சந்தர்ப்பத்தில் கட்சியின் தனித்துவத்திற்கு ஏற்ற வகையில் போட்டியிடுவது பற்றித் தீர்மானிக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## புதிய கோட்டக் கல்வி அலுவலகம் தோப்பூரில் அமைக்க நடவடிக்கை

திருகோணமலை,ஏப்.17

மூதூர் கல்வி வலயத்தில் புதிய கோட்டக்கல்வி அலுவலகம் ஒன்றை தோப்பூரில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மூதூர் வலயத்தின் கீழ் 84 பாடசாலைகள் செயற்படுவதுடன் அப் பாடசாலைகளிலிருந்து மூதூர் கோட்டத்தில் 66 பாடசாலைகள், ஈச்சிலம்பற்று கோட்டத்தில் 18 பாடசாலைகள் உள்ளடங்குவதால் இந்தப் பாடசாலைகள் தொடர்பான மேற்பார்வை நடவடிக்கைகள், இலவச பாடநூல் விநியோகம் மற்றும் முகாமைத்துவ செயற்பாடுகளைச் சீராக நிறைவேற்றுவது சிரமமாக உள்ளது.

**மூதூரில் 84 பாடசாலைகள் இயங்குவதனால் இவற்றின் மேற்பார்வை நடவடிக்கைகளை இலகுவாக மேற்கொள்ளவே புதிய கோட்டக் கல்வி அலுவலகம் அமைக்கப்படவுள்ளது.**

இதனைக் கருத்திற்கொண்டு மூன்றாவது கோட்டத்தை தோப்பூரில் ஆரம்பிப்பதற்கான அமைச்சரவைப் பத்திரம் காணி அபிவிருத்தி, போக்குவரத்து அமைச்சர் விமலவீர திஸாநாயக்கவால் சமர்ப்பிக்கப்பட்டது.

இதனை ஏற்றுக் கொண்ட கிழக்கு மாகாண அமைச்சர் வாரியம் தோப்பூரில் புதிய கோட்டக்கல்வி அலுவலகம் அமைப்பதற்கான அங்கீகாரத்தை வழங்கியுள்ளது என்று கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பை தெரிவித்தார். (ச-40)

# மகாத்மா காந்திக்கு மற்றொரு சிலை

### கிழக்கு முதல்வர் அமைக்கிறார்

எருவில்,ஏப்.17

மட்டக்களப்பில் மற்றொரு காந்தி சிலையை வைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இனந்தெரியாத குழுவினரால் உடைக்கப்பட்ட மகாத்மா காந்தி சிலை மீளப் புனரமைக்கப்பட்டுள்ளது என்று கிழக்கு முதல்வர் சந்திரகாந்தன் இந்திய ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

காந்தி சிலை சேதமாக்கப்பட்ட தகவல் கிடைத்ததும் உடனடியாகவே திருத்த வேலைகளை ஆரம்பித்து சில நாள்களிலேயே பணியை முடித்துவிட்டோம்.

**அனைத்துச் சிலைகளினது தலைகளும் கழுத்துப் பகுதியுடன் உடைத்து வீசப்பட்டுள்ளன. உயரமான சிலைகளின் மீது ஏறி தனி ஒருவரால் இவ்வாறு செய்ய முடியாது.**

கடந்த 5ஆம் திகதி, மகாத்மா காந்தி சிலையுடன் சேதமாக்கப்பட்ட சுவாமி விபுலானந்தர், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை, பேடன் பவல் ஆகியோரின் சிலைகள் இதுவரை புனரமைக்கப்படவில்லை. அவற்றையும் சீரமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. மகாத்மா காந்தி சிலை முன்னரைப் போன்று புனரமைக்கப்பட்டுள்ளது. இந்தச் சிலை உடைப்புச் சம்பவம் தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை.

ஆனால் விரைவில் இந்தப் [illegible]களில் முக்கிய திருப்பம் ஏற்படும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இந்தச் சம்பவத்தில் பலர் சம்பந்தப்பட்டுள்ளனர் என்றும் அனைத்துச் சிலைகளினது தலைகளும் கழுத்துப் பகுதியுடன் உடைத்து வீசப்பட்டுள்ளன என்றும் உயரமான சிலைகளின் மீது ஏறி தனி ஒருவரால் இதைச் செய்ய முடியாது என்றும் இந்திய ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது.

மகாத்மா காந்தி சிலை உடைக்கப்பட்டதும் இந்தியா கவனம் எடுத்து உயர் மட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டதை அடுத்தே, காந்தி சிலையின் திருத்த வேலைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டன என்று இந்திய ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது. (ச-31)

## ஆணைக்குழு பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துக

மட்டக்களப்பு,ஏப்.17

காணிப் பிரச்சினை தொடர்பான பரிந்துரைகள் விரைவில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் அருண் தம்பிமுத்து கோரிக்கை விடுத்துள்ளார். உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் காணிப் பிரச்சினைகள் குறித்து பல்வேறு பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன. கிழக்கு மாகாண மக்கள் காணிப் பிணக்குகளை எதிர்நோக்கி வருவதால், பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**மேடம்:** சம்பந்தமில்லாமல் சில பணிகளுக்கு தங்களை ஈடுபடுத்திக் கொள்ளலாம். சற்று யோசித்துச் செயற்படவும். முக்கியஸ்தர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் சற்று தாமதப்படும். நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்ய தாங்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் மிகுந்த கவனம் இருக்கட்டும்.

**இடபம்:** முக்கிய நிகழ்ச்சிகள், சந்திப்புகள் என பரபரப்போடு காணப்படுவீர்கள். வெளிவட்டாரப் பழக்க வழக்கங்களிலும் தங்கள் புகழ், செல்வாக்கு கூடுதலாகும். நிதி நிலையில் பற்றாக்குறையான சூழ்நிலைகள் அடிக்கடி ஏற்பட்ட போதும் சமாளிக்கக்கூடிய தன்மையும் கூடும். பெண்களுக்கு இல்வாழ்வில் ஏற்றமுண்டாகும்.

**மிதுனம்:** அடிக்கடி உணர்ச்சிவசப்படுதல், அவசரம், நிர்ப்பந்தங்கள் காரணமாக சில முடிவுகள் தவறானதாக இருக்கும். ஆத்திரப்படுவதை தவிர்த்துக் கொண்டு ஆராய்ந்து செயற்பட்டீர்களேயானால், நல்ல தீர்வுக்கு வழிவகுக்கும். வியாபாரம் விரிவடையவும், புதிய முதலீடுகளையும் செய்வீர்கள்.

**கடகம்:** தேவையற்ற தயக்கங்கள் மற்றும் தாமதங்கள் சற்று அதிகமாகவே, தங்களை அலைக்கழித்த போதும், பாதிப்பு அதிகமில்லாமல் கொண்டு செல்வீர்கள். வெளிவட்டாரப் பழக்க வழக்கங்களில் எதனையும் கவனமாகவே கொண்டு செல்லுதல் நல்லது. பெண்களுக்கு பொன் ஆபரணங்களின் சேர்க்கை ஏற்படும்.

**சிங்கம்:** ஒவ்வொரு விடயத்திலும் மிகத் தெளிவாகச் செயற்பட வேண்டும் என்ற எண்ணத்தோடு செயற்படுவீர்கள். அதேநேரத்தில் தங்களின் வார்த்தைகளில் கவனம் இருக்கட்டும். புதிய முயற்சிகளில் தகுந்த வெற்றியை எதிர்பார்க்கலாம். பெண்கள் எடுத்துக் கொண்ட பணிகளில் தீவிரமாக கவனம் செலுத்திச் சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள்.

**கன்னி:** திட்டமிட்ட செயற்பாடுகளை மேற்கொள்வீர்கள். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப்பெறுவீர்கள். வெளிவட்டாரப் பழக்க வழக்கங்களில் செலவுகள் சற்று கூடுதலாக இருக்கும். புதிய ஒப்பந்தங்கள் மற்றும் கூட்டு முயற்சியின் மூலம் லாபத்தை அதிகரிப்பீர்கள். கடன் தொந்தரவுகளை குறைத்துக் கொள்ள வாய்ப்புகள் கிடைக்கப் பெறுவீர்கள்.

**நாளை**

சித்திரை 06 புதன்கிழமை 18.04.2012
திதி: துவாதசி காலை 08.52 வரை
நட்சத்திரம்: பூராட்டாதி மாலை பி.ப 06.08 வரை
சுபநேரம்:04.32- 06.02 வரை
ராகு காலம்: 12.02- 01.32 வரை

**துலாம்:** எடுத்த காரியங்களை விரைவாகவும், எளிதாகவும் செய்து முடிப்பீர்கள். சில முக்கியஸ்தர்களின் தொடர்புகளை பயன் உள்ளதாக ஆக்கிக் கொள்வீர்கள். புதிய முயற்சிகள் யாவும் சிறுசிறு தடைகளைத் தரும். வருமானத்தை கூட்ட சில முயற்சிகளை ஏற்படுத்துவீர்கள். அதில் கூடுதல் கவனம் இருக்கட்டும்.

**விருச்சிகம்:** பல பணிகளையும் விரைந்து முடிக்க ஆவல் கொண்ட போதும், ஒவ்வொன்றாக நிறைவேறக்கூடிய சூழ்நிலையே. முக்கியஸ்தர்களுக்கு தொடர்புகள் தகுந்த நேரத்துக்கு பயனுள்ளதாக இருக்கும். நண்பர்களின் ஆலோசனைகளும், அறிவுரைகளும் மிகுந்த பயனுள்ளதாக இருக்கும்.

**தனுசு:** தாங்கள் எதிர்நோக்கியிருக்கும் விவகாரங்கள் அதிக கவலையை ஏற்படுத்திய போதும், தங்களின் தீவிர சிந்தனையால் நல்லதொரு தீர்வு காண்பீர்கள். சொத்துகளில் முதலீடுகள் மேற்கொள்ளும்போது, தகுந்த நபர்களின் ஆலோசனைகளை எடுத்துக்கொள்ளுங்கள்.

**மகரம்:** நீங்கள் உற்சாகத்துடனும் சுறுசுறுப்பாகவும் காணப்படுவீர்கள். பொறுப்பான செயற்பாடுகள் பிறரால் பெரிதும் பாராட்டப்படும். புதிய முயற்சிகளில் எதிர்பார்த்த வெற்றி சற்று தாமதப்படும். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள். பண விவகாரங்களில் நல்ல முன்னேற்றம் காணப்படும்.

**கும்பம்:** சாதிக்க வேண்டும், சாதனை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணம் மனதில் மேலோங்கி நிற்கும். இருப்பினும், சிறுசிறு பிரச்சினைகளுக்கு எல்லாம் அதிக குழப்பம் அடைவீர்கள். எல்லாம் தீரக்கூடிய, தாங்கள் தீர்க்கக் கூடிய பிரச்சினைகள் தான் என்பதை மறந்து விடாதீர்கள். நண்பர்கள் மிகவும் உதவியாக இருப்பர்.

**மீனம்:** நல்ல நல்ல சிந்தனைகள் தங்கள் மனதில் தோன்றிய போதும் கூடவே ஏற்படும் சந்தேகங்களால், எதையும் சரிவர செயற்படுத்த முடியாமல் போகும். எனினும், அறிவுப்பூர்வமான சிந்தனைகளும், செயற்பாடுகளும் நல்லது. சில முக்கிய காரியங்களை முடிக்க முயற்சிப்பீர்கள். மற்றவர்களின் ஆசை வார்த்தைகளில் மயங்கி விடாதீர்கள்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | 4 | 7 | | | | | 1 |
| | 9 | 3 | | | | 4 | | |
| | 5 | | 8 | 4 | 3 | | 6 | |
| | | 2 | 5 | | | | 1 | 7 |
| 3 | 4 | | | | | | 2 | 6 |
| 1 | 7 | | | | 6 | 5 | | |
| | 3 | | 2 | 8 | 1 | | 9 | |
| | | 9 | | | | 1 | 5 | |
| 8 | | | | | 9 | 3 | | 2 |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 2 | 9 | 6 | 3 | 4 | 7 | 1 | 5 |
| 5 | 1 | 4 | 7 | 2 | 8 | 9 | 6 | 3 |
| 3 | 7 | 6 | 5 | 9 | 1 | 8 | 2 | 4 |
| 6 | 3 | 7 | 2 | 8 | 9 | 5 | 4 | 1 |
| 1 | 9 | 5 | 4 | 7 | 3 | 6 | 8 | 2 |
| 4 | 8 | 2 | 1 | 5 | 6 | 3 | 7 | 9 |
| 7 | 4 | 1 | 3 | 6 | 5 | 2 | 9 | 8 |
| 2 | 5 | 8 | 9 | 4 | 7 | 1 | 3 | 6 |
| 9 | 6 | 3 | 8 | 1 | 2 | 4 | 5 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# நெஞ்சை விட்டகலாத நினைவலைகள்

நான்காம் ஆண்டு நினைவஞ்சலி — ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

திதி: துவாதசி
17.04.2012



அமரர்
**கந்தையா துரை**
(துரைராசா)
தோற்றம்: 05.08.1926
மறைவு: 02.04.2008

திருமதி
**துரை பாக்கியம்**
தோற்றம்: 24.06.1928
மறைவு: 13.05.2007

பாசத்தின் இருப்பிடமே! பண்பின் சிகரமே
எம் குடும்பத் தெய்வங்களே! முருகன் திருவடி பணிந்த நீங்கள்
இனிய உங்கள் முகம் எங்கள் நெஞ்சை விட்டகலாது
பாசமுடன் இணைந்து பண்புடன் வாழ்ந்தீர்கள்
கனிந்த பேச்சும் நேச மொழியும் காதுகளில் கேட்கிறதே
சடுதியில் எமை பிரிந்து எங்கு சென்றீர்கள்?
மறக்கத்தான் முடியவுமில்லை உங்கள் நினைவுகளை
துறக்கவும் முடியாது கலங்குகின்றோம் இங்கே நாம்
உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி !!!

நிரந்தர முகவரி:
வாகையடி வீதி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.
தற்போதைய முகவரி:
கல்லடி வீதி, நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்

SINCE 1888 — Hatton National Bank
Hatton National Bank PLC (PQ30)

## அடகுப் பொருள்கள் ஏலவிற்பனைக்கான அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, ஸ்ரான்லி வீதி, சாவகச்சேரி, பருத்தித்துறை, மானிப்பாய் ஆகிய கிளைகளில் 15.02.2011 இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத அடகுப் பொருட்கள், 21.04.2012 சனிக்கிழமை காலை 9 மணிக்கு இல 212, 214, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ். கிளையில் ஏலத்தில் விடப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

உங்களின் பெறுமதி மிக்க பொருள்களை உடனே மீட்க முடியாவிட்டால்....

* கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூ.500) செலுத்தி)

அல்லது

* தற்போதைய சந்தைப் பெறுமதிக்கும் அதிகரித்த கடன் தொகைக்கும் ஏற்ப உங்கள் அடகுப் பொருள்களை மீள அடகு வைத்து காலாவதித் திகதியை நீடித்துக் கொள்ளலாம்.

ஏல விற்பனைத் திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

**ஹற்றன் நஷனல் வங்கி** (சி/915) (45.6.9)

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

## ஆன் செபஸ்தியான் டிலக்சனா



அன்னை மடியில் 24★12★1993
ஆண்டவன் அடியில் 17★04★2008

என் அன்பு மகளே! என் குலம் விளங்க வந்த குல விளக்கே!
ஒரு மகளாய்ப் பிறந்து என் குலம் விளங்க வைப்பாய்
என்று நான் பார்த்திருக்க
இரக்கமற்ற காலனவன் உன்னை
இடைநடுவில் கவர்ந்து சென்றுவிட்டான்
எமக்கு எல்லாம் வழியாய் இருந்து என் கடைசிக்காலம் வரை
எனை வழிநடத்துவாய் என்று நான் நினைத்திருக்க
கணப்பொழுதில் எமை எல்லாம் தவிக்க விட்டு சென்றாயோ?
உனை கற்பித்தவர்கள் உன் திறமைகளைக் கூறும்போது
உனைப்பற்றிக் கற்பனைக் கோட்டையே கட்டிவைத்தேனம்மா
அதையெல்லாம் காலைப் பொழுதில் வந்து தவிடு
பொடியாக்கிவிட்டான் அரக்கனவன்
ஆசையாய் வளர்த்த என் மகளின் நினைவுகள் எனை வாட்டும் போது
தனிமையில் நான் அழுவதை நீ அறிவாயோ என் மகளே.

நி.மு: [illegible] வட்டாரம், மயிலிட்டித்துறை
த.மு: ஏரிஞ்ச அம்மன் கோயிலடி
பருத்தித்துறை.

ஆன் செபஸ்தியான்
[அப்பா]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூதனசாலை திருட்டு குறித்து 40 பேரிடம் வாக்குமூலம்

திருட்டை விசாரணை செய்வதற்கு குற்றப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த 3 குழுக்கள் நியமிக்கப்பட்டன.

கொழும்பு,ஏப்.17

கொழும்பு தேசிய நூதன சாலையில் திருட்டுச் சம்பவம் இடம்பெற்று ஒரு மாதமாகின்றபோதிலும், சந்தேக நபர்கள் பற்றிய எந்தவித திருப்புமுனையோ, திருடப்பட்ட கலைப்பொருள்கள் பற்றிய விவரமோ இதுவரையில் இல்லை என்று பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்காக குற்றப்புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த 3 குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பில் 40 பேரிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்தார்.

கடந்த மார்ச் மாதம் 16ஆம் திகதி கொழும்பு தேசிய நூதனசாலை உடைக்கப்பட்டு பல லட்சம் பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

## சீரற்ற காலநிலையால் அதிவேக வீதியில் விபத்துக்கள் அதிகரிப்பு

கொழும்பு,ஏப்.17

இலங்கையில் சீரற்ற காலநிலை காரணமாக தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் இடம்பெறும் வாகன விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

தெற்கு அதிவேக வீதியில் நேற்றுமுன்தினம் எட்டு வாகன விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன என்று அவர் தெரிவித்தார்.

மழையுடன் கூடிய காலநிலை மற்றும் பனிமூட்டம் காணப்படும் சந்தர்ப்பங்களில் அதிவேக நெடுஞ்சாலையைப் பயன்படுத்தும்போது வேகத்தைக் கட்டுப்படுத்தி போக்குவரத்தில் ஈடுபடுமாறு பொலிஸார் சாரதிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் மணித்தியாலத்திற்கு 100 கிலோமீற்றர் வேகத்தில் பயணிக்க முடியுமாயினும் சீரற்ற காலநிலையால் குறைந்த வேகத்தில் வாகனங்களைச் செலுத்துமாறு பொலிஸார் தெரிவித்தனர்.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலை திறக்கப்பட்ட நாள் முதல் இதுவரையான காலப் பகுதியில் 180 விபத்துக்கள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)



பாலஸ்தீன ஜனாதிபதி முஹம்மர் அப்பாஸ் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு கொழும்பை வந்தடைந்த பின் விருந்தினர் பதிவேட்டில் கையொப்பமிடுகிறார்.

## தடுப்புக் காவலில் வைக்கப்பட்டவர் உயிரிழப்பு

பொலிஸார் விசாரணை

கொழும்பு,ஏப்.17

கஞ்சா போதைப் பொருளை வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நபர் ஒருவர் வாதுவ பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது உயிரிழந்த சம்பவம் குறித்து பொலிஸார் விசேட விசாரணை ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

இந்தநபர் நேற்று முன்தினம் அதிகாலை 5 மணிக்கு சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது, வாத்துவ பிரதேசத்தில் வைத்து பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்திருந்த போதே இந்த மரணம் நிகழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ச)

### பொலிஸ் நிலையத்தில் கடத்தல்காரர்

## கிரியெல்ல எம்.பியின் கூற்று நியாயமற்றது: கோத்தபாய



தகவல்கள் வழங்கப்பட்டால் குற்றவாளிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும்.



கொழும்பு,ஏப்.17

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்லவுக்கு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ சவால் விடுத்துள்ளார். கடத்தல் சம்பவமொன்று தொடர்பில் பொலிஸ் நிலையத் தில் முறைப்பாடு செய்யச் சென்றதாய் அங்கு கடத்தல்காரர்கள் இருந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்தார் என்று லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

சிரேஷ்ட அரசியல்வாதியொருவர் இவ்வாறான கருத்துக்களை வெளியிடுவது நியாயமற்றது என்று கோத்தபாய ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கோத்தபாய மேலும் தெரிவித்ததாவது:

உண்மையில் குறித்த சம்பவம் இடம்பெற்றிருந்தால் அது பற்றிய தகவல்களை வழங்க வேண்டும்.

தகவல்கள் வழங்கப்பட்டால் குற்றவாளிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும்.

லக்ஸ்மன் கிரியெல்ல ஐக்கிய நாடுகள் அமைப்பு மற்றும் சர்வதேச சமூகத்தின் தாளத்துக்கு ஏற்ப ஆட்டம் போடுகின்றார்.

1987,1988 ஆம் ஆண்டுகளில் இலங்கை யில் அதிகளவு கடத்தல்கள், காணாமற் போகும் சம்பவங்கள் இடம்பெற்றன.

உண்மை நிலைமைகளை அறிந்து கொள்ளாமலேயே லக்ஸ்மன் கிரியெல்ல இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.- என்றார். (ச)

## வடக்கு, கிழக்கு மக்களுக்கு அரசியல் அதிகாரம் இல்லை

### இதுவே பிரச்சினைக்குக் காரணம் என்கிறார் சந்திரிகா

கொழும்பு,ஏப்.17

வடக்கு,கிழக்கு தமிழ் மக்களுக்கு அரசியல் அதிகாரம் இன்மையே பிரச்சினைகளுக்கான காரணம் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழர்களுக்கு அரசியல் தீர்வை வழங்குவது தொடர்பில் பெரும்பான்மையான சிங்கள மக்கள் எதிர்க்கவில்லை.

தமிழர்களுக்கு எதிரான நிலைப்பாட்டை சிங்கள மக்கள் கொண்டிருப்பதாக தெரிவிக்கப்படும் கருத்துக்கள் மிகவும் பழையானவை. இதுவரையில் தமிழ் மக்கள் எதிர்நோக்கி வருகின்ற பிரச்சினைகள் தொடர்பில் சிங்கள மக்களுக்குத் தெரியாது.

அரசியல் லாப நோக்கங்களுக்காக இனப் பிரச்சினையை அரசியல்வாதிகள் தூண்டி விடுகின்றனர். அரசியல் வாதிகள் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தொடர்ச்சியாக சிங்கள மக்களிடமிருந்து மூடிமறைத்து வருகின்றனர்.

தமிழ் மக்களுக்கு அதிகாரம் பகிரப்பட வேண்டும், நாட்டின் அனைத்து இன மக்களுக்கும் சம உரிமை வழங்கப்பட வேண்டும். தமிழ் மக்களுக்கு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமென அரசியல் மேடைகளில் தெரிவித்த தமக்கு தேர்தல்களில் அதிகளவு வெற்றி கிடைத்துள்ளது. சிங்கள மக்கள் அதிகாரப் பகிர்வை எதிர்க்கவில்லை என்பதற்கு இதுவே சான்றாகும்.

போர் நிறைவடைந்து மூன்று ஆண்டுகள் பூர்த்தியடைந்துள்ள நிலையில் அரசு வடக்கு மக்களுக்கு போதியளவு சேவைகளை வழங்கவில்லை. தமிழ் மக்கள் தொடர்ந்தும் தற்காலிக முகாம்களில் தங்கியிருக்கின்றனர். ஏன் அவர்கள் இதுவரை சொந்த இடங்களில் மீள் குடியேற்றப்படவில்லை.

போர் நிறைவடைந்து மூன்று ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் வடக்கு, கிழக்கில் படையினரை அதிகரிக்க வேண்டிய அவசியமில்லை. தமிழ் மக்கள் அமைதியானவர்கள், அனைத்து தமிழர்களையும் பயங்கரவாதிகளாகக் கருத முடியாது.- என்றார்.

## கண்ணிவெடி அகற்றும் பெண்களின் ஆதங்கம்

கொழும்பு,ஏப்.17

இலங்கையில் கண்ணிவெடி அகற்றும் தொழிலில் பெண்கள் ஈடுபட்டுவருகின்றனர்.

இலங்கையில் நடைபெற்ற போரால் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களைச் சேர்ந்த பெண்கள் பல்வேறு வழிகளிலும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் அவர்கள் எந்தத் தொழிலையும் மேற்கொள்ள வேண்டிய கட்டாய நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த நிர்ப்பந்தம் அவர்களை ஆண்களுக்கு நிகரான வாழ்க்கை நிலையை எதிர்கொள்ள வேண்டிய சவாலை அளித்திருக்கிறது. அதுவே ஆண்களுக்கே உரித்தான கடினமான தொழில்களையும் கூட செய்துதான் ஆக வேண்டும் என்ற சூழ்நிலையை அந்தப் பெண்களுக்கு ஏற்படுத்தியிருக்கிறது.

ஆபத்துமிக்க கண்ணிவெடி அகற்றும் தொழிலில் தாங்கள் ஈடுபடுகின்ற போதிலும், சமூகத்தில் தங்களுக்கு உரிய மரியாதை கிடைப்பதில்லை என்று கண்ணிவெடி அகற்றும் வேலையில் ஈடுபட்டுள்ள பெண்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இலங்கையில் சுமார் 3,600 பேர் கண்ணிவெடி அகற்றும் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். [illegible] மேற்பட்டவர்கள் பெண்கள் என்று [illegible] குறிப்பிடத்தக்கது. (ச)

## மாத்தறையில் ஒருவர் சுட்டுக்கொலை

கொழும்பு,ஏப்.17

மாத்தறைப் பிரதேசத்தில் ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ரணில் (வயது 35) என்ற நபரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளவர் ஆவார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இதுவரை கைது செய்யப்படவில்லை.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## குணரட்ணத்தின் பெயர் கறுப்புப் பட்டியலில்

கொழும்பு,ஏப்.17

ஆஸ்திரேலிய கடவூச் சீட்டைப் பயன்டுத்தி இலங்கை வந்திருந்த இடதுசாரி தலைவரான நோயேல் முதலிகே என்ற பிரேமகுமார் குணரட்ணத்தின் பெயரை இலங்கை குடிவரவு, குடியகல்வு திணைக்களம் கறுப்பு பட்டியலில் சேர்த்துள்ளது.

குணரட்ணம் தனது விசா அனுமதிக் காலம் முடிவடைந்து 6 மாதங்கள் இலங்கையில் தங்கியிருந்துள்ளார். இதற்கான அபராதமாக செலுத்த வேண்டிய 40 ஆயிரம் ரூபாவை செலுத்தவில்லை என்பதால், அவரது பெயர் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.

குணரட்ணம் கடந்த 10 ஆம் திகதி ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பி வைக்கப்படுவதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட போதே இந்த அபராதம் குறித்து அவருக்கு அறிவிக்கப்பட்டது. எனினும் அவர் அபராதத் தொகையை செலுத்தவில்லை என்று இலங்கை குடிவரவு, குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

பிரேமகுமார் குணரட்ணம் இலங்கை செல்வதற்கு எந்தத் தடையுமில்லை. அவர் இலங்கைக்குச் செல்வதற்கு முன்னர் செலுத்த வேண்டிய அபராதத் தொகையை செலுத்தினால், அவரது பெயர் கறுப்புப் பட்டியலில் இருந்து நீக்கப்படும் என்று குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE HALO TRUST

## சாரதிக்கான பதவி வெற்றிடம்

ஹெலோ ரஸ்ட் ஆனது பிரித்தானியாவை தளமாகக் கொண்டு உலகளாவிய ரீதியில் 10 நாடுகளில் இயங்கிக் கொண்டிருக்கிறது. இலங்கையில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் மிதிவெடிகள் மற்றும் வெடிக்கத்தக்க பொருள் களை அகற்றிக்கொண்டிருக்கிறது.

ஹெலோ ரஸ்ட்டின் எதிர்கால வேலைக்காக சாரதி களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவர் களின் அத்தியாவசிய சேவைகளாவன மிதிவெடி அகற்றும் அணிகளை மிதிவெடித்தளத்திற்கு நகர்த்திச் செல்வதும் அங்கு விபத்து நிகழ்ந்தால் அம்புலன்ஸ் சேவை வழங்கு வதும் ஆகும்.

அனைத்து விண்ணப்பதாரிகளும் AD ஓட்டுநர் உரிமம் வைத்திருக்கவேண்டும்

**ஆர்வமுள்ளவர்கள் உங்களுடைய சுயவிவரக்கோவை மற்றும் தொடர்பு கொள்ளவேண்டிய விவரங்களுடன் அனுபவமுள்ளவர்கள் தங்கள் விவரங்களை கீழ் உள்ள முகவரிக்கு சமர்ப்பிக்கவும்.**

**ஹெலோ ரஸ்ட், 450, திருநகர் மேற்கு, கிளிநொச்சி**
**அனைத்து விண்ணப்பங்களும் 23 சித்திரை 2012 திங்கட்கிழமைக்கு முன்னதாக சமர்ப்பிக்கப்படவேண்டும்**

## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் மதியாபரணம்

*(கிளி மாஸ்ரர்)*

கட்டுவன் தெற்கு, மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் மதியாபரணம் கடந்த (10.04.2012) செவ்வாய்க்கிழமை இறை பதமடைந்தவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - பொன்னம்மா தம்பதியரின் அன்புமகனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சுந்தரம் தம்பதியரின் அன்புமருமகனும் நாகேஸ்வரியின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான இரத்தினம் ஆசிரியர், சுந்தரமூர்த்தி ஆசிரியர் மற்றும் புவனேஸ்வரி (இணுவில்), முத்தாபரணம் (இணுவில்), சிவபாதசுந்தரம் (கொக்குவில்), இராசமலர் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பாமினி, சுதாயினி,பாலினி, சாமினி ஆகியோரின் அன்புத்தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.04.2012) செவ்வாய்க் கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மானிப்பாய் வீதி,
பாலாவோடை, இணுவில்

தகவல்:
முத்தாபரணம் (குஞ்சு)
சகோதரி

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 28 ★ 03 ★ 1947 — மறைவு 18 ★ 03 ★ 2012

*அமரர்*
### மாலாணி ஆழ்வாப்பிள்ளை

கடந்த (18.03.2012) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்த மாலாணி ஆழ்வாப்பிள்ளையின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (17.04.2012) செவ் வாய்க்கிழமை காலை 7.00 மணிக்கு கீரிமலை தீர்த்தக் கரையிலும் அதனைத் தொடர்ந்து இடம் பெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், மதியபோசன நிகழ் விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள் கின்றோம். இதனை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.

நிரந்தர முகவரி:
மயிலிட்டி வடக்கு,
மயிலிட்டி

தற்காலிக முகவரி:
நாகம்மாள் கோயில் வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்

தகவல்:
பொ. சிவமகேஸ்வரன்
(பெறாமகன் - சிவம்)
தனேஸ்வரி

# உணவகங்களின் தரப்படுத்தல் குறித்து கலந்துரையாடல்

குருநகர்,ஏப் 17

குருநகர்ப் பகுதியில் இயங்கி வரும் உணவு கையாளும் நிறுவனங்களை தரப்படுத்துவது தொடர்பான கலந்துரை யாடல் அண்மையில் குருநகர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஞானசோதி தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் குருநகரில் இயங்கும் உணவு கையாளும் நிறுவனங் களைச் சேர்ந்த 28 உரிமையாளர்கள் கலந்து கொண்டார்கள்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட யாழ்.மாநகர சபையின் குருநகருக்கான பொதுச் சுகாதார பரிசோதகர் உணவு கையா ளும் நிறுவனங்களின் தரக் கணிப்பீட்டுப் படிவம் தொடர்பாகவும் மதிப்பெண் களின் அடிப்படையில் உணவு கையாளும் நிலையங்களை ஏபிசிடி தரத்தில் வகைப் படுத்துவது தொடர்பாகவும் விளக்கம் வழங்கினார். (வ-51)

## தரம் II தாதிய உத்தியோகத்தருக்கு வினைத்திறமைகாண் பரீட்சை

தாதிய உத்தியோகத்தர்கள் தரம் II ஐச் சேர்ந்தவர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை எதிர்வரும் ஜூலை மாதம் 29 ஆம் திகதி நடைபெற உள்ளது என்று சுகாதார அமைச்சின் பரீட்சைகள் கிளை சகல சுகாதார அமைச்சின் கீழ் இயங்கும் வைத்தியசாலைப் பணிப்பாளர்களுக்கும் நிறுவனத் தலை வர்களுக்கும் சுற்றிக்கை மூலம் அறிவித்துள்ளது.

தாதிய உத்தியோகத்தர்கள் தரம் II இற்கு நியமிக்கப்பட்டு மூன்று வருடங்கள் நிறைவடைவதற்குள் இவ் வினைத்திறமை காண் தடைப் பரீட்சையில் சித்தியடைய வேண்டுமென தாதிய உத்தியோகத்தர்களது சேவைப்பிர மாணக் குறிப்பில் குறிப்பிடப்பட் டுள்ளது.

இந்தப் பரீட்சைக்குத் தோற்ற உள்ள வர்களின் விண்ணப்பங்களை பெற்று எதிர் வரும் 30 ஆம்திகதிக்கு முன்னர்தமக்கு அனுப்பி வைக்குமாறு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் ஊறகாவற்றுறை, சாவகச்சேரி, தெல்லிப்பழை, பருத்தித்துறை, சங்கானை,அச்சுவேலி, கோப் பாய், காரைநகர், வல் வெட்டித்துறை வைத்தியசாலைகளின் நிறு வனத் தலைவர்களைக் கோரியுள்ளது.

(வ-310)

## சத்தியசாயி பாபா நிலையத்தினரால் முதியோருக்கு புடைவைகள்

ஸ்ரீ சத்திய சாயிபாபாவின் முதலாவது மகா சமாதி தின ஞாபகர்த்தமாக கொக்குவில் சத்திய சாயி நிறுவனம் ஆனைக்கோட்டை யிலுள்ள முதியோரின் பகல் பராமரிப்பு நிலை யத்தில் தங்கியுள்ள முதியோர்களுக்கு புதுவருட தினத்தையொட்டி வஸ்திரதான நிகழ் வாக உடுபுடைவைகளை வழங்கிக் கௌர வித்தது.

அவர் மகா சமாதியடைந்த தினமான எதிர் வரும் 21 ஆம் திகதியும் 22 ஆம் திகதி யும் யாழ். பல்கலைக்கழக முன்றிலிலிருந்து பேரணியும் இடம்பெறும். (வ-100)

**வீட்டுப்பணிப்பெண் தேவை**

வீட்டில் தங்கியிருந்து பணிபுரியக்கூடிய பணிப்பெண் தேவை. கவர்ச்சிரமான சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு : 077 2206591

**விற்பனைக்கு**

★ ஐஸ்கிறீம் வான் விற்பனைக்கு (டிமோ பட்டா)
★ டிமோபட்டா கூட்டுடன் விற்பனைக்கு
5 K.W. ஜெனரேட்டர் - 01, D. பிறீசர் -01 மற்றும் இதர பொருள்களுடன் ஐஸ்கிறீம்வான் விற்பனைக்கு
★ மிகவும் குறுகிய காலம் பாவித்தது
தொடர்பு : 077 9390832, 077 5548033

**தேவை**

கணக்காளர், கணக்கு உதவியாளர், சாரதி (சேல்ஸ்வான்) 5 வருட அனுபவமுள்ளவர்கள் மட்டும் நேரில் வரவும்.

பேப்பர் ஹவுஸ், யாழ்ப்பாணம்.

**தவறிவிட்டது**

EPHT- 5703 இலக்கமுடைய மோட்டார் வாகனத்தின் இலக்கத்தகடு தவறிவிட்டது. இதை கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரி அல்லது தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்
இல. 74, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். 075 718 2184, 021 321 6328

**உடனடி வேலைவாய்ப்பு**

பிரபல தனியார் தொலைத்தொடர்பாடல் நிறுவனத்துக்கு யாழ். மற்றும் கிளிநொச்சிக்கு விற்பனைப் பிரதிநிதி உடனடியாக தேவைப்படுகிறது. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
தகைமை: 1) சாதாரண தரத்தில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி
2) சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் உந்துருளி உடையவர்கள் நேரில் வரவும்.
Hutch shop, MPCS Building, K.K.S. Road, Jaffna.
(17090) (4,5,6,9)

## கண்ணீர் அஞ்சலி

எமது கழக உறுப்பினரும்,
கிருத்திகா என்ரப்பிறைஸ் உரிமையாளருமாகிய

### மகாலிங்கம் சிவஞானசுந்தரம்

அவர்களின் மறைவைக் கேள்வியுற்று துயரடைகின்றோம். அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இல. 165, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

## இதய அஞ்சலிகள்



*திருமதி சுரேஷ் மஞ்சுளா*

(முடவேம்படி, சுன்னாகம்)

மனதினிக்கும் பரிவான உன்செயல்
கனிவுமிகு உன் உளப்பாங்கு
பொறுமைசேர் நிதான அணுகல்
செவிநிறை உன்குரல் சிரிப்பு
எல்லாமே விதி தொலைத்தது
எமை விட்டு கனவாகிப்போனது
என் செய்வது என நொந்து
வேண்டுகின்றோம் ஆண்டவனை - உன்
வாழ்வு உயிருறவுகளுக்கு வழிகாட்டும்
நினைவு நட்புறவுகளுக்கு பலமூட்டும்

யாழ்ப்பாணம்.

என்றும் உன் நினைவகலா
அன்பு நட்புறவுகள்

## 31 ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பு



*20.03.2012 அன்று சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவர்*

அமரர்
### முருகேசு இராசையா

பிறப்பு:- 18★05★1938
இறப்பு:- 20★03★2012

அவர்களின் அந்தியேட்டிக்கிரியை 19.04.2012 அன்று அவரின் இல்லத்திலும்அதனைத் தொடர்ந்து இல.146, பிரதான வீதியில் உள்ள ராஜ்மஹால் மண்டபத்தில் நடைபெறும் மதிய போசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.9,விகார வீதி, திருகோணமலை. - குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

### சுந்தரலிங்கம் மயூரன்



நாம் வந்த நாள் முதல் உன் நட்பை
தந்த இனியவனே..
ஒரு நொடியில் எமைப் பிரிய என்ன பாவம்
செய்தோமடா ..
உன்னை பிரிய மனம் இல்லாது
என்றும் உன் நினைவில்
வாழ்கின்றோம் ...
உன்னோடு உனக்குள் வாழ்ந்த
உன் அருமைத் தோழர்கள்

**HND XIII Software Development Students**
**IIS City Campus**

(17085) (2,6,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

### கனேடிய ஜனநாயகக் கட்சியின்

# மாகாணத் தலைவராகத் தமிழர் ஒன்ராறியோவில் தெரிவு;

கனேடிய புதிய ஜன நாயகக் கட்சியின் - ஒன்ராறியோ மாகாணத் தலைவராக தமிழர் நீதன் சண்முகராஜா தெரிவானார்.

கனேடிய நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியாகத் திகழ்வது புதிய ஜனநாயகக் கட்சி. இந்தக் கட்சியின் சார்பில் போட்டியிட்டே தமிழ்ப்பெண் ராதிகா சிற்சபை ஈசன் வெற்றிபெற்று முதலாவது தமிழ் - கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் என்ற பெருமையோடு இன்று பதவியில் இருக்கிறார். இந்தப் புதிய ஜனநாய கக் கட்சியின், ஒன்ராறியோ மாகாணத்துக்கான தலைவரைத் தேர்ந்தெடுக்கும் வாக்கெடுப்பு 14 ஆம் திகதி ஹமில்ட்டனில் நடைபெற்றது.

இந்த வாக்கெடுப்பில் தமிழ் இளைஞரான நீதன் சண்முகராஜா வெற்றிபெற்று புதிய ஜனநாயகக் கட்சியின் ஒன்ராறியோ மாகாணத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

ஒன்ராறியோ மாகாணமே கனடாவில் அதிக மக்கள் தொகை கொண்ட மாகாணம். இந்த மாகாணத்தில்தான் ஹொரண்டோ மாநகரம், மற்றும் கனடியத் தலைநகர் ஒட்டாவா ஆகியன உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

சிறுவயது முதலே தமிழ் இன விடிவு, தமிழீழ விடுதலை சார்ந்த பணிகளில் தன்னை ஈடுபடுத்தியவர் நீதன்.

ஊடகத்துறையிலும் தனது திறமையை வெளிப்படுத்தியவர். மக்கள் மேம்பாடு, தொழிலாளர் உரிமைகள் போன்றவற்றுக்காக அயராது உழைத்தவர். உரிமை மறுக்கப்பட்ட மக்கள் முகத்தின் ஆதரவுக் குரலாகக் கனடிய அரசியல் அரங்கில் தொடர்ந்து ஒலித்து வந்தவர்.

கனேடிய நாடாளுமன்றத்தில் முதலாவது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினராக நீதன் விளங்குவார் என்று எல்லோரும் பெரிதும் எதிர்பார்த்தனர்.

ஆனால் அந்த இடம் ராதிகா சிற்சபை ஈசன் வசமானது. தற்போது



ஒன்ராறியோ மாகாணத்தின் புதிய ஜன நாயகக் கட்சித் தலைவராக வெற்றிபெற்றுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினராக மட்டுமல்ல; பிரதமராகக் கூடத் தமிழர் வரும் நாள் தொலைவில் இல்லை என்ற புதிய கனவைத் தமிழர் மனங்களில் விதைத்துள்ளார் நீதன். (ந)

### அன்னை பூபதியின் நினைவுதினம் ஜேர்மனில் அனுஷ்டிப்பு

அணையாத் தீபம் அன்னை பூபதி அவர்களின் 24 ஆம் ஆண்டு நினைவுநிகழ்வு கடந்த சனிக்கிழமை ஜேர்மனில் சிறப்பாக நடைபெற்றது.

அகவணக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட நினைவு நிகழ்வில் சிறுவர்களின் கவிதைகள் அதைத்தொடர்ந்து விடுதலைக் கானங்கள், எழுச்சி நடனங்கள் என இளையோர்களால் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டன.

தேச விடுதலைப் போராட்டத்திலே பொதுமகன் ஒருவர் எத்தகைய உயர்ந்த தியாகத்தைப் புரிய முடியும் என்பதற்கு அன்னை பூபதி ஒரு சிறந்த உதாரணம். அவரின் தியாகம் ஈடிணையற்றது. அது அன்னையர் குலத்துக்கு மட்டுமன்றி ஒட்டுமொத்த தமிழ் இனத்துக்கே பெருமை. அன்னை பூபதி போன்ற நாட்டுப்பற்றாளர்கள் கண்டகனவை நனவாக்கவேண்டும். இதுவே, அவரைப் போன்று தேசத்துக்காக உயிர் துறந்த நாட்டுப்பற்றாளர்களுக்கு நாம் செலுத்தும் உண்மையான அஞ்சலி. இவ்வாறு அந்த நிகழ்வில் வலியுறுத்தப்பட்டது. (ந)

# யுரேனியம் தேடும் இலங்கை அரசு

கொழும்பு, ஏப். 17

அணுசக்தி மூலப்பொருள்களான யுரேனியம், தோரியம் போன்றவற்றின் தாதுப் படிமங்கள் கிடைக்குமா என்று அரசு ஆய்வு செய்து வருகிறது.

இந்தத் தகவலை அணுசக்தி ஆணையத் தலைவர் ரஞ்சித் விஜயவர்த்தன கடந்த ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தார். அவர்மேலும் தெரிவித்ததாவது:-

சர்வதேச அணுசக்தி முகாமையின் உதவியுடன் அணு மூலப்பொருள்களைத் தேடும் ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 2012 முதல் 2013 வரை இந்த ஆய்வுப் பணிகள் நீடிக்கும். இலங்கை நிலவியல் ஆய்வு மற்றும் சுரங்கத் துறையால் நடத்தப்பட்டுவரும் இந்த ஆய்வுக்குத் தேவையான தொழில்நுட்ப உதவிகளை சர்வதேச அணுசக்தி தொடர்பகம் செய்து வருகிறது. இதில் இந்தியா சம்பந்தப்படவில்லை.

மாத்தளை மற்றும் பேருவளை, நாட்டின் மேற்கு கடலோரப் பகுதி, கொழும்பு நகரின் தெற்குப் பகுதி ஆகிய இடங்களில் யுரேனியம் அல்லது தோரியப் படிமங்கள் இருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. அணு மூலப்பொருள்களைத் தேடும் ஆய்வுகள் நடைபெற்று வந்தாலும் அணு உலைகளை அமைக்கும் திட்டம் ஏதும் இல்லைஎன்று அவர்கூறினார். அணுவலை தொடர்பாக வெளியான ஊடகச் செய்திகளை அவர் திட்ட வட்டமாக மறுத்தார்.

இதனிடையே,''இந்தியாவின் அணுசக்தித் திட் டங்களுக்குத் தாங்கள் எதிரிகள் இல்லை. அணு மின்சாரம் தயாரிக்கும் இந்தியாவின் உரிமையை நாங்கள் மதிக்கிறோம்''என்று எரிசக்தித்துறை அமைச்சர் சம்பிக்க ரண வக்க கூறினார் என்று 'சிலோன் டுடே' செய்தி வெளியிட்டுள்ளது. (ந)

### சுனாமி எச்சரிகை அன்ரனாவை திருடிய ஐவரும் சிக்கினர்

இந்து சமுத்திரத்தில் பொருத்தப்பட்டிருந்த சுனாமி எச்சரிக்கை மற்றும் வானிலை தரவு சேகரிப்பு அன்ரனாவை திருடியமை தொடர்பில் தேடப்பட்டு வந்த ஐந்து சந் தேக நபர்கள்கைது செய்யப்பட்டுள்ளனர்.

தெவிநுவரப் பிரதேசத்தைச் சேர்ந்த ஐந்து சந்தேக நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். மீன்பிடியில் ஈடுபட்டிருந்த அவர்கள் இந்த உபகரணத்தை திருடியுள்ளனர் எனச் சந்தேகிக்கப்படுகின்றது. திருடப்பட்டதாக கூறப் படும் உபகரணம் கடந்த மார்ச் மாதம் 24 ஆம் திகதி பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. (ந)

**கோழிக்குஞ்சு விநியோகம்**

No.1 பிறீமா புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். முன் கூட்டியே பதிவு செய்யவும்.

தொடர்பு:

நல்லூர் பாம் சென்ரர்
#19, முருகேசர் ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்
தொ.பே : 021 2226944

நல்லூர் பாம் சென்ரர்
கனகபுரம் வீதி,
கிளிநொச்சி
தொ.பே : 077 6225944

சுட்டி பாம் சென்ரர்
வட்டுக்கோட்டை
தொ.பே : 077 8996085

**இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி**



தோற்றம்: 29.06.1960
அமரர்
மறைவு: 17.04.2010

**கந்தசாமி சிவகுமார்** (குமார்)

வட்டு கிழக்கு,
சித்தன்கேணி.

றோசனாதேவி. (மனைவி)

**வீட்டுப்பணிப்பெண் தேவை**

40 - 55 வயதெல்லையுள்ள சமையல் வீட்டு வேலை தங்கியிருந்து செய்யக்கூடியவரை வைத்திய குடும்பத்தினர் தேடுகின்றனர்

தொடர்பு : 077 3419340

**பணிப்பெண் தேவை**

யாழ்ப்பாண வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை

சம்பளம் : ரூபா 10,250/=

தொடர்பு : 077 3765628

**தவறிவிட்டது**

யாழ்ப்பாணத்திற்கும் சாவகச்சேரிக்கும் இடையில் NP.TH 1139 என்னும் வாகன இலக்கத்தகடு தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உடன் தொடர்புகொள்ளவும்

தொடர்பு:-021 222 5733, 077 801 3339

**இலங்கை கணக்காளர் சேவை போட்டிப் பரீட்சை புதிய பிரிவு**

பிரிவு II திங்கள் முதல் வெள்ளி வரை பிற்பகல் 5.00 மணி தொடக்கம் 7.00 மணிவரை

ஆரம்பம்: 19.04 (வியாழன்) மாலை 5.00 மணி

பிரிவு I சனி, ஞாயிறு 1.00 மணியிலிருந்து 6.00மணிவரை நடைபெறுகின்றது.

துறைசார் நிபுணர்களின் சேவை
யாழ்ப்பாணக்கல்லூரி
பட்டப்படிப்புக்கள் பிரிவில்
(யாழ்.ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கி அருகில்)

தொடர்பு: 0754 164 564

(C1794) (6.7.10)

**Special English Tution**

English, Sinhala, German Languages & Spoken English With Grammar Will be Teaching at Sithankeney. Start on 18th April 2012

Contact : M.P. Mahendiran
Expert Teacher
T.P : 077 5926983

**6ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



அமரர்
அந்தோனிமுத்து திலகசூரியர் (திலகு)

பிறப்பு 10★10★1949

இறப்பு 17★04★2006

ஆண்டுகள் ஆறு ஆகிடினும்
ஆறவில்லை எம் துயரம்
இமைகள் இமைக்க மறந்தாலும் - எம்
இதயம் உங்களை நினைக்க மறப்பதில்லை
உயிர் உள்ளவரை உமை மறவோம்
உமக்காய் இறைவனை வேண்டுகின்றோம்.

"நிரஞ்சனி"
சண்டிலிப்பாய் வீதி,
பண்டத்தரிப்பு. (17080) (45.6.7)

என்றும் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

**பத்தாம் ஆண்டு நிறைவு நினைவு அஞ்சலி**

தோற்றம் 14★05★1928



மறைவு 09★05★2002

அமரர் கந்தர் சின்னப்பு நல்லதம்பி
(கிளாக்கர்)

அன்பான பார்வையும் ஆறுதலான வார்த்தைகளும்
பண்பான பழக்கங்களும். பாரில் உயர்வுறவே
உள்ளத்தால் உழைப்பால் உன்னதமாய் வழிகாட்டி
வள்ளலாய் வாழ்ந்தீர் வளமுறவே வாழவைத்தீர்
ஆண்டுகள் பத்து அவசரமாய் விரைந்ததோ
நீண்ட நினைவுகளில் நெட்டுயிர்த்து நிற்கின்றோம்.
ஆத்மா சாந்தி பெற்றிட வேண்டி நிற்கும்

"செல்வகிரி"
மீசாலை வடக்கு, மீசாலை. (17050) (45-6-9)

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு- கிழக்கில் சுற்றுலாத்துறையை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகள்

## அரசின் திட்டங்களுக்கு சுற்றுலா, கைத்தொழில் சம்மேளனம் பூரண ஆதரவு

இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை 2016ஆம் ஆண்டில் 25இலட்சமாக அதிகரிக்கும் அரசின் திட்டத்துக்கு சுற்றுலா மற்றும் கைத்தொழில் சம்மேளனம் பூரண ஒத்துழைப்பை வழங்கி வருவதாக அதன் தலைவர் ஏ.எம்.ஜெளபர் 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

உலக நாடுகள் இலங்கையை சுற்றுலா மையமாக இனங்கண்டிருப்பது இலங்கையின் சுற்றுலாத்துறைக்கு கிடைத்த பெரும் வெற்றியென்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையின் சுற்றுலாத்துறை வளர்ச்சி, மற்றும் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பில் கருத்து தெரிவித்த இலங்கை சுற்றுலா மற்றும் கைத்தொழில் சம்மேளன தலைவர் ஜெளபர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடக்கு, கிழக்கில் சுற்றுலாத்துறையை மேம்படுத்த பல முன்னோடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். இம்மாகாணங்களிலுள்ள சுற்றுலா மையங்களை இனங்கண்டு அபிவிருத்தி செய்யும் அரசின் நடவடிக்கைகளுக்கு எமது சம்மேளனம் ஆக்கபூர்வமான ஒத்தாசைகளை வழங்கிவருகின்றது.

வடக்கு, கிழக்கிலுள்ள சுற்றுலா மையங்களை அபிவிருத்தி செய்யும் செயல் திட்டத்தின் கீழ், அங்குள்ள சுற்றுலாத்துறையில் ஈடுபடும் கைத்தொழிலாளர்களை ஊக்குவிக்கும் பல்வேறு திட்டங்களை எமது சம்மேளனம் முன்னெடுத்து வருகின்றது.

குறிப்பாக கைத்தொழில் முயற்சியாளர்களுக்கு கடன் வசதி, பயிற்சித் திட்டங்கள் என்பன மிக அவசியமான அவசரமான விடயங்களாகவுள்ளன.

இது தொடர்பில் பல்வேறு நாடுகளின் தூதுவர்களுடனும் ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி போன்றவற்றுடனும் உத்தியோகபூர்வ பேச்சுக்களை மேற்கொண்டுள்ளோம்.

இப்பேச்சுக்கள் மிக சாதகமான பிரதிபலிப்புக்களை பெற்றுத் தரும் என்ற நம்பிக்கை உள்ளது.

அத்துடன், வீடுகளை சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்கும் திட்டத்தை வடக்கு, கிழக்கிலும் ஊக்குவிக்கும் செயற்பாட்டையும் மேற்கொண்டு வருகின்றோம். இந்தத் திட்டம் தென்பகுதியில் பெருமளவில் வெற்றி பெற்றுள்ளது.

சுற்றுலாப் பயணிகளுக்கு வீடுகளை வழங்கும் திட்டத்தின் கீழ் 2015ஆம் ஆண்டில் 7ஆயிரம் வீடுகள் தேவைப்படுமென அரசு திட்டமிட்டுள்ளது. 2011இல் 6943 வீடுகள் இந்த வேலைத் திட்டதை முன்னெடுத்துள்ளன.

'சுற்றுலாவுக்குரிய சிறந்த நாடு இலங்கை' எனும் அரசின் இலக்கை பூரணமான வெற்றியடையச் செய்வதே எமது சம்மேளனத்தின் நோக்கம்; அதேநேரம் சுற்றுலாத் துறையில் ஈடுபடும் கைத் தொழிலாளர்களை ஊக்குவிப்பதும் எமது நோக்கில் மிக முக்கியத்துவம் வாய்ந்தது.

அமெரிக்காவின் பிரபல்யமிக்க பத்திரிகையொன்று சுற்றுலாவுக்குரிய சிறந்த நாடு இலங்கை என விவரித்துள்ளது. இது இலங்கையின் சுற்றுலாத்துறைக்கு கிடைத்த மிகப்பெரிய அங்கீகாரம் என்றார். (த)

# ஐஸ்கிறீம் விலையும் உயரலாம்



ஐஸ்கிறீம் தயாரிப்பதற்கான மூலப்பொருள்களின் விலை உயர்வடைந்துள்ளதால் இந்த ஆண்டு ஐஸ்கிறீம் விலை அதிகரிக்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உலக நாடுகளில் வசிக்கும் அதிகமான மக்கள் அதிகளவில் வனிலா வகை ஐஸ்கிரீமையே விரும்பி சுவைக்கின்றனர்.

இந்த வனிலா மூலப் பொருளின் உற்பத்தி குறைந்து காணப்படுவதாலும் விலை இந்த ஆண்டு கிலோ ஒன்றிற்கு 25 முதல் 30 டொலர் அதிகரித்துள்ளதாலும விலை யேற்றம் எதிர்பார்க்கப்படுகிறது.

மடகாஸ்கர் நாட்டில் மட்டும் ஆண்டு ஒன்றிற்கு 2ஆயிரம்தொன் அளவிற்கு வனிலா மூலப்பொருள் உற்பத்தி செய்யப்படுகிறது.

மேலும் வனிலா மூலப் பொருள்ஐஸ்கிறீம் தயாரிப்பதற்கு மட்டுமல்லாது மருத்துவ பயன்பாட்டிற்கும் வாசனை திரவியம் தயாரிப்பதற்கும் பயன்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# விவசாயத்தில் புரட்சியை ஏற்படுத்தும் ஹேலிஸ்

நாட்டின் விவசாயத்தில் தன்னிறைவை ஏற்படுத்தும் நோக்கில் ஹேலிஸ் நிறுவனம் மஹிந்த சிந்தனையின் அடிப்படையில்தனது வேலைத் திட்டத்தை கிராமங்கள் தோறும் வெற்றிகரமாக முன்னெடுத்து வருவதாக ஹேலிஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

கொழும்பிலுள்ள அந்நிறுவனத்தின் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அந்நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ரிஷ்வி சைட் கூறியவை வருமாறு:-

ஹேலிஸ் நிறுவன சால்ஸ் ஹேலி என்பவரால் 1878ஆம் ஆண்டு காலி நகரில் முதன் முதலாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. அன்று முதல் இதுவரை நாட்டின் விவசாயத் துறைக்கு பாரிய பங்களிப்பை வழங்கிவருகிறது.

இன்று இந்நிறுவனம் நாடு பூராகவும் 167 கிளைகளைக் கொண்டுள்ளது. 35 ஆயிரத்துக்கும் அதிகமான ஊழியர்களைக் கொண்டு சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றது. உழவு இயந்திரங்கள் மற்றும் பல விவசாயஉபகரணங்கள் இவற்றோடு பீடை நாசினிகள் உர வகைகள் உள்ளிட்ட பல்வேறுபட்ட விவசாயத்துடன் தொடர்புபட்ட பொருள்களை இந்நிறுவனம் இறக்குமதி செய்து விநியோகிக்கிறது.

இறக்குமதியில் மாத்திரமல்லாமல் பல்வேறு விவசாய உற்பத்திகளையும் ஏராளமான நாடுகளுக்கு ஏற்றுமதி செய்துவருகிறது. குறிப்பாக பூக்கள், மரக்கறி வகைகள் போன்றவற்றை குறிப்பிடலாம்.

இவ்வாறு மிக நீண்ட காலமாக ஹேலிஸ் நிறுவனம் நாட்டின் விவசாயத் துறைக்கு பாரிய சேவை யாற்றி வருகின்றது - என்றார்.

# பஜாஜை முந்தியது ஹொண்டா!




மோட்டார் சைக்கிள் விற்பனையில் முதன்முறையாக பஜாஜ்ஜை பின்னுக்குத் தள்ளி 2ஆவது இடத்திற்கு முன்னேறி இருக்கிறது ஹொண்டா மோட்டார் சைக்கிள் நிறுவனம்.

மோட்டார் சைக்கிள் உற்பத்தியில் இந்தியாவில், பஜாஜ் நிறுவனம் 2 ஆவது இடத்தில் இருந்து வந்தது. இந்நிலையில் மார்ச் மாதத்திற்கான விற்பனையில் பஜாஜ் நிறுவனம் சற்று பின்னுக்கு தள்ளப்பட்டுள்ளது.

பஜாஜ் நிறுவனத்தை விடவும் ஹொண்டா மோட்டார் சைக்கிள் நிறுவனம் 2,429 சைக்கிள்களை கூடுதலாக விற்றுள்ளது. இதன்மூலம் ஹொண்டா மோட்டார் சைக்கிள் நிறுவனம் முதன்முறையாக பஜாஜ்ஜை பின்னுக்குத் தள்ளிவிட்டு 2ஆவது இடத்தைப் பிடித்திருக்கிறது.



புதுவருட தினத்தை முன்னிட்டு மக்கள் வங்கி, யாழ். நாவலர் வீதிக் கிளையில் நடைபெற்ற நிகழ்வில் பிரபல தொழில் அதிபர் 'ஆன்ரா' ஸ்தாபனத்தின் உரிமையாளர் மயூரனுக்கு மக்கள் வங்கி முகாமையாளர் செ.கந்தசாமி நினைவுப் பரிசு வழங்குகிறார். (த)

# 15 வருடங்களில் 200 கண்காட்சிகள்: சாதனை நிகழ்த்திய LECS நிறுவனம்

இலங்கையின் புகழ் பெற்ற கண்காட்சி மற்றும் மாநாட்டு சேவைகள் நிறுவனம் (LECS) 15 வருடங்களில் சர்வதேச மட்டத்தில் 200 கண்காட்சிகள் மற்றும் மாநாடுகளை நடத்தி சாதனை படைத்துள்ளது.

இந்தச் சாதனைகளைப் பாராட்டி 2008, 2009 மற்றும் 2010 ஆகிய மூன்று வருடங்கள் தொடர்ச்சியாக மூன்று 'ஜனாதிபதி விருதுகள்' இந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளன.

இந்த மூன்று விருதுகளுக்குப் புறம்பாக 'Hall of Fame' எனும் விருது ஒன்றும் வழங்கப்பட்டுள்ளது. மிகவும் திறமையான மனித வளங்களைக்கொண்ட இந்த நிறுவனம் இலங்கை, இந்தியா மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளில் அலுவலகங்களைத் திறந்து சர்வதேச ரீதியில் மிகவும் சிறப்பாகச் செயற்பட்டுவருகின்றது.



LECS நிறுவனம் இந்த வருடத்தில் மொத்தம் 16 கண்காட்சிகளை ஏற்பாடு செய்து அவற்றுள் 5 கண்காட்சிகளை நடத்திமுடித்துள்ளது. மீதிக் கண்காட்சிகளை நடத்தி முடிப்பதற்கான தீவிர ஏற்பாட்டில் ஈடுபட்டுள்ளது.

மேற்படி கண்காட்சிகளுள் 'ஹோட்டல் ஏசியா' மற்றும் 'யூத் விஷன்' ஆகிய இரண்டு கண்காட்சிகளை மாலைதீவில் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இவை தவிர, வடக்கு, கிழக்கின் தேவைக்கேற்ப அங்கும் பல கண்காட்சிகளை நடத்துவதற்கு LECS நிறுவனம் விருப்பம் கொண்டுள்ளது. (த)

## பங்குச் சந்தை சோபை இழந்தது

புதுவருட கொண்டாட்டங்களை முன்னிட்டு பங்குச்சந்தை கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகள் மூன்று நாள்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதாக கடந்த வாரம் இடம்பெற்றிருந்தது.

2009ஆம் ஆண்டுக்கு பின்னர் சந்தையின் மொத்தப்புரள்வு அதிகளவு வீழ்ச்சி கண்ட வாரமாக கடந்த வாரம் பதிவாகியிருந்தது. திங்கள் மற்றும் செவ்வாய் ஆகிய தினங்களில் பங்குச் சந்தையின் பிரதான சுட்டிகள் எதிர் பெறுமதியில் நிறைவடைந்திருந்த பொழுதிலும், கடந்த வாரத்தின் இறுதி நாளான புதன்கிழமை மீண்டும் நேர் பெறுமதியை எய்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

# கோதுமை உற்பத்தி குறையும்?



உலக அளவில், நடப்பு 2012-13ஆம் ஆண்டில் கோதுமை உற்பத்தி 1.5 கோடி தொன் குறைந்து 68.1 கோடி தொன்னாக சரிவடையும் என இங்கிலாந்தைச் சேர்ந்த தானிய கவுன்சில் மதிப்பீடு செய்துள்ளது. ஆஸ்திரேலியா, கஜகஸ்தான், மொராக்கோ, உக்ரைன் ஆகிய நாடுகளில் கோதுமை உற்பத்தி குறைவே இதன் பின்னணியாக இருக்கும் எனத் தெரிகிறது.

நடப்பு ஆண்டில் சர்வதேச அளவில் கோதுமை பயன்பாடு 68.3 கோடிதொன்னாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தேவையை ஈடு செய்ய இயலாத அளவிற்கு உற்பத்தி சற்றே சரிவடையும் என கூறப்படுகிறது.

2011-12 ஆம் ஆண்டில் உலக கோதுமை உற்பத்தி 69.6 கோடி தொன்னாக இருந்தது. நடப்பு ஆண்டில் சர்வதேச அளவில் கோதுமை ஏற்றுமதியும் சற்றே சரிவடைந்து 13.6 கோடிதொன்னாக இருக்கும் என முன்னறிவிப்பு செய்யப்பட்டுள்ளது.

அதே சமயம் கோதுமை கையிருப்பு சென்ற ஆண்டின் அளவைக் காட்டிலும் சற்றே சரிவடைய வாய்ப்புள்ளது. உலகம் முழுவதுமாக 2011-12ம் ஆண்டில் கோதுமை கையிருப்பு 21 கோடிதொன்னாக இருந்தது. இது, நடப்பு பருவத்தில் 20.3 கோடி தொன்னாக குறையும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.கோட்டைப் பகுதி ஆய்வில் 2,500 ஆண்டுக்கு முந்திய சான்று

## அங்கு சோழர் கால நாணயங்கள், கருங்கல் கோயில் தூண்கள்

யாழ்ப்பாணம், ஏப்.17

யாழ்.கோட்டைப் பகுதிகளில் இடம்பெற்று வரும் ஆய்வில் 2500 ஆண்டுகளுக்கு முந்திய சான்றாதாரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இவை நகர அல்லது வணிகக் குடியிருப்புகள் இருந்தமையை உறுதியாகத் தெளிவுபடுத்துகின்றன என்று யாழ்.பல்கலைக் கழக வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் ப.புஷ்பரட்ணம் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

400 ஆண்டுகளுக்கு முன்னர் அதாவது 16 ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தில் கட்டிய கோட்டையுடன் தான் இங்கு வரலாறு தொடங்கியது என்று வரலாற்று அறிஞர்கள் இது வரை நம்பி வந்தனர்.

கடந்த 2010 ஆம் ஆண்டில் இருந்து யாழ்.பல்கலைக் கழகத்தின் தொல்லியல் துறை தொல்லியல் திணைக்களத்துடன் இணைந்து கோட்டைப் பகுதியில் ஆய்வு மற்றும் புனரமைப்புப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

1619 இல் யாழ்ப்பாண இராசதானியை வெற்றி கொண்ட போர்த்துக்கோயர் யாழ்ப்பாணத்தில் சிறிதும் பெரிதுமாக இருந்த 500 ஆலயங்களை இடித்து கோட்டை மற்றும் கிறிஸ்தவ ஆலயங்களைக் கட்டியுள்ளனர்.

நல்லூர் இராசதானியில் இருந்த பெரிய ஆலயத்தைக் கைப்பற்றி தமது நிர்வாக மையமாகப் பயன்படுத்தியதுடன் அதையும் பின்னர் இடித்து அழித்துள்ளனர்.

இவை உண்மை என்பதைக் கோட்டை புனரமைப்பின் போது கிடைத்துவரும் ஆலய வழிபாட்டுச் சின்னங்கள் உறுதி செய்கின்றன.

ஆய்வின் போது கிடைத்த புராதன மட்பாண்டங்கள், யாழ்ப்பாணக் கோட்டைக்கு மேற்கே காக்கைதீவு, ஆனைக்கோட்டை, தெற்கே சாட்டி, கிழக்கே அரியாலை, பூம்புகார் ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட சான்றாதாரங்கள் 2500 ஆண்டுகளுக்கு முந்திய பெருங்கற்கால அல்லது இரும்புக் கால பண்பாட்டுக்குரிய மக்கள் கோட்டைப் பகுதியிலும் வாழ்ந்துள்ளனர் என்பதை உறுதி செய்கின்றன.

கோட்டைப் பகுதியில் வாழ்ந்த மக்கள் 2000 ஆண்டுகளுக்கு முன்னரே இந்தியா, குறிப்பாக தமிழகம், உரோம், அரேபியா மற்றும் சீன நாடுகளுடன் நெருங்கிய வணிக கலாசார உறவுகளைக் கொண்டிருந்தனர் என்பதையும் உறுதிசெய்கின்றன.

போர்த்துக்கேயர் வருகை தருவதற்கு முன்னரே கோட்டை அமைந்த இடம் மேற்கு ஆசியா, கிழக்கு ஆசியா, தென்கிழக்கு ஆசியா முதலான நாடுகளுக்கிடையிலான வணிகத் தொடர்புகளுக்கு முக்கிய வணிகப் பாதையாக இருந்துள்ளது. என்பதையும் உறுதிப்படுத்த முடிகிறது.

கோட்டைக்குள் கண்டுபிடிக்கப்பட்ட 11 ஆம் நூற்றாண்டுக்குரிய சோழர் கால கல்வெட்டு ஒன்று, முதலாம் இராஜேந்திர சோழன் நல்லூரில் இருந்த ஆலயம் ஒன்றுக்கு நெல், ஆடு, இலுப்பைப்பால் என்பவற்றை தானமாகக் கொடுத்தான் என்பதைக் கூறுகிறது.

சோழர் கால நாணயங்கள், கருங்கல்லால் ஆன கோயில் தூண்கள் சிலவும் அங்கு கிடைத்துள்ளன.

இவற்றுடன் பாளி நூல் கூறும் விடயங்களையும் ஆராயும் போது தற்போது கோட்டை இருக்கும் இடத்தில் சோழர் ஆட்சிக் கால ஆலயங்களுடன் மண்ணால் அமைக்கப்பட்ட கோட்டை ஒன்றும் இருந்திருக்கக் கூடும் என்பதையே காட்டுகின்றன.

யாழ்.மன்னர்களும் தமது கோட்டையாக இதனைப் பயன்படுத்தியிருக்கலாம் என்று வரலாற்று நூல்கள், கிடைத்த சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன-என் றார்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் அண்மையில் இடம் பெற்ற விஞ்ஞான சங்கத்தின் இறுதி நாள் நிகழ்வின் போதே இவற்றைக் கூறினார் பேராசிரியர் புஷ்பரட்ணம். (ம-3)

# சுண்டிக்குளம் கடல் நீரேரியில் இறால் பிடிப்பதற்கு அனுமதி

யாழ்ப்பாணம், ஏப் 17

சுண்டிக்குளம் கடல் நீரேரியில் வளர்க்கப்பட்ட இறால்களைப் பிடிப்பதற்கு தற்போது அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கரைச்சி, கண்டாவளை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த கிளிநொச்சிப் பகுதி மீனவர்களுக்கும், மாமுனை தொடக்கம் சுண்டிக்குளம் வரையான யாழ்ப்பாணப் பகுதி மீனவர்களுக்குமே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

13.6 மில்லியன் ரூபா செலவில் சுண்டிக்குளம் கடல்நீரேரியில் இறால் குஞ்சுகள் வளர்க்கப்பட்டு வந்தன. எனினும் இந்த இறால் குஞ்சுகள் வளரும் வரையான காலப் பகுதியில் அந்த நீரேரியில் கடற்றொழில் செய்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. தற்போது இறால் குஞ்சுகள் முதிர்ச்சி அடைந்துள்ளதால் அவற்றைப் பிடிப்பதற்கும், கடற்றொழில் செய்வதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இயக்கச்சிப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற துறைசார்ந்த அதிகாரிகளின் கலந்துரையாடலின் போது சுண்டிக்குளம் கடல் நீரேரிப் பகுதியில் மீண்டும் கடற்றொழில் செய்ய அனுமதிக்கும் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது. இதில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் கடற்றொழில் திணைக்களங்களின் உதவிப் பணிப்பாளர்களான என். கணேசமூர்த்தி, ஆர். ரவீந்திரன் மற்றும் கடற்றொழில் துறைசார் கிராமிய அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(ந-10-3)

# வீதியில் சண்டை: இருவர் கைது

யாழ்ப்பாணம்,ஏப்.16

யாழ்.மானிப்பாய் வீதி பொம்மைவெளியில் கைகலப்பில் ஈடுபட்ட இரண்டு பேரை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

குறித்த பகுதியைச் சேர்ந்த இருவரும் பொது மக்களுக்கு இடையூறு ஏற்படும் வண்ணம் வாய்த் தர்க்கத்தில் ஈடுபட்டு பின்னர் அது முற்றி கைகலப்பு வரை சென்றனர். இதனைக் கண்ணுற்ற யாழ். பொலிஸார் சந்தேக நபர்கள் இருவரையும் கைது செய்தனர்.

குறித்த சந்தேக நபர்களை பொலிஸார் நேற்று யாழ்.நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராசாவிடம் முன்னிலைப்படுத்தினர். அதன் போது பொது மக்களுக்கு இடையூறு ஏற்படும் வண்ணம் பொது இடத்தில் கைகலப்பில் ஈடுபட்ட இருவரையும் விள்க்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

யாழ். நகரை அண்டிய பகுதிகளில் வீதியில் செல்லும் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படும் வகையில் சண்டைக் காட்சிகள் அரங்கேறுவது வழக்கம். இதன் போது சில வேளைகளில் வழிப்போக்கர்களும் வாங்கிக் கட்டுவதுண்டு. தற்போது இதனைக் கட்டுப்படுத்த பொலிஸார் எடுத்த நடவடிக்கையை பலரும் வரவேற்றுள்ளனர். (ந-4)




### விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஏப்.17

கோப்பாய் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டு விழா இன்று பிற்பகல் ஒரு மணிக்கு அச்சுவேலி கூட்டுறவுச் சங்க மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கோப்பாய் பிரதேச சபைத் தலைவர் ம.பிரதீபன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதி பர் திருமதி இமெல்டா சுகுமார் கலந்துகொள்ளவுள்ளார். (ம-11-14)

## 4ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர் சிறில் சிறிமலா

தோற்றம்
27★07★1982

மறைவு
17★04★2008

கண்ணிமைக்கும் கணப்பொழுதினை விட
கடுகதியாய் கரைந்ததுவோ நான்கு வருடங்கள்
மலரும் நினைவுகளை தேக்கி வைத்து
எவரும் காணாத உலகம் சென்று விட்டாய்
எம் அன்பு மகளே தவிக்கின்றோம் உன் நினைவால்
எமது உயிர் உள்ளவரை உமக்காக வேண்டிநிற்போம்
உம் ஆன்மா சாந்தி பெற............

இல. 01, 2 ஆம் குறுக்குத்தெரு,
குருநகர், யாழ்ப்பாணம். (17091) (45.6.7)

குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



வடமாகாண சுகாதார சேவைகள் மாகாண
பணிப்பாளர் வைத்திய கலாநிதி
திருமதி S.R.யூட்
அவர்களின் அன்புத் தாய்

திருமதி
பிரிசில்லா இராசமலர் யேசுரெத்தினம்

அவர்கள் 15.04.2012 அன்று இறைபதம் அடைந்தார். அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பணிப்பாளர், பணியாளர்கள்,
ஊழியர் நலன்புரிசங்கம்,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம். (வி/925) (2-6-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த அணித் தெரிவுக்கான போட்டியில்

# யாழ்.பல்கலைக்கழகம் தொடர்ந்து முதலிடம்

யாழ்.பல்கலைக்கழக அணி 8 போட்டிகளில் பங்கு பற்றி அதில் 5 போட்டிகளில் வெற்றி பெற்று 42.3 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தை பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம்,ஏப்.17

யாழ் சென்றல் விளையாட்டுக் கழகம் 3ஆவது ஆண்டாக நடத்தி வரும் யாழ் நகரில் சிறந்த கழக அணித் தெரிவுக்கான போட்டியில் யாழ். பல்கலைக் கழக அணி 42.3 புள்ளிகளைப் பெற்று முன்னிலையில் உள்ளது.

யாழ்.மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தின் அனுமதியுடன் நடத்தப்படுகின்ற சுற்றுப் போட்டியில் இது வரை 16 போட்டிகள் நடைபெற்றுள்ளன.

முடிவுற்ற போட்டிகளின் அடிப்படையில் வழங்கப்பட்ட புள்ளகளின் கீழ் யாழ்.பல்கலைக் கழக அணி 8 போட்டிகளில் பங்கு பற்றி அதில் 5 போட்டிகளில் வெற்றி பெற்று 42.3 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தை பெற்றுள்ளது.

யாழ்.ஜொனியன்ஸ் அணி 4 போட்டிகளில் பங்கு பற்றி 3 போட்டிகளில் வெற்றி பெற்று 23.9 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தைப் பெற்றுள்ளது.

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 5 போட்டிகளில் பங்குபற்றி 3 போட்டிகளில் வெற்றி பெற்று 23.2 புள்ளிகளை பெற்று மூன்றாமிடத்தைப் பெற்றுள்ளது.

கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழக அணி 6 போட்டிகளில் பங்குபற்றி 3 போட்டிகளில் வெற்றி பெற்று 24.6 புள்ளிகளைப் பெற்று நான்காவது இடத்தை பெற்றுள்ளது.

யாழ்.சென்றல் விளையாட்டுக் கழக அணி 4 போட்டிகளில் பங்குபற்றி அதில் ஒரு போட்டியில் வெற்றி பெற்று 16.2 புள்ளிகளைப் பெற்று ஐந்தாவது இடத்தை பெற்றுள்ளது.

அரியாலை சென்றல் விளையாட்டுக் கழக அணி 3போட்டியில் பங்குபற்றி வெற்றிகளைப் பெறாததினால் 3.5 புள்ளிகளைப் பெற்று ஆறாவது இடத்திலும், மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக் கழக அணி ஒரு போட்டியில் பங்குபற்றி வெற்றி பெறாத நிலையில் 1.9 புள்ளிகளைப் பெற்று ஏழாவது இடத்தையும் பெற்று உள்ளன. (த-23)



வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட மாதகல் சென்.யோசேப் மகா வித்தியாலய வீராங்கனைகளை வெற்றிக்கிண்ணத்துடன் படத்தில் காணலாம். (த-86)

## வென்றது யாழ். சென்றல்

யாழ்ப்பாணம்,ஏப்.17

யாழ் பல்கலைக் கழக விளையாட்டு அவை 9ஆவது அழைக்கப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தி வந்த 50 பந்து பரிமாற்றங்களை கொண்ட கிரிக்கெட் ஆட்டத் தொடரில் நேற்று முன்தினம் யாழ். பல்கலைக் கழக விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்.சென்றல் விளையாட்டுக் கழக அணி 72 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

யாழ் சென்றல் விளையாட்டுக் கழக அணிக்கும் கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழக அணிக்கும் இடையில் இடம்பெற்ற ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ். சென்றல் விளையாட்டுக் கழக அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

அதற்கமைய யாழ். சென்றல் விளையாட்டுக் கழக அணி 47 பந்துப் பரிமாற்றங்களில் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 242 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் வி.றஜீவ்குமார் 55 ஓட்டங்களையும் சுதர்சஸன் 39 ஓட்டங்களையும், சலிஸ்ரன் 31 ஓட்டங்களையும், றொகான் 26 ஓட்டங்களையும், கபில்தேவ் 18 ஓட்டங்களையும், அன்றூ 18 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழக அணி சார்பாக சாம்பவன் தலா ஒரு இலக்கினை வீழ்த்தினர்.

243 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழக அணி 39.4 ஓவர்கள் நிறைவில் சகல இலக்கினையும் இழந்து 170 ஓட்டங்களை மட்டும் பெற்றது. இதில் ராகுலன் 44 ஓட்டங்களையும் உத்தமன் 32 ஓட்டங்களையும், யனுதாஸ் 25 ஓட்டங்களையும், சாம்பவன் 20 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் யாழ். சென்றல் விளையாட்டுக் கழக அணி சார்பாக விமலகாந் 4 இலக்கினையும் சலிஸ்ரன் 2 இலக்கினையும், றொகான் 2 இலக்கினையும் வீழ்த்தினர். (த-23)

## விசுவமடு ம.வி.சம்பியன்

முல்லைத்தீவு, ஏப் 17

முல்லைத்தீவு வலய பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதுப் பிரிவினருக்கான வலைப்பந்தாட்டத்தில் விசுவமடு வித்தியாலயம் சம்பியனானது . இந்தப் போட்டியின் இறுதியாட்டம் கடந்த வாரம் வற்றாப்பளை மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இந்த இறுதியாட்டத்தில் விசுவமடு மகாவித்தியாலயமும், உடையார் கட்டு மகாவித்தியாலயமும் மோதிக்கொண்டன.

இரு பாதிகள் கொண்ட இந்த இறுதியாட்டத்தில் முதல்பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் அல்ல என்ற அடைப்படையில் மிக வறுவிறுப்பாக விளையாடின. இடைவேளைக்காக ஆட்டம் இடை நிறுத்தப்பட்ட போது விசுவமடு மகாவித்தியாலயம் 8:6 என்ற புள்ளிகள் அடிப்டையில் முன்னிலையில் இருந்தது.

இடைவேளையின் பின்னர் ஆட்டம் மீண்டும் ஆரம்பமாகிய போது விசுவமடு மகாவித்தியாலய வீராங்கனைகளின் கையே மேல் ஓங்கியிருந்தது . இறுதியில் விசுவமடு மகாவித்தியாலயம் மேலும் 13 புள்ளிகளைப் பெற்று21:15 என்ற புள்ளிகள் அடிப்படையில் உடையார்கட்டு மகாவித்தியாலயத்தை வெற்றி கொண்டு சம்பியனானது.

இதனையடுத்து இடம் பெற்று மூன்றாம் இடத்துக்கான போட்டியில் செம்மலை மகாவித்தியாலயமும் முள்ளியவளை வித்தியாணந்தாக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

இதில் செம்மலை மகா வித்தியாலயம் 25:8 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

இந்தப் போட்டியில் வெற்றி பெற்ற முதல் மூன்றுஅணிகளும் அடுத்த கட்ட போட்டியான மாவட்ட போட்டியில் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (400-433)

## தென்மராட்சி வலய மெய்வன்மைப் போட்டி முடிவுகள்

**11 வயது ஆண்கள்**

**75 மீற்றர் ஓட்டம்**

பி.சிந்துஜன் முதலாம் இடம் வரணி வித்தி.

சி.சைலுசன் இரண்டாம் இடம்-போக்கட்டி அ.த.க பாடசாலை.

ப.அபினாத் மூன்றாம் இடம்- மட்டுவில் தெற்கு அ.மி.த.க பாடசாலை.

**100 மீற்றர் ஓட்டம்**

சி.சைலுசன் முதலாம் இடம்-போக்கட்டி ஆ.த.க பாடசாலை.

வா.யாலவன் இரண்டாம் இடம்- கரம்பை குறிச்சி. அ.த.க பாடசாலை.

ப.அபினாத் மூன்றாம் இடம்- மட்டுவில் தெற்கு அ.மி.த.க பாடசாலை.

**நீளம் பாய்தல்**

அ.ஸ்ரெலின் முதலாம் இடம்-சாவகச்சேரி றோ.க. த.க .பாடசாலை.

இ.கிசோபன் இரண்டாம் இடம் மட்டுவில் சந்திர மௌலீச வித்தி.

என்.சதீஸ் கண்ணன் மூன்றாம் இடம்-சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி.

**உயரம் பாய்தல்**

ப.அபினாத் முதலாம் இடம்-மட்டுவில் தெற்கு அ.மி.த.க பாடசாலை

இ.கிசோபன் இரண்டாம் இடம் மட்டுவில் சந்திர மௌலிச வித்தி.

தே.மதிராஜ் மூன்றாம் இடம்-மட்டுவில் அ.த.க. பாடசாலை.

**13 வயது ஆண்கள்**

**100 மீற்றர் ஓட்டம்**

வி.வினோஜன் முதலாம் இடம்-சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

கே.அகிலன் இரண்டாம் இடம்-சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி.

சி.சிலோசன் மூன்றாம் இடம் -வரணி மத்தி.

**200 மீற்றர் ஓட்டம்**

ஜெ.ஜெயக்குமார் முதலாம் இடம்-நாவற்குழி ம.வி

வி.வினோஜன் இரண்டாம் இடம்-சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

ரி.கோபிகன்.மூன்றாம் இடம்-சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

**நீளம் பாய்தல்**

ஜெ.ஜெயக்குமார் முதலாம் இடம்-நாவற்குழி ம.வி

வி.வினோஜன் முதலாம் இடம்-சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

ரி.கோபிகன்.மூன்றாம் இடம்-சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

**உயரம் பாய்தல்**

க.நிவேதிகன் முதலாம் இடம்-வரணி மா.வித்தி.

யா.தனோஜன் இரண்டாம் இடம்- மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தி.

செ.சிவந்தன் மூன்றாம் இடம் கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை.

**4x100 அஞ்சல் ஓட்டம்**

முதலாம் இடம்-சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

இரண்டாம் இடம் -சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி.

மூன்றாம் இடம்-நாவற்குழி ம.வி.

**15 வயது பிரிவு ஆண்கள்**

**100 மீற்றர் ஓட்டம்**

ம.சுபாஸ்கரன் முதலாம் இடம்- மட்டுவில் தெற்கு அ.மி.த.க பாடசாலை.

ரி.ஜக்சன் மனோவா இரண்டாம் இடம்-சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி.

சி.கஜீபன் மூன்றாம் இடம்-சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

**200 மீற்றர் ஓட்டம்**

ம.சுபாஸ்கரன் முதலாம் இடம்- மட்டுவில் தெற்கு அ.மி.த.க பாடசாலை.

அ.அர்ஜூன் இரண்டாம் இடம்-நாவற்குழி ம.வி.

அ.யூட்றொஷான் மூன்றாம் இடம்-நவீல்ட் பாடசாலை

**400 மீற்றர் ஓட்டம்**

ரி.ஜக்சன் மனோவா முதலாமிடம் இடம்-சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி.

என்.றொன்சன் இரண்டாம் இடம்-கைதடி நாவற்குழி அ.த.க பாடசாலை

க.சஜீபன் மூன்றாம் இடம் வரணி ம.வி

**100 மீற்றர் தடை தாண்டல் ஓட்டம்**

ம.சுபாஸ்கரன் முதலாம் இடம்- மட்டுவில் தெற்கு அ.மி.த.க பாடசாலை.

க.கோபிராஜ் இரண்டாம் இடம்- சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

அ.அர்ஜூன் மூன்றாடாம் இடம்-நாவற்குழி ம.வி.

**நீளம் பாய்தல்**

ஜீ.கபில்ராஜ் முதலாம் இடம்-சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

அ.அர்ஜூன் இரண்டாம் இடம்-நாவற்குழி ம.வி.

சி.இளங்குமரன் மூன்றாம் இடம்-சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

**உயரம் பாய்தல்**

சி.இளங்குமரன் முதலாம் இடம்-சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

சி.ஜெனார்த்தன் இரண்டாம் இடம்-சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

க.சஜிபன் மூன்றாம் இடம்-வரணி ம.வி.

**குண்டு போடுதல்**

ச.நிதுசன் முதலாம் இடம் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

இ.தூயவன் இரண்டாம் இடம்-மட்டுவில் கமலாசனி.

அ.யோன் வசிந்தன் மூன்றாம் இடம் யா/உசன் இராமநாதன் மா.வித்தி.

**தட்டெறிதல்**

எம் சுமித்திரன் முதலாம் இடம் மட்டுவில் தெற்கு அ.மி.த.க.பாடசாலை.

ச.நிதுசன் இரண்டாம் இடம் -சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

யு.விதுசன் மூன்றாம் இடம்-சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி.

**ஈட்டி எறிதல்**

கே.லகுசாந் முதலாம் இடம்-சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

க.ரவிச்செல்வம் இரண்டாம் இடம்-கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.

வி.விதுசன்மூன்றாம்இடம்-சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி

**4x100 அஞ்சல் ஓட்டம்**

முதலாம் இடம் -சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

இரண்டாம் இடம்- சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி.

மூன்றாம் இடம் நாவற்குழி ம.வி. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# முழங்கினார் ரஹானே

## மூக்குடைபட்டது பெங்களூர்

ஐந்தாவது ஐ.பி.எல். தொடரின் முதல் சதத்தை ரஹானே விளாசினார். இவர் 103 ஓட்டங்கள் விளாச, ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி 59 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அசத்தல் வெற்றி பெற்றது. பந்து வீச்சு, துடுப்பாட்டத்தில் ஏமாற்றிய பெங்களூர் அணி, சொந்த மண்ணில் சொதப்பியது.

பெங்களூரில் நேற்று முன்தினம் நடந்த ஐ.பி.எல்., தொடரின் 18 ஆவது லீக் ஆட்டத்தில் ராஜஸ்தான் ரோயல்ஸ், பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ராஜஸ்தான் அணித் தலைவர் டிராவிட், துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

ராஜஸ்தான் அணிக்கு வலுவான தொடக்கம் கிடைத்தது. ஒருபக்கம் டிராவிட் அடக்கி வாசிக்க, மறுபக்கம் ரஹானே வெளுத்து வாங்கினார். அரவிந்த் பந்துப் பரிமாற்றத்தில் ஓட்ட மழை பொழிந்தார். வெற்றோரி சுழலில் டிராவிட் 25 ஓட்டங்களுடன் சிக்கினார்.

### ஷா அதிரடி

அடுத்து வந்த ஓவைஸ் ஷா, கெய்லின் பந்துப் பரிமாற்றத்தில் 2 சிக்ஸர், ஒரு பவுண்டரி அடிக்க, ஒட்டுமொத்தமாக 21 ஓட்டங்கள் எடுக்கப்பட்டன. பின்னர் வினய் குமார் பந்துப் பரிமாற்றத்தில் ரஹானே ஒரு சிக்ஸர், ஷா இரண்டு சிக்ஸர், ஒரு பவுண்டரி அடிக்க, மொத்தம் 24 ஓட்டங்கள் எடுக்கப்பட்டன. இவர்களது அதிரடியில் அனுபவ முரளிதரனும் தப்பவில்லை. இவர் வீசிய ஆட்டத்தின் 18 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் ஷா 17 ஓட்டங்கள் எடுத்தார். ஷா 60 ஓட்டங்களுக்கு (5 பவுண்டரி, 5 சிக்ஸர்), சகீர்கான் பந்தில் ஆட்டமிழந்தார். மறு முனையில் அதிரடியின் அரங்கமாக விளங்கிய ரஹானே இறுதி வரையில் ஆட்ட மிழக்காமல் 60 பந்துகளில் 5 சிக்ஸர், 12 பவுண்டரி அடங்க லாக 103 ஓட்டங்களைப் பெற்றார்.

### பங்கஜ் அபாரம்

கடின இலக்கை விரட்டிய பெங்களூர் அணிக்கு போத்தா வீசிய முதல் பந்திலேயே சிக்ஸர் அடித்து மிரட்டினார் அகர்வால். போத்தாவின் அடுத்த பந்துப் பரிமாற்றத்தில் இவர் 2 சிக்ஸர், ஒரு பவுண்டரி அடித்தார். அமித் சிங் பந்தை கெய்ல், சிக்ஸருக்கு அனுப்ப, எதிர்பார்த்த தொடக்கம் கிடைத்தது. இந்த நேரத்தில் ஆட்டத்தின் 5 ஆவது பந்துப் பரிமாற்றத்தை வீசிய பங்கஜ் சிங் திருப்புமுனை ஏற்படுத்தினார். நான்காவது பந்தில் அகர்வாலை 34 ஓட்டங்களுடன் வெளியேற்றினார். 6 ஆவது பந்தில் கெய்லை 8 ஓட்டங்களுடன் 'போல்டாக்கினார்'.

### திரிவேதி கலக்கல்

இதற்கு பின்னர் திரிவேதி அசத்தினார். இவரது வேகத்தில் டிவிலியர்ஸ் 6 ஓட்டங்கள், விராத் ஹோக்லி 22 ஓட்டங்கள், திவாரி 17 ஓட்டங்கள், அணித்தலைவர் வெற்றோரி ஒரு ஓட்டத்துடன் வெளியேறினர். முகமது கைப் 14 ஓட்டங்களுடன் தாக்குப் பிடிக்க முடியாமல் வெளியேறினார். வினய் குமார் (11), சகீர்கான் ஓட்டமெதனையும் பெறாமல் ஏமாற்றினர். பெங்களூர் அணி 19.5 பந்துப் பரிமாற்றங்களில் 136 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்து தோல்வி அடைந்தது. தான் வளர்ந்த மண்ணில் வெற்றிக் கொடி நாட்டிய ராஜஸ்தான் அணித் தலைவர் டிராவிட், தன்னை புறக்கணித்த பெங்களூர் சலஞ்சர்ஸ் நிர்வாகத்துக்கு தக்க பதிலடி கொடுத்தார்.

ஆட்ட நாயகன் விருதை ரஹானே தட்டிச் சென்றார்.



ரஹானே

### இது 'பவுண்டரி ஓவர்'

ரஹானேவுக்கு, பெங்களூர் அணியின் அரவிந்த் மீது என்ன கோபமோ தெரியவில்லை. இவரது பந்துவீச்சை ஒருகை பார்த்தார். ஆட்டத்தின் 14 ஆவது பந்துப் பரிமாற்றத்தை வீசிய இவருக்கு மறக்க முடியாத அடி கொடுத்தார். முதல் பந்தை எல்லைக்குப் பறக்க விட்டார். தொடர்ந்து 2 ஆவது, 3 ஆவது, 4 ஆவது, 5 ஆவது, இறுதியில் 6 ஆவது பந்துகளும் பவுண்டரிகளாகின. இதன் மூலம் ஐ.பி.எல். வரலாற்றில், ஒரே பந்துப் பரிமாற்றத்தில் தொடர்ந்து 6 பவுண்டரிகள் அடித்த முதல் வீரர் என்ற சாதனை படைத்தார். இதன் மூலம் 24 ஓட்டங்கள் எடுக்கப்பட்டன.

### 'ஒரேஞ் தொப்பி'

சதம் அடித்த ரஹானே, இந்தத் தொடரில் அதிக ஓட்டங்கள் எடுத்தவர்களுக்கான 'ஒரேஞ்' நிறத் தொப்பியைப் பெற்றார். இவர் 5 ஆட்டங்களில் 260 ஓட்டங்கள் குவித்துள்ளார். அடுத்த இடத்தில் அதே அணியின் ஓவைஸ் ஷா 204 ஓட்டங்களுடன் உள்ளார். சென்னை வீரர் டு பிளசிஸ் 171 ஓட்டங்களுடன் மூன்றாவது இடத்துக்கு பின் தங்கினார்.

### 10 பந்துப் பரிமாற்றங்களில் 134 ஓட்டங்கள்

ராஜஸ்தான் அணி முதல் 10 பந்துப் பரிமாற்றங்களில் 61 ஓட்டங்கள் தான் எடுத்தது. பின்னர் ரஹானே, ஓவேஸ் ஷா அதிரடியாக விளையாட, கடைசி 10 பந்துப் பரிமாற்றங்களில் 134 ஓட்டங்கள் எடுக்கப்பட்டன. (5)



வெற்றிக் களிப்பில் பஞ்சாப் அழகிகள்.....



# நரைனின் மிரட்டலுக்கும் பணியவில்லை பஞ்சாப்

ஐ.பி.எல். தொடரின் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்கெதிரான நேற்று முன் தினம் நடைபெற்ற ஆட்டத்தில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி 2 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஐந்தாவது ஐ.பி.எல். ரி20 கிரிக்கெட் தொடரின் 17வது லீக் போட்டியில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ், கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிகள் மோதும் இன்றைய போட்டி கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் தொடங்கியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் கவுதம் கம்பீர் களத்தடுப்பை தெரிவு செய்தார்.

இதனையடுத்து கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி துடுப்பெடுத்தாடத் தொடங்கியது.

தொடக்க வீரராகக் களமிறங் கிய அணித்தலைவர் ஆடம் கில்கிறிஸ்ட் 5 ஓட்டங்களில் மனோஜ் திவாரியின் பந்தில் ஆட்டமிழந்தார். அடுத்து களமிறங்கிய ஜோன் [illegible] லேயே சுனில் நரைன் பந்தில் ஆட்ட மிழந்தார்.

மற்றொரு தொடக்க வீரரான மந்தீப் சிங் 38 ஓட்டங்களும், டேவிட் ஹஸ்சி 32 ஓட்டங்களும் எடுத்து ஆட்ட மிழந்தனர். பின்பு களமிறங்கிய [illegible] மஸ்கரனாஸ், பிரவின் குமார் இருவரும் ஓட்டங்கள் எதுவுமின்றி ஆட்ட மிழந்தனர்.



நரைன்

20 பந்துப் பரிமாற்றங்களின் முடிவில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி 9 இலக்குகள் இழப்பிற்கு 134 ஓட்டங்கள் எடுத்தது.

கொல்கத்தா வீரர் சுனில் நரைன் 5 இலக்குகளை கைப் பற்றினார்.

இதனையடுத்து, 135 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி களமிறங்கியது.

தொடக்க வீரர் ஜாக்யூஸ் காலிஸ் 1 ஓட்டங்களில் டோக்ரா பிடியில் ஆட்டமிழந்தார். மற்றொரு தொடக்க வீரரான அணித்தலைவர் கவுதம் கம்பீர் 22 ஓட்டங்களில் மஸ்கரனாஸ் பிடியில் ஆட்டமிழந்தார்.

பின்பு களமிறங்கிய மன்விந்தர் பிஸ்லா 27 ஓட்டங்களும், மனோஜ் திவாரி 20 ஓட்டங்களும் எடுத்து ஆட்ட மிழந்தனர்.

டிபாட்ரா தாஸ் அதிகபட்சமாக 35 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார்.

இறுதியில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 132 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து தோல்வியடைந்தது.

பஞ்சாப் வீரர் பியுஸ் சாவ்லா மூன்று இலக்குகளையும், பார்கவ் பாட் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி 2 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

அபாரமாகப் பந்து வீசிக் கலக்கிய கொல்கத்தா வீரர் சுனில் நரைன் ஆட்டநாயகனாகத் தெரிவானார். (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸி. ஆரம்பம் ஆமை வேகம் கை கொடுத்தார் வொட்ஸன்



மேற்கிந்தியத்தீவுகளுக்கும், ஆஸ்திரேலிய அணிக்குமிடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் முதல் நாளில் ஆஸ்திரேலிய அணி மெதுவாகவே ஓட்டங்களைச் சேர்த்தது. வொட்ஸன் அரைச்சதம் அடித்ததுடன், அணித்தலைவர் மைக்கல் கிளார்க் கை கொடுக்க சிறப்பான ஓட்ட எண்ணிகையை நேற்றைய நாளின் முடிவில் பெற்றுக் கொண்டுள்ளது.

ஆஸ்திரேலிய அணி, மேற்கிந்தியத்தீவுகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது. முதலாவது டெஸ்டில் ஆஸ்திரேலிய அணி வெற்றி பெற்றுள்ள நிலையில் இரண்டாவது டெஸ்ட் ரினினாட்டில் நேற்று திங்கட் கிழமை ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸி. முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

முதலாவது பந்துப் பரிமாற்றத்திலேயே வோர்ணர் ஆட்டமிழந்ததாக அறிவிக்கப்பட்டது. இந்த ஆட்டமிழப்பு அவரது துடுப்பில் பட்ட பந்தை இலக்குக் காப்பாளர் பிடி எடுத்ததாலேயே ஆட்டமிழந்ததாக நடுவர் எரேஸ்மஸ் அறிவித்தார். ஆனால் 'முடிவு மீளாய்வில்' பந்து கால் காப்பில் பட்டுச் சென்றது தெளிவானதால் சமி 'எல்.பி.டபிள்யூ' மூன்றாம் நடுவருக்கு கோரிக்கை விடுத்தார். மூன்றாம் நடுவரின் தீர்ப்பில் கள நடுவரின் தீர்ப்பு எதுவோ அதற்கு அமைவானது என்று தெரிவிக்கப்பட்டது. கள நடுவர் பிடியெடுப்புக்கே ஆட்டமிழப்பு வழங்கியிருந்ததால், சமி தனது கோரிக்கையை வாபஸ் பெற வோர்ணர் தொடர்ந்து துடுப்பெடுத்தாடினார்.

வோர்ணர் தப்பித்தாலும் நீண்ட நேரம் களத்தில் நிலைத்திருக்காமல் 29 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்து வெளியேறினார். தொடர்ந்து வொட்ஸன் நுழைய அணி 65 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் எட் கோவனின் இலக்கை இழந்தது. அதன் பின்னர் களம் புகுந்தார் பொண்டிங். இவர் தொடர்ச்சியாக சொதப்பி வரும் நிலையில் இந்த ஆட்டத்தில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட போதும் 26 பந்துகள் களத்தில் தாக்குப் பிடித்து 7 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். அதன் பின்னர் அணித்தலைவர் மைக்கல் கிளார்க், வொட்ஸன் ஜோடி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி ஆஸி. அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர். நிலைத்து நின்றாடி இருவரும் 84 ஓட்டங்களை நான்காவது இலக்குக்காக பகிர்ந்தனர். கிளார்க் 45 ஓட்டங்களுடன் வெளியேறினார். சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய வொட்ஸன் 18



ஆவது அரைச்சதம் கடந்த நிலையில் ஆட்டமிழக்க ஆஸி. 178 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்தது.

அதன் பின்னர் நேற்றைய ஆட்டத்தின் நிறைவு வரையில் மைக் ஹஸி, மத்தியூ வேட் இருவரும் சிறப்பாக துடுப்பெடுத்தாடி அணியின் மேலதிக இலக்கு இழப்பினைத் தவிர்த்தனர். ஆட்டநேர நிறைவில் ஆஸ்திரேலிய அணி 5 இலக்குகளை இழந்து 208 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. மைக் ஹஸி 26, மத்தியூ வேட் 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது களத்தில் உள்ளனர். றோச், சிலின்போர்ட் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

(ரு-5)


## காப்புறுதித்துறையில் வேலைவாய்ப்பு

காப்புறுதித்துறையில் அனுபவம் உள்ள/ அறிவுள்ளவர்களுக்கான பகுதிநேர வேலைவாய்ப்பு

ஆர்வமுடையவர்கள் சுயவிவரக் கோவையை நேரில்/ தபாலில்/ மின்னஞ்சலில் 20ஆம் திகதிக்கு முன்னர் சேர்ப்பிக்கவும்.

Onlineuthayan,
359, Kasthuriyar Road, Jaffna.
email: it@uthayan.com
T.P 0215672222

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

Bajaj Discover 135, Super Cup 90 விற்பனைக்குண்டு

தொ.பே. 0783258808

## வேலையாள்கள் தேவை

சேவிஸ் ஸ்ரேசன் வேலை தெரிந்த ஊழியர்கள் தேவை.

தொடர்பு:- 0213008977

## பணிநிலை வெற்றிடம்

கணக்கியல் உதவியாளர் (கணினி அனுபவம் உடையோர் விரும்பத்தக்கது).தகுதி உடையோர் நேரில் சமுகம் தரவும்.

தொடர்பு:- இல.74, ராஜா பிளாசா,
பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

## லாவா வைத்தியசாலை-கல்வியங்காடு

செங்குந்தா வீதி (செங்குந்தா இந்துக்கல்லூரி அருகில்)

யாழ் போதனா வைத்தியசாலை வைத்தியர்களின் சேவையில்
- பொது வைத்தியம்
- குழந்தை வைத்தியம்
- தோல் வைத்தியம்
- பெண் நோயியல் வைத்தியம்

நீரிழிவு நோயாளிகளுக்கான மாதாந்த கிளினிக் வசதிகள்.
Scan உட்பட சகல விதமான ஆய்வுகூட சேவைகளும்.

Lava Hospitals LH Your Health. Our Priority.

பார்வையிடும் நேரம் : காலை 6.30 - 8.00
(தினசரி) மாலை 4.00 - 8.00

## SAAMSON ENGLISH 3 மாத சனி, ஞாயிறு பயிற்சிநெறி

கொழும்பில் சிலகாலம் தங்கிவிட்டு வருபவர்கள், சிங்களத்தில் சரளமாக பேசுவதை நீங்கள் பார்த்திருக்கிறீங்களா? அந்நபர் சில வேளை 5ஆம் வகுப்புக் கூடப் படிக்காதவராக இருக்கலாம்.

உலகில் எந்தவொரு மொழியைப் பழகுவதற்கும் "தகைமை" தேவையில்லை பலரும் ஆங்கிலத்தை பிழையான வழியில் கற்றுக்கொண்டதனாலேயே ஆங்கிலம் பழகுவதை இன்றும் வெறுக்கின்றனர்

எமது ஆங்கிலப் பயிற்சி முற்றுமுழுதாக வேறுபட்ட ஒரு முறையிலானதாகும்.

கரும்பலகை, வெண்கட்டி, கணினி புத்தகம், CD எதுவுமின்றி எமது ஆசிரியர்கள் உங்களுடனிருந்து ஆங்கில வசன அமைப்பு, பிரயோகம், இணைக்கும் சொல், சொற்றொடர் என்பவற்றை பேச்சுப்பயிற்சியின் மூலம் உங்கள் மனதில் பதியவைக்கும் ஒரு "Practical" ஆன பயிற்சியாகும்.

இது நீங்கள் சிறு குழந்தையாக இருந்தபோது (2-4 வயது) எப்படி உங்கள் பெற்றோர் பேசியதை அவதானித்து தமிழைப்பேசப்பழகினீர்களோ அதே போலானதாகும்.

கடந்த ஆண்டில் மாத்திரம் 2000 இற்கும் அதிகமானவர்கள் பயிற்சிபெற்ற எமது நிறுவனத்தில் பயிற்சி பெற விரும்பும் இளைஞர், யுவதிகள், தொழில்தேடுவோர், A/L, O/L பரீட்சை எழுதியோர் தொழில்புரிவோர், வெளிநாடு செல்லவிருப்போர், பாடசாலை உயர்கல்வி மாணவர்கள் 22.04.2012 இற்கு முன் நேரடியாக பதிவு செய்யுங்கள் (எமது நிறுவனம் வாரத்தில் ஏழு நாள்களும் திறந்திருக்கும்.)

சனி, ஞாயிறு பிரிவுகள்
பிரிவு I 08 - 10 பிரிவு III 01 - 03
பிரிவு II 10 - 12 பிரிவு IV 03 - 05




SAAMSON ENGLISH 279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்ப்பாணம்.
தொ.பே. 0776214567


## மரண அறிவித்தல்கள்

### பெனடிக்ற் அஞ்சலோ ரெறன்ஸ்



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பெனடிக்ற் அஞ்சலோ ரெறன்ஸ் (லச்சு) நேற்று முன்தினம் (15.04.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் பெனடிக்ற்-பெர்ணடேற் தம்பதியரின் அன்பு மகனும், திரேசம்மாவின் பெறாமகனும், அனற்றஜனியின் அன்புக் கணவரும், செல்வின், ஸ்ரீபன், அட்றியா ஆகியோரின் பாசமிகு தகப்பனும், அனஸ்ரின் கிறைன்ஸ் (ஹொலன்ட்), அலக்சியா ரஞ்சினி (சூரியா, லண்டன்), அலன்ரைன், அனித்தா நிரஞ்சினி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், கிருசாந்தி (ஹொலன்ட்), கிறிஸ்தோப்பர் (லண்டன்), மார்க் எடிசன், சிசிலியா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், சாமுவேல், றொய்சின் ஆகியோரின் சித்தப்பாவும், மரின்சாரா, டான்சரோன் ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை நிகழ்வுகள் இன்று (17.04.2012) செவ்வாய்க்கிழமை பி.ப. 3 மணிக்கு புனித மரியன்னை பேராலயத்தில் நடைபெற்று பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

138, டேவிற் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

### பொன்னையா இராமநாதன்

(தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை வடக்கு, கிழக்கு மாகாண முன்னாள் பணிப்பாளர்)



சரவணை மேற்கு, வேலணையைப் பிறப்பிடமாகவும், சுண்டுக்குளி விதானையார் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா இராமநாதன் நேற்று (16.04.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமநாதன் பிறேமலா தேவியின் அன்புக் கணவரும், யுகேந்திரன் (பொறியியல் பீடம்-இலங்கை திறந்த பல்கலைக்கழகம்), தனுசன் (பரியோவான் கல்லூரி, 2014 உயர்தரம்-கணிதப்பிரிவு), தனுகரன் (பரியோவன் கல்லூரி-தரம் 10) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான பொன்னையா-கண்மணிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற செல்வரட்ணம் மற்றும் ஜெயலக்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.04.2012) செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

39, விதானையார் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



பேரம்பலம் சபாநாயகம்

நவாலி கிழக்கு மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட **பேரம்பலம் சபாநாயகம் 14/04/2012** சனிக்கிழமை அன்று இறைவனடி எய்தினார். அன்னார் காலஞ்சென்ற பேரம்பலம் சின்னம்மா தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற மனோன்மணியின் அன்புக் கணவரும், பொன்னையா முத்துப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற திலகவதி, கனகாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரனும், அனுசியா, டிவாக்கர், சுதாகர் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவநாதன், தர்மினி, ஷாமினி ஆகியோரின் மாமனாரும், திவ்யன், வைஷ்ணவி, ஆகியோரின் அன்பு அப்பப்பாவும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் **18/04/2012 புதன்கிழமையன்று** மு.ப.10.00 மணியளவில் கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல் : பிள்ளைகள்**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்[illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.04.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org